# இளவேனில்



**கேசி தமிழ் மன்றம்**

இதழ் 25 - தை 2024

Ilavenil - Casey Tamil Manram Inc - ISSN 2200-789X

**இளவேனில்**

*இதழ் 25 – தை 2024*
© கேசி தமிழ் மன்றம்

**ஆசிரியர் குழு**
சாந்தி சிவகுமார்
தாமரை மதியழகன்
ஜேகே
கேதா
ச. சத்தியன்
சரணியா சத்தியன்

**அட்டைப்பட செயற்கை நுண்ணறிவு வடிவமைப்பு**
பிரவீணா சந்திரநாயகம்

**உள் வடிவமைப்பு**
க. பார்த்தீபன்
ச. துவாரகன்
சரணியா சத்தியன்

---

***Ilavenil***

*Issue 25 – January 2024*
*© Casey Tamil Manram Inc*
*ISSN 2200-789X*

***Editorial Team***
*Shanthi Sivakumar*
*Thamarai Mathiyazhakan*
*JK*
*Ketha*
*Sathiyan S*
*Saraniyah S*

***Cover AI Illustration***
*Braveena Santhiranayakam*

***Design and Layout***
*Partheepan G*
*Thuvarahan C*
*Saraniyah S*

editor@caseytamilmanram.org.au

## பொருளடக்கம்

ஆசிரியர் தலையங்கம் - கரம் கோர்ப்போம் ........ 4

Think on the bright side ⛅ ........ 6

இரணிய நெஞ்சம் ........ 8

உன்னால் முடியும் ........ 10

தமிழரின் பாரம்பரியத் தைத்திங்கள் கொண்டாட்டம் ........ 12

கேபாப் ........ 18

வண்ணம் ........ 25

i know why some caged birds sing ........ 28

தலைமுறை இடைவெளிகளைப் புரிந்துகொள்ளுதல் ........ 29

Minding the Gap ........ 29

இளையோர் சந்திப்பு ........ 36

முரண்பாடுகள் ........ 38

New Beginnings - Thinking about the Mind ........ 41

காலத்தைக் கடந்த ஓவியன் ........ 44

எனது இசைப்பயணம் ........ 48

தனிமை ஒரு தொற்றுநோய் ........ 51

குடும்ப வன்முறை ........ 53

சில நேரங்களில் சில இடப்பெயர்வுகள் ........ 55

யாரோடுதான் ........ 60

நகர்வு ........ 65

என் வயிறு ........ 68

## ஆசிரியர் தலையங்கம் - கரம் கோர்ப்போம்

மறுபடியும் ஒரு புத்தாண்டில் வாசகர்களோடு உரையாட சந்தர்ப்பம் கிடைப்பதில் அகம் மகிழ்கிறோம்.

அவுஸ்திரேலியத் தமிழ் சமூகத்தின் வாழ்வையும் சிந்தைப் போக்குகளையும் இம்முறையும் இளவேனில் தாங்கி வந்திருக்கிறது. அறுபதைக் கடந்த பெரியோர் முதல் பத்து வயது சிறுவர்வரை தம் எண்ணங்களை ஆழமாகவும் ஆணித்தரமாகவும் பிரதிபலிக்கின்ற சூழலை இளவேனில் ஏற்படுத்த முயற்சிக்கிறது. அதன்வழி நம் சமூகத்தின் விளை சிந்தனையாக அல்லது விளை சிந்தனைகளுள் முக்கியமானதாக இளவேனில் வெளிவந்துள்ளதாக நாம் நம்புகிறோம்.

தேசிய, உள்நாட்டு அரசுகள் கொள்கை முடிவுகளையும் மக்கள் செயற்திட்டங்களையும் முன்னெடுக்கும்போது மக்களது குரல்களைக் கேட்கவேண்டும் என்பது சனநாயகத்தின் முக்கிய புள்ளிகளுள் ஒன்று. அதற்காக அவர்கள் பல்கலைக்கழகங்களுக்கூடாக சமூக ஆய்வுகளை மேற்கொள்வர். சமூகக் கூட்டங்களை ஒழுங்கமைப்பர். மக்களோடு தொடர்ந்து பேசிக்கொண்டேயிருப்பர். செவிமடுப்பதும் கருத்துகளை உள்வாங்கலும் இச்செயற்பாட்டின் தலையாய அம்சமாகும்.

இளவேனில் சஞ்சிகை அவ்வகையான ஒரு செயற்பாட்டையே தமிழ்ச் சூழல் சார்ந்து முன்னெடுக்க முயற்சி செய்கிறது. சிறுவர், பதின்மத்தவர், இளையோர், நடுத்தர வயதினர், பெற்றோர், முதியோர் என நம் சமூகத்தின் அங்கத்தினர் அனைவருடனும் பேசி அவர்களுடைய எண்ணங்களைப் பதிவு செய்ய முயற்சி செய்கிறோம். அவர்களது உள்ளக்கிடக்கைகளை வெளிக்கொணர வைக்கிறோம். கட்டுரையாக, கவிதையாக, ஆக்க இலக்கியப் படைப்புகளாக பல தளங்களில் அவை பரந்து விரிவதைக் கண்டு மகிழ்கிறோம். இவ்வகை ஆக்கங்களை வெறுமனே அப்படியே வெளியிடாமல், பல்கலைக்கழக முயற்சிகளைத் தழுவி, படைப்பாளிகளுடன் மறு வாசிப்புச் செய்து, கேள்விகளைக் கேட்டு, சக மதிப்பாய்வினை (peer review) மேற்கொண்டு, திருத்தங்களைக் கோருகிறோம். அவற்றினூடாக ஆக்கங்களின் ஆழமும் நேர்மையும் உண்மைத்தன்மையும் அதிகமாகிறது என்பதைக் கண்கூடாகவே காண்கிறோம்.

அதனால்தான் இளவேனில் சஞ்சிகையை வெறுமனே பிறிதொரு சஞ்சிகையாகக் கடந்துபோக வேண்டாமென நாம் வாசகப் பெருமக்களிடம் வேண்டி நிற்கிறோம். இது நம்மிடையே எழுந்த, நாம் கேட்கத் தவறிய, அல்லது கேட்க விரும்பாத குரல்களைக் கொண்ட இதழ். நம் இளையோர் நமக்கான செய்திகளை இங்கே கொடுத்திருக்கிறார்கள். முதியோர் இறைஞ்சியிருக்கிறார்கள். பெற்றோரின் அசூசையும் ஏக்கமும் இங்கு உண்டு. சிறுவரின் பொருமலும் உண்டு. அரசுகள் செவிமடுப்பதுபோல நம் மக்களும், குறிப்பாக தமிழ்ச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் பெருந்தொண்டர்களும் இவ்விதழை வாசித்தால் நாம் பெருமகிழ்வு எய்துவோம்.

மார்கரட் மீட் (Margaret Mead) என்கின்ற மிகப் பிரபலமான அமெரிக்க மானுடவியலாளரின் கூற்று இது.

“Never doubt that a small group of thoughtful committed individuals can change the world. In fact, it's the only thing that ever has”

“சந்தேகமே வேண்டாம். விடா முயற்சியும் சிந்தனைக்கூர்மையும் உள்ள சிறிய குழுவினரால் ஒரு சமூக மாற்றத்தையே ஏற்படுத்த முடியும். சொல்லப்போனால் சமூக மாற்றங்கள் அத்தனையும் அப்படியே நிகழ்ந்தன”

இக்கூற்று நம் தமிழ்ச் சமூகத்துக்கும் சாலப்பொருந்தும் அல்லவா. நம்மிலும் பெருமுயற்சி எடுத்து தமிழ்ச் செயற்பாட்டுக்காகத் தம் உழைப்பை செலவிடுபவர்கள் ஒரு சிறிய குழுவினர்தான். அவர்களுக்கு நாம் துணை நிற்போம். அவர்களோடு இணைந்து செயற்படுவோம். அவர்களின் குரலை நம் மக்களுக்கும் நம் மக்களின் சிந்தைகளை அவர்களுக்கும் கொண்டுசெல்லும் பாலமாக இளவேனில் செயல்படும் என்று நம்பிக்கை கொள்வோம்.

கரம் கோர்ப்போம்.

அன்புடன்,

இளவேனில்

ஆசிரியர் குழு

## Think on the bright side ⛅



*Aran Ketharasarma (10 years old)*

There was a boy called Mithulan who lived in a family of four with a younger brother called Rajesh. He and his brother never got along. He was 11 years old while his brother was 9. Mithulan was an average student. While getting pushed around to learn from his அம்மா, he played cricket and soccer at school and played cricket for a club. Though he had an enjoyable life with sports and studies, he lived a very unlucky and uneventful life.

One day, Mithulan was walking home from school with his brother and unsurprisingly, he missed the bus and had to walk 3 miles. And of course, with his unlucky life, he stepped in dog poop. His brother then exclaimed, "Ha ha, loser." So on the way home, he walked with one shoe on while carrying the other. When he got home, he showed his mother his shoes.



His mother then shouted, "இந்தப் பொடியன்!"

Mithulan and Rajesh were playing a video game and Rajesh asked his mother what was for dinner.

His mum replied, "ஊத்தப்பம்" "Ew!" Rajesh replied, "Isn't that like dirty அப்பம் or something?"

"No, it's like தோசை but more delicious"

The next day, in history Mithulan finished his exam and fell asleep, accidentally. The teacher woke him up and said that he would get an automatic zero. Mithulan, shocked by this information, started stressfully thinking, "அம்மா என்ன சொல்ல போறா? அப்பா என்ன சொல்ல போறார்?"

When he got home from school, he had to tell his mum what he got in his history test. When his mother heard this information, she said that Mithulan would have no video games for a month. Then Mithulan explained how he got a zero. "I finished my exam early and I thought I did really well. But because you kept me up till 1 am to make me finish my science fair diorama, I fell asleep during class. That's how I got an automatic zero".

Then, Mithulan's mother apologised and said that he could have screen time and next time she wouldn't keep him up so late, and then she went to sleep.

That night, Mithulan was showering and was almost about to cry because pretty much everything in his life was unlucky. But then somehow, he thought to himself, "From now on, I'm going to think about everything in a positive manner. Next time, I'm going to watch ahead for dog poop, and study for my exams."

The next day, in the early morning at five o'clock Mithulan heard Rajesh crying. He went to his brother's bedroom and asked what was wrong. He said his throat was sore and he would be delighted if his brother could get him some hot milk. Mithulan did as told and gave Rajesh some hot milk. Rajesh was extremely happy and the two became friends.

On their way to school, Mithulan did not step in dog poop but Rajesh did, and Rajesh was finally experiencing what Mithulan had been through a lot of times.

## இரணிய நெஞ்சம்



*கேதா*

மூவுலகும் வென்று முடிவிலாப் புகழ் கண்டு
ஈடெனக்கு யார் இனி என்று இறுமாந்து
அகிலமெல்லாம் ஆள்வதற்காய் தான் வென்ற
அரியணையில் வந்தமர்ந்தான் திதி மைந்தன்

நெஞ்சினிலே நிறைவில்லை நித்திரையும் வரவில்லை
சொர்க்கம் அவன் காலடியில் சொந்தமெனக் கிடந்தாலும்
சுகித்து மயங்கிட சுவை எதிலும் நாட்டமில்லை
இமயத்தைப் பெயர்த்தவனின் இதயத்தில் இன்பமில்லை

இத்தனைக்கும் காரணம் யார்? எதிரியென்று யாருமில்லை.
இந்திரனோ இவன் அடிமை தேவர்களோ சேவகர்கள்.
கண்ணசைத்தால் போதும் களம் வெல்லும் போர்ப்படைகள்
சாவையும் வென்றவனின் சங்கடத்தின் மூலம் என்ன

மாற்றானை வெல்லும் மாண்பறிந்த மன்னவனோ
தன் மகனின் மனம் வெல்ல தக்கதொரு வழியறியான்
குலவிளக்காய்ப் பெற்ற மகன் தன் குலமழித்த கொடியவனை
தினம் துதித்தல் கண்டு நிதம் பதை பதைத்தான்

அன்பாய் உரைத்தான். அசையவில்லை மகன் நெஞ்சம்
கண்டித்தான், தண்டித்தான் மனம் நொந்து நிந்தித்தான்
கடும் விதிகள் போட்டுத் தன் மகனைத் தானே சிறைவைத்தான்
கருணையோடு கொஞ்சினான் கரம் பிடித்துக் கெஞ்சினான்

காளை மனம் அலைபாயக் கன்றின் மனம் இளகவில்லை
தந்தை மொழி மந்திரமாய்ப் பிஞ்சு நெஞ்சு ஏற்கவில்லை
சுற்றி நின்று எல்லோரும் துதிப்பதிலும் மயங்கவில்லை
களத்தினிலே தந்தையைப்போல் அகத்தினிலே மகன் நின்றான்

காலடியைத் துதிப்பதற்கே காத்திருப்போர் பலரிருக்க
கண்ணோக்கி சலனமின்றிக் கடும் வாதம் புரிகின்றான்
அப்பனவன் ஆற்றலினை துச்சமென மதித்துவிட்டு
அற்பன் நாரணனை அற்புதம் என்றேத்துகிறான்

வெண்றிகளைக் குவித்த என் வீரம் இவன் உணரவில்லை

உறுதவத்தால் பிரம்மனிடம் பெற்ற வரம் புரியவில்லை
இடையறாது உழைத்து இறைவனென்று ஆனவனே அருகிருக்க
அலைகடலில் அலைபவனை ஆண்டவனாய்த் துதிக்கின்றான்

இத்தனையும் பெற்றெடுக்கப் பட்ட துன்பம் தெரியவில்லை
தந்தை தொடாத் தொலைவிற்குத் தான் போகும் துடிப்பும் இல்லை
இவன்போல எனை யாரும் தலை குனிய வைத்ததில்லை
கொந்தளித்தான் கோன் குமுறுகிற எரிமலையாய்



ஏது சரி ஏது பிழை இரணியனோ அறியவில்லை
பிடிவாதம் கண்டு பெரும் கோபக்கனல் மூளும்
சினங்கொண்டு தண்டிக்க மகன் விழியோரம் நீரோடும்
எண்திசையும் களம் வென்றோன் இடிந்துபோய்க் கிடந்தான்

உள்ளிருக்கப் பிடிக்கவில்லை வெளியில் செல்ல மனமுமில்லை
வழியேதும் தெரியாமல் வாசலிலே வந்திருந்தான்
தன் மகனை வழிப்படுத்தும் தாற்பரியம் தெரியாமல்
சலனமுற்ற நெஞ்சோடு சாய்ந்திருந்தான் அரக்கர்கோன்

வாழ்வதிலே நாட்டமில்லை வாழ்ந்து ஒரு பயனுமில்லை
வெல்வதற்கும் யாருமில்லை வென்றாலும் பயனுமில்லை
மைந்தனவன் மனந்தன்னை வெல்லும் வழி தெரியாமல்
மாய்ந்துவிடல் மேலென்றால் மாய்ப்பதற்கும் யாருமில்லை

ஓயாத உறுதவத்தால் வாங்கிய சாகாவரமே
இப்போது தாளாத பெரும் சுமையாய்க் கனக்கிறது
தூண்போல நம்பியவை பொடிப்பொடியாய்ப் போய்விட
பேய்போல பல எண்ணம் அவன் நெஞ்சைக் கிழிக்கிறது

அமரரையும் அசுரரரையும் ஆண்ட பேரரசன்
ஆருயிராய்ப் பெற்றமகன் அகம் வெல்ல முடியாமல்
தான் என்ற பெருமையெல்லாம் தவிடுபொடி ஆகிவிட
வேரறுந்த விருட்சமென வீழ்ந்தான் தன்னிலத்தில்

## உன்னால் முடியும்

*ஹரிணி திவாகர் (13 வயது)*



அன்று சனிக்கிழமை மாலை நேரம். சூரியன் மெல்ல மெல்ல மறையத் தொடங்கியது. வானம் கண்ணைக் கவரும் வண்ணங்களால் சூழ்ந்து அழகாகக் காட்சியளித்தது. பறவைகள் தங்கள் இனிமையான குரலில் பாட்டுப் பாடின.

ஆறு வயதுச் சிறுவனான வருண் அவனுக்கு மிகவும் பிடித்த ஆலமரத்தடியில் இயற்கை அழகை ரசித்துக்கொண்டிருந்தான். வருணுடன் எப்பொழுதும் கூடவே இருக்கும் வெள்ளைக் காகிதமும் பென்சிலும் அவன் அருகே இருந்தது. வருண் சிறுவயதிலிருந்தே தான் ஒரு சிறந்த ஓவியராக வரவேண்டும் என்று ஆசைப்பட்டான். தனது ஓவியப்படைப்புக்களை உலகமே பார்த்து வியக்க வேண்டும் என்று கனவு கண்டான். ஆனால் ஒரே ஒரு பிரச்சனை என்னவென்றால் வருணால் நேர்த்தியாக வரைய முடியவில்லை. வருணுக்கு வண்ண வண்ண அழகான ஓவியங்களை வரைய வேண்டும் என்ற எண்ணம் மனத்தில் தோன்றும். ஆனால் அந்த அழகான எண்ணத்தில் தோன்றிய ஓவியத்தை அவனால் நேர்த்தியாக வரைய முடியவில்லை என்று வருத்தப்பட்டான்.

மறுநாள் வருண் தனது பெற்றோரிடம் சென்று ஓவியத்தின் மேல் தனக்குள்ள ஆர்வத்தையும் அவனது லட்சியத்தையும் பற்றிக் கூறினான். ஆனால் தன்னால் அந்த லட்சியத்தை அடைய முடியாமல் போய்விடுமோ என்று வருத்தப்பட்டான். அப்படியானால் தான் தனது சிறந்த ஓவியராக வேண்டும் என்ற கனவை மறந்துவிட வேண்டுமோ என்று மிகுந்த வருத்தத்துடன் அவனது பெற்றோரிடம் கேட்டான். “ஓ, தயவு செய்து உனது இலட்சியக் கனவுகளை விட்டுவிடாதே, வருண். அர்ப்பணிப்பு இல்லாமல் எந்த இலக்கையும் உன்னால் அடைய முடியாது. உனது விருப்பம் போலவே நீ சிறந்த ஓவியராக வேண்டும் என்று நினைக்கிறேன், வருண். ஆனால் நீ தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் வைக்க வேண்டும்,” என்று அவனது தாயார் கூறினார்.

பெற்றோர் கூறிய அறிவுரை வருணை ஆழமாகச் சிந்திக்க வைத்தது. வருண் தனது லட்சியத்தை நிறைவேற்றத்தான் தொடர்ந்து விடாமுயற்சியுடன் பயிற்சி செய்யவேண்டும் என்று முடிவு செய்தான். மறுநாள் பாடசாலையில் ஓவிய ஆசிரியர் திரு சீலன் அவர்களிடம் சென்று சிறந்த ஓவியராக வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனை கேட்டான். “உன் இலக்கை அடையும் உன் லட்சியத்தை நான் பாராட்டுகிறேன், வருண். நிச்சயமாக! நன்றாக வரைவதற்குத் தேவையான அனைத்து அடிப்படைகளையும், நுணுக்கங்களையும் நான் உனக்குக் கற்றுத் தருகிறேன்,” என்று திரு சீலன் சிரித்துக் கொண்டே கூறினார்.



தினமும், மதிய உணவு இடைவேளையில், ஓவிய ஆசிரியரை வருண் சந்தித்து தான் வீட்டில் வரைந்த ஓவியங்களையும் அந்த ஓவியங்களை எவ்வாறு மிகவும் நேர்த்தியாக வரையலாம் என்றும் ஆசிரியரிடம் ஆலோசனை கேட்டு மீண்டும் மீண்டும் வரைந்து பார்ப்பான். வருணின் ஓவியம் கற்கும் திறன் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருந்தது. நாட்கள் வாரங்களாகின்றன. வாரங்கள் மாதங்களாகின. மாதங்கள் ஒரு வருடம் ஆனது.

அன்று வெள்ளிக்கிழமை பாடசாலையின் ஆண்டிறுதி நாள் என்பதால் அனைத்து வகுப்புக்களும் பாடசாலை ஆண்டிறுதி நாளைக் கொண்டாட முடிவு செய்தார்கள். ஓவிய ஆசிரியரான திரு சீலன் அவர்கள் அன்று வருணின் வகுப்பிற்கான ஓவியப் போட்டியை நடத்த முடிவு செய்திருந்தார். திரு சீலன் அவர்கள் முழு வகுப்பினருக்கும் ஏதாவது ஒன்றை அல்லது ஆண்டு முழுவதும் அவர்களுக்கு முன்மாதிரியாக இருந்த ஒருவரை வரையும்படி கூறினார்.

ஓவியம் வரைவதில் தான் வளர்ந்த திறமையைத் தனது வகுப்பில் காட்டுவதற்கான சிறந்த நேரம் இது என்பதை வருண் உணர்ந்தான். வருண் ஒரு ஆழமான மூச்சை எடுத்து ஓவியம் வரைவதற்கு தன்னை தயார்படுத்தினான். வருண் தனக்கு முன்மாதிரியாக இருந்த ஒருவரின் படத்தை வரையத் தொடங்கினான். அவனிற்குச் சிறந்த வழிகாட்டியாக இருந்த ஒருவரின் படமே அந்த ஓவியம். அந்த ஓவியத்தின் ஒவ்வொரு நுணுக்கமான திறனும் அவன் திரு சீலன் அவர்களிடம் கற்றுக்கொண்டவையே. வரைவதற்கு கொடுக்கப்பட்ட முப்பது நிமிடங்கள் முடிவுக்கு வந்தது. வருண் வரைந்த ஓவியம் அவனது சிறந்த வழிகாட்டியான ஓவிய ஆசிரியர் திரு சீலன் அவர்களின் அழகான ஓவியம். சிரித்த முகத்துடன் தன்னை மிகவும் அழகாக வரைந்த வருணை திரு சீலன் அவர்கள் பாராட்டினார். ‘‘உன் திறமையில் நீ பெரிய முன்னேற்றம் காட்டியுள்ளாய் வருண். நான் உன்னை நினைத்து மிகவும் பெருமையடைகின்றேன்." என்று திரு சீலன் அவர்கள் வருணைப் பாராட்டினார்.

வருண் தனது உலகமே போற்றும் ஓவியராக வேண்டும் என்ற லட்சியத்தை நோக்கித் தொடர்ந்து பயணித்தான். முயன்றால் முடியாதது எதுவும் இல்லை என்று அவன் நன்கு உணர்ந்து கொண்டான்.

## தமிழரின் பாரம்பரியத் தைத்திங்கள் கொண்டாட்டம்



*பாடும்மீன், சு. ஸ்ரீகந்தராசா*

தைப் பொங்கல் பண்டிகை தமிழரின் பண்டிகை. அது ஒரு சமயம் சார்ந்த பண்டிகை அல்ல. அது தமிழ் இனம் சார்ந்த பண்டிகை. அவ்வாறே தைப் புத்தாண்டும் எந்த மதத்திற்கும் உரியதல்ல. அது தமிழ் இனத்திற்குரியது.

வைதீக சமயங்களைச் சேர்ந்தவர்களாயினும், அவைதீக சமயங்களைப் பின்பற்றுபவர்களாயினும், இஸ்லாம், கிறீத்தவம் முதலிய மதத்தவர்களாயினும், இன்னும் எந்தச்சமயக் கொள்கைகளை உடையவர்களாயினும், மற்றும் கடவுள் நம்பிக்கையற்ற நாத்திகர்களாயினும் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களாயிருந்தால் அல்லது தமிழ் மொழியைப் பேசுபவர்களாயிருந்தால் அல்லது தமிழ்மொழியை பேசிய பரம்பரையைச் சேர்ந்தவர்களாயிருந்தால் அவர்கள் எல்லோருக்கும் உரித்தானது தைப் பொங்கல் பண்டிகை என்பதுதான் காலங்காலமாகக் கைக்கொள்ளப்பட்டுவரும் வழக்கமாகும்.

அத்தகைய தொன்மைச் சிறப்பு வாய்ந்த பொங்கல் பண்டிகை உழவர்களுக்கு மட்டும் உரியதல்ல. உழுவார் உலகத்தார்க்கு அச்சாணியானவன் என்கின்றார் வள்ளுவர். எனவே, கதிரவனுக்கு நன்றி செலுத்தும் பொங்கல் உலகத்திற்கே பொதுவானது. அதை உணர்ந்துதான் பண்டைத் தமிழர்கள் ஆண்டுத் தொடக்கத்திலேயே அதனை ஒரு பண்டிகையாகக் கொண்டாடும் வழக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னரே, சொல்லாலும் பொருளாலும் சுவை மிகுந்த இலக்கியங்களைக் கொண்டிருந்த செந்தமிழ் மொழியைப் பேசிய மக்கள் ஈடு இணையற்ற பண்பாட்டுக்குச் சொந்தக்காரர்களாயிருந்தார்கள். அவர்கள், அறிவியல் முதிர்ச்சியால் அகிலத்திற்கே வழிகாட்டியவர்கள், விண்ணையும், மண்ணையும் ஆராய்ந்து வியப்பு மிக்க நூல்களை ஆக்கியவர்கள், வானிலைக் கணக்கீட்டு வல்லமையால் கோள்களின் அசைவுகளைக் குறியீடு செய்தவர்கள். நட்சத்திரங்களையும் அவற்றின் நடமாட்டங்களையும் அவற்றின் பலாபலன்களையும் மிகத் துல்லியமாக ஆராய்ந்து கணித்தவர்கள். உலகுக்குப் பயன்தரும் முடிவுகளை அளித்தவர்கள். அவர்கள்தான், கதிரவனின் ஒளியினால்தான் பயிர்கள் வளர்கின்றன என்றும், காய்க்கின்றன என்றும் கண்டுபிடித்தார்கள்.

பண்டைய தமிழகத்திலே, கழனி விளைந்து, தானியக் கதிர்களைப் பறிப்பது, தைமாதத்திலேயே நடந்திருக்கிறது. உதாரணமாக நெற்பயிர் விளைந்து அறுவடை செய்வதற்குக் குறைந்தது ஆறு மாதங்கள் எடுக்கும். இற்றைக்கு அறுபது எழுபது வருடங்களுக்கு முன்பு வரை அதுதான் நிலைமையாக இருந்தது. இப்போதையைப் போலக் குறுகியகால நெற்பயிர்கள் உருவாக்கப்படாத காலம் அது.

எனவே, அறுவடை செய்த நெல்லை, அரிசியாக்கி, அந்த அரிசியிலே பொங்கலிட்டு, கழனி விளைவதற்குக் காரணமாகவிருந்த, அந்தக் கதிரவனுக்குப் படைத்து வணங்கி, நன்றி செலுத்தினார்கள். அந்தப் பொங்கலை உற்றார் உறவினர்களோடு பகிர்ந்து உண்டு மகிழ்ந்தார்கள். அந்த நிகழ்ச்சியை ஒரு விழாவாகவே நடத்தினார்கள். இந்த விடயங்களெல்லாம் சங்க இலக்கியங்களிலே ஆங்காங்கே சொல்லப்பட்டிருப்பதை நாம் காணலாம்.

(1) சங்க இலக்கியங்களில் அடங்கும் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூறில் பொங்கல் பற்றிய குறிப்பொன்று காணப்படுகின்றது.

உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை
முந்துவிளை யாணர் நாள்புதிது உண்மார்
மரையான் கறந்த நுரைகொள் தீம்பால்
மான்தடி புழுக்கிய புலவுநாறு குழிசி
வாங்கேழ் இரும்புடை கழாஅது, ஏற்றிச்
சாந்த விறகின் உவித்த புன்கம்
கூதளங் கவினிய குளவி முன்றில்,
செழுங்கோள் வாழை அகல் இலைப் பகுக்கும்
ஊராக் குதிரைக் கிழவ! கூர்வேல்
நறைநார்த் தொடுத்த வேங்கையங் கண்ணி...
*(புறநானூறு 168 - கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார்)*

அதாவது பன்றி உழுத புழுதியில் விதைத்த தினை விளைந்து கதிர் முற்றியது. நல்ல நாளில் புதிர் உண்பதற்கு எண்ணியவர்கள் மரையான் எனப்படும் காட்டுப் பசுவிலிருந்து புதிதாகக் கறந்து நுரையெழும்பும் தீம் பாலை உலைநீராக்கி புத்தரிசியையிட்டு, சந்தனக்கட்டைகளை விறகாகக் கொண்டு அடுப்பெரித்து மான் இறைச்சி சமைத்த பானையில் ஆக்கிய பொங்கலை கூதளம்பூ பூத்துக்கிடக்கும் வீட்டு முற்றத்திலே, அகன்ற வாழை இலையிலே விருந்தினர்களுக்கெல்லாம் கொடுத்து, பலரோடு பகிர்ந்து உண்ணுகின்ற வளமுடையவர்கள் என்ற தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு தை மாதத் தொடக்கத்திலே பொங்கலைக் கதிரவனுக்குப் படைத்து நன்றி சொல்லி வணங்கும் நாளில், விருந்தினர்களையெல்லாம் வீட்டுக்கு அழைத்து அவர்களோடு பகிர்ந்து உண்ணுகின்ற நிகழ்ச்சியை ஒரு விழாவாகவே நடத்தியுள்ளார்கள். அதுவே பொங்கல் விழாவாக, தைப்பொங்கல் பண்டிகையாக, தமிழர் விழாவாகச் சங்ககாலத்திற்கு முன்பிருந்தே கொண்டாடப்பட்டு வந்திருக்கின்றது.

(2) இதனை உறுதிப்படுத்துவதைப் போல புறநானூறின் 22 ஆவது பாடல் அழகாகச் சொல்கிறது.

"......................................................
அலங்கு செந்நெற் கதிர் வேய்ந்த
ஆய் கரும்பின் கொடிக்கூரை
சாறுகொண்ட களம்போல
வேறுவேறு பொலிவு தோன்றக்
குற்றானா உலக்கையால்
கலிச் சும்மை வியல் ஆங்கண்
பொலம் தோட்டுப் பைந்தும்மை
மிசை அலங்கு உளைய பனைப்போழ் செரீய்ச்
சினமாந்தர் வெறிக்குரவை ஓத நீரில் பெயர்பு பொங்க..."

வீட்டுக்கூரைகள், நெல் தார்கள் எனப்படும் வைக்கோல்களால் வேயப்படுவது வழக்கம். ஆனால், தைமாதத்தில் நெற்கதிர்களைக் கரும்புகளோடு சேர்த்துக் கட்டிச் சில வீட்டுக் கூரைகளை வேய்ந்திருப்பார்களாம். கருப்பச் சருகினால் சில வீடுகளை வேய்ந்திருப்பார்களாம். அவ்வாறு வேயப்பட்ட வீடுகள் தனித்தனியாக விழாக்கள் நடைபெறும் களங்களைப் போலக் காட்சி தருவதாகவும், அங்கே அரிசி குற்றுகின்ற உலக்கை ஒலி முழங்கும் என்றும், வீரர்களின் வெறியாட்டம் நடக்கும் என்றும், அவர்களின் குரவை ஒலி கடல் ஒலிப்பதுபோலக் கேட்கும் என்றும், குறுங்கோழியூர் கிழார் என்ற புலவர் புறநானூற்றில் பதிவு செய்திருக்கிறார்.

இதிலிருந்து வயலிலே அறுவடை நடந்த பின்னர், புத்தரிசியில் பொங்கல் செய்யும் நாள் ஒரு பண்டிகையாக, ஒரு திருவிழாவாக நடந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

*(3)* புறநானூறில் இன்னும் ஓர் இடத்திலும் இதையொத்த குறிப்பு உள்ளது. *(பாடல், 70 கோவூர் கிழார்)*

"தைஇத் திங்கள் தண்கயம் போலக்
கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியநகர்"

தைத்திங்களில் குளிர்ந்திருக்கும் குளத்தில் நிறைந்துள்ள தெளிந்த நீரைப்போல, கொள்ளக் கொள்ளக் குறையாத சோறு உடைய நகர், சோழன் கிள்ளிவளவனின் நகர் என்று சொல்லப்படுகிறது. தை மாதத்தில் தைப் பொங்கல் விழா நடக்கும். அப்போது குளத்தில் நீராடுவார்கள். அதனால் தைமாதத்தில் அந்தக் குளத்தின் தண்ணீர் எப்படியிருக்கும் என்பது வெளிப்படையானது என்பதால் புலவர் இவ்வாறு பாடியிருக்கிறார் என்று கருதலாம்.

*(4)* தைநீராடல் ஒரு சிறப்பான பண்டிகைபோலக் கொண்டாடப்படுவதைப் பரிபாடலில் உள்ள *11* ஆவது பாடலில் காணலாம்.

அம்பா ஆடலின் ஆய்தொடிக்கன்னியர்

முனித்துறை முதல்வியர் முறைமை காட்ட
பனிப்புலர் பாடிப் பருமணல் அருவியின்......
..........................................
மையாடல் ஆடல் மழபுலவர் மாறெழுந்து
பொய்யாடல் ஆடும் புணர்ப்பின் அவரவர்
தீயெறிப்பாலும் செறிதவ முன்பற்றியோ
தாயருகா நின்று தவத் தைந் நீராடுதல்
நீ உரைத்தி வயை நதி.

அழகிய வளையல்களை அணிந்த கன்னிப் பெண்கள் மார்கழி நோன்பிருந்தார்கள். திருமணச் சடங்குகளை நன்கு அறிந்த முதிய பெண்கள் அவர்களுக்கு வழிகாட்டினார்கள். கன்னிப் பெண்கள் தங்களுக்குள் பொய்யாகக் கணவன் மனைவி என்பதுபோலத் தமது உள்ளத்தில் எண்ணிக்கொண்டு ஆடுகிறார்கள். வைகை நதியிலே இந்தத் தை நீராடல் ஒரு நாடகம்போல நடக்கிறது. ‘‘இன்று அவர்கள் இங்கே இருப்பதும், களிப்பதும், ஆடுதலும் அவர்கள் முன்செய்த தவப் பயனால் கிடைத்ததா? அவர்கள் தங்கள் தாய்மாரோடு இங்கே தைநீராடுதல் எதற்காக? வைகை நதியே நீதான் சொல்" என்பதாக இந்தப் பாடல் உள்ளது. தைநீராடல் ஒரு திருவிழாவாக நடைபெற்றமையை இது காட்டுகிறது.

(5) நற்றிணையிலே உள்ள 80 ஆவது பாடலில் உள்ள, (பூதன் தேவனார்) "இத்தை இத்திங்கள் தண்கயம் படியும், பெருந்தோட் குறுமகள்" என்பது தைத் திங்கள் முதல் நாளிலே குளிர்ந்த பொய்கையில் நீராடும், பெரிய தோள்களையுடைய, இளம் மகள் என்ற கருத்து, மகளிர் தைநீராடும் சிறப்பான நிகழ்ச்சியைச் சொல்கிறது.

(6) "பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர், தை இத் திங்கள் தண்ணிய தரினும்" என்ற வரிகள் குறுந்தொகையில் ஒரு பாடலில் (196) இடம் பெற்றுள்ளன.

‘‘பாரி வேந்தனின் பறம்பு மலையில் இருக்கும் சுனையில் உள்ள நீரைத் தைத்திங்களில் தந்தாலும், அது சுடுகிறது என்று சொல்வீர்களோ?’’ என்று தலைவனிடம் தலைவியின் தோழி கேட்பதாக உள்ள பாடலின் கருத்து, அந்தச் சுனைநீர் எப்போதும் குளிர்மை உடையதாக இருக்கிறது என்பதைச் சொல்வதோடு, அதற்கும் அப்பால், தை மாதம் என்று வெறுமனே சொல்லாமல், "தைத்திங்கள்" என்று குறிப்பிடப்படுவது ஆண்டு தோறும் தை மாதத்தில் அப்படியொரு பண்டிகை கொண்டாடப் படுவதையும், அந்தக்காலம் வெப்பம் குறைந்ததாக அல்லது குளிரானதாக இருக்கும் என்பதையும் எடுத்துக் காட்டுவதாகவும் உள்ளது.

(7) தை நின்ற தண்பெயல் கடைநாள்
வண்டற் பாவைஉணர்துறைத் தரீஇத்
திருநுதற் மகளில் குரவை அயரும்’’ (அகநானுறில், பா.எ., 269)

பாவை செய்வதும், பொற்காசுகளைத் தொடுத்து அணிவதும், பாவை நோன்பு என்னும் விரதத்தைக் கடைப்பிடிப்பதுமாகத் தைத்திருநாளைக் கொண்டாடும் விடயத்தை இந்தப்பாடல் சொல்கிறது.

(8) " ஐங்குறுநூறில் (84) "நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும் தைஇத் திங்கள் தண்கயம் போலப்பலர் படிந்து..." என்று வருகின்ற வரி, "நறுமணம் வீசும் பூக்களை அணிந்த பெண்கள் பலர் சேர்ந்து, தைத்திங்களிலே நீராடுகின்ற குளத்தைப்போல, பலர்சேர்ந்து....." என்று சொல்கிறது. இதிலிருந்து தைத் திங்களில் மங்கையர் நீராடுதல் ஒரு விழாவாகக் கொண்டாடப்பட்டிருப்பது தெரியவருகிறது.

(9) " வைஎயிற்றவர் நாப்பண் வகையணி பொலிந்து, நீ தையில் நீராடிய தவம் தலைப்படுவாயோ" என்று கலித்தொகையில், (குறிஞ்சிக்கலி 23) என்று வருகின்ற வரிகள், "இளம்பெண்கள் புடைசூழ விதம்விதமான அணிகலங்களை அணிந்து, அழகு செய்துகொண்டு நீ தைத்திங்கள் நீராடிச் செய்யும் தவமெல்லாம் உனக்கு என்ன பயங்களைத் தருமோ?" என்ற கருத்தைத் தருகின்றன. இதன்படி, இளம்பெண்கள் பலர் கூடியாடும் தைநீராடல் அவர்களைப் பொறுத்தவரை ஒரு விரதமாக, உற்றார் உறவினர்களுக்கு ஒரு பண்டிகையாக, ஊர்மக்களுக்கு ஒரு திருவிழாவாக இடம்பெற்றிருப்பதை அறியலாம்.

(10) சிலப்பதிகாரத்தில், இந்திர விழவு ஊர் எடுத்த காதையில், ".... புழுக்கலும் நோலையும், விழுக்கு உடை மடையும்

பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து......" என்று ஒரு செய்தி உள்ளது. அதாவது. இந்திர விழாவின் ஆரம்பத்தில்,

காவல் பூதங்களை வழிபடும்போது, அங்கே, கோயிலின் வாயிலில் உள்ள பலிபீடிகையிலே, புழுக்கல், எள்ளுருண்டை, நிணச் சோறு, பூக்கள், பொங்கல் என்பவற்றைப் படைத்து குரவைக்கூத்து ஆடி, ஆரவாரம் செய்து வழிபட்டதாகச் சொல்லப்படும் இந்தத் தகவலில் இருந்தும் சங்ககாலத்தில் பொங்கல் என்பது முக்கியமான ஒரு நிகழ்ச்சியாக இருந்திருக்கிறது என்பதையும், வழிபாட்டு நிகழ்ச்சிகளிலும் இடம்பெற்று வந்திருக்கிறது என்பதையும், அறிய முடிகிறது.

(11) பிற்காலத்தில் தோன்றிய இலக்கியமான, சீவக சிந்தாமணியில், மது குலாம் அலங்கல் மாலை மங்கையர் வளர்த்த செந்தீப் புதுக்கலத்து எழுந்த தீம்பால் பொங்கல்" - என்று பொங்கல் விழாவைப் பற்றிய குறிப்பு சீவகசிந்தாமணியில் உள்ளது. கி.பி. 9 ஆம் ஆண்டில் தோன்றியதாகச் சொல்லப்படும் சீவகசிந்தாமணியில் அவ்வாறு இருப்பதால், ஒன்பதாம் நூற்றாண்டிலேயே தமிழர்கள் பொங்கல் விழா கொண்டாடி இருக்கிறார்கள் என்பது புலனாகிறது.

எனவே, சங்ககாலத்திற்கு முன்பே ஆரம்பமாகிவிட்ட தைப்பொங்கல் பண்டிகை, கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையும் தொடர்ந்தே வந்திருக்கிறது என்பதையும், அந்தத்

தொடர்ச்சியே இன்றுவரை நீண்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது என்பதையும் இதிலிருந்து நாம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

வேறெந்த மாதத்திற்கும் இல்லாத தனித்துவம் மிக்க முக்கியத்துவம் தைமாதத்திற்குக் கொடுக்கப்பட்டு வந்திருப்பதற்கும், மார்கழி நோன்பிருந்த பெண்களும் தைநீராடலுக்கு முன்னாரான செயற்பாடாகவே அதனை முன்னெடுத்து வந்திருக்கின்றமைக்கும், அந்த மார்கழி நோன்பின் இறுதிக்கட்டம் தைநீராடலை நோக்கியும், தைத்திருநாளைக் கொண்டாடும் நோக்கிலும்தான் நடந்திருக்கிறது என்பதற்கும் ஏராளமான இலக்கியச் சான்றுகள் உள்ளன.

சங்க காலத்திற்கு முன்பிருந்தே தமிழ் மக்கள், ஒரு தைமாதம் கழிந்துவிட்டால் அடுத்த வருடம் தைமாதம் வரும்வரையில் அந்தத் தை நீராடலையும், தைப்பொங்கல் பண்டிகையையும் ஒவ்வோராண்டும் எதிர்பார்த்துக் காத்திருந்து, மாதம் முழுவதும் மகிழ்ந்து கொண்டாடியிருக்கிறார்கள்.

எனவே, கடந்தகாலத்தில் நல்லவை நடைபெற்றமைக்கு நன்றி சொல்வதற்காகவும், எதிர்காலத்தில் நல்லது நடக்கவேண்டும் என்று வேண்டுவதற்காகவும், தைத்திங்களில் புத்தரிசியில் பொங்குதலும், மக்களின் ஒன்றுகூடலும், நீராடலும், களியாடலும், விருந்து கொடுத்தலும், பலரோடு பகிர்ந்து உண்ணலும், கலைகளை அரங்கேற்றுதலும், திருவிழாக்கள் நடத்துதலுமாக தைத்திருநாள் கொண்டாட்டங்கள் மாதம் முழுவதும் நடைபெற்று வந்திருக்கின்றன. அந்தப் பாரம்பரியமே இன்றுவரை தொடர்கிறது.

வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்தே வழக்கத்திலிருந்து வருகின்ற,
தைப் பொங்கல் பண்டிகையை,
ஊரோடும், உறவோடும் சேர்ந்து, மாதம் முழுவதும் மகிழ்ந்து கொண்டாடுவோம்.
பாரெங்கும் வாழ்கின்ற பல்லின மக்களும் அறியும்வண்ணம்
தோழமையோடு சேர்ந்து கொண்டாடி மகிழ்வோம்.

தமிழர்களின் பாரம்பரிய மாதத்தின் சிறப்பைத் தரணியெங்கும்
பறை சாற்றுவோம்.

இனிக்கும் பொங்கலிட்டு எல்லோர்க்கும் பகிர்ந்துண்போம்.
அதுவே பண்டைத் தமிழர் பண்பாடு. அதைக் கடைப்பிடிப்பது நம் கடப்பாடு.
தைத்திருநாள் தமிழரின் திருநாள்!
தைப்பொங்கல் பண்டிகை தமிழரின் பண்டிகை!
வாழ்க தமிழ் வணக்கம்.

## கேபாப்



***இரகமத்துல்லா***

“One Lamb Kebab, please.”

ஒரு நாளில் எந்நேரமும் வெப்பம் பொங்கும் சிங்கப்பூரின் மதிய உணவு வேளை. சுட்டெரிக்கும் வெயிலில், வியர்வை வடிய நடந்து போய் என்ன சாப்பிடுவது என்ற சலிப்புடன், அலுவலகத்துக்கு பக்கத்தில் உள்ள சிங்கப்பூரின் பிரசித்தி பெற்ற Hawker Centre ஆன "Lau Pa Sat" க்கு சென்றேன். வழக்கமாய் சாப்பிடும் இந்திய உணவுச்சாலையிலும், "ஹலால்" உணவு விற்கும் சீனக்கடையிலும் அன்று கூட்டம் சற்று அதிகமாக இருந்தது.

எனவே, வேறு எதாவது வித்தியாசமாக சாப்பிடலாம் என்று எண்ணி, "Lau Pa Sat" ஐ வலம் வந்தேன். அப்போதுதான், 'Lau Pa Sat'ன் வட மேற்குப் பகுதியில் ஒரு புதிய, சின்ன கடையை பார்த்தேன். அந்த கடைக்காரர், சிங்கப்பூருக்கே உரிய சீனரோ, இந்தியரோ, மலாய்க்காரரோ அல்லாது வேறு மாதிரியாக தெரிந்தார். அவர் விற்றுக்கொண்டிருந்த உணவும், நான் இதுவரை பார்த்திராத, வித்தியாசமான உணவாக தெரிந்தது.

"What is this?" என்றேன்.

"கேபாப்" (Kebab) என்றார்.

"What is this made of?"

"Chicken" and "Lamb".

"Is it Halal?"

அவர் சற்று வியப்பாகி பின் சுதாரித்து, தயக்கத்துடன், ‘Yes Brother’ என்றார்.



வியாபாரரீதியில் இயந்திரத்தனமாக இயங்கும் சிங்கப்பூரில், அந்த 'Brother'ல் தொனித்த பாசம், அந்த உணவின் மேல் ஒரு இனம் தெரியாத ஆவலைத் தந்து, அதை சுவைக்கத் தூண்டியது. விலைப்பட்டியலை பார்த்து, தேவையான டாலர்களை தந்து, 'One Lamb Kebab please!' என்றேன்.

மூன்று பக்கம் மின்சார heater சூழ, கீழே மோட்டார் பொருத்தப்பட்டு சற்று தடிமனான ஸ்டீல் உருளையில், சீராக வெட்டப்பட்டு தேவையான பொருட்கள் சேர்க்கப்பட்டு, யானையின் துதிக்கை பருமனில் Chicken மற்றும் Lamb இரண்டும், தனித்தனியாக, மெதுவாக, ஆனால் அழகான ஒரு தாள

கதியில் சுழன்று கொண்டு இருந்தது. நன்கு கொழுத்த தேனடையிலிருந்து வடியும் தேனைப்போல, இரண்டு உருளைகளிலிருந்தும் வடிந்த எண்ணெய் போன்ற கொழுப்பு கீழே இருந்த தட்டில் மிதந்தது.

'Chef' தொப்பி அணிந்து, ஐரோப்பியர் போன்ற தோற்றத்தில் இருந்த அந்த கடைக்காரர், ஒரு தேர்ந்த முடி திருத்தும் கலைஞரைபோல, கையில் இருந்த மின்சார பிளேடு போன்ற கருவியால், 'Lamb' உருளையில் இருந்த கறியை 'Shave' செய்து *1 – 1 1/2* இன்ச் அளவில் மெலிதான துண்டுகளாக வழித்து எடுத்தார். பின்னர், அந்த கறியை ஒரு மெலிதான ரொட்டியில் வைத்து, கூடவே சிறிது சீவிய வெங்காயம், தக்காளி, 'Lettuce' எனும் கீரையும் வைத்து, அதன் மேல் Garlic Sauce மற்றும் Chilli Sauce ஐ சமமாக பரவி, ஒரு அலுமினிய தாளில் மடித்து தந்தார்.

அலுமினிய தாளை கிழித்து, ரொட்டிக்குள் இருந்த அனைத்தையும் ஒரு சேர கடித்தேன். பாரம்பரிய தென் இந்திய உணவு வகைகளில் இருக்கும் மிளகாய் கார நெடியோ, மசாலா நெடியோ இல்லாத ஒரு இனம் புரியாத சுவையை நாக்கு உணர்ந்தது. வாழ்வில் முதல்முறையாக, ஒரு இறைச்சிக்கறியை இனிப்பான சுவையில் சாப்பிட்டேன். மிகவும் சுவையாக இருந்தது. அன்று முதல், வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை வித விதமான 'Kebab' சாப்பிட்டேன். அந்த கடையின் 'Menu Card'ல் இருந்த அனைத்து ஐட்டங்களையும் சாப்பிட்டு முடித்தேன். 'Kebab'ன் தீவிர ரசிகனாகி விட்டேன்.

'Kebab' சாப்பிட போகும் தினங்களில் அந்த கடைக்காரரிடம் பேசியும், 'Google' செய்து மேலும் தகவல்கள் சேகரித்து, 'Kebab', துருக்கி, லெபனான் மற்றும் அரபு நாடுகளில் மிகப் பிரபலம் என்றும் தெரிந்து கொண்டேன்.

ஆனால் மலிவு விலையில் சுவையாக கிடைக்கும் மலேசிய, சீன உணவுகளுக்கு நடுவில் சரியாக வியாபாரம் ஆகாததால், என் விருப்பமான 'Kebab' கடை, சில மாதங்களுக்குள் மூடப்பட்டு விட்டது.

இது நடந்து ஒரு சில மாதங்களில் சிங்கப்பூரில் இருந்து மெல்போர்னுக்குக் குடி பெயர்ந்தேன். பெரும்பாலான சிங்கப்பூர் சனங்களைப் போன்று, தினமும், குறிப்பிட்ட, ஒரே மாதிரியான உணவைச் சாப்பிடாமல், தினமும் வகை வகையாக, பல்வேறு நாட்டு உணவு வகைகளை சுவைக்கும் கலாச்சாரம் கொண்டதாக எனக்கு மெல்போர்ன் அறிமுகம் ஆனது. அதற்கு அலுவலகத்தில் இருந்த பலதரப்பட்ட நாட்டினரும், அவர்கள் தினம் ஒரு வகையான 'Cuisine' உணவை சுவைத்ததே சாட்சி.



குடி பெயர்ந்த புதிதில், வேலையில் அமர்ந்து, வாழ்வாதாரத்துக்குத் தேவையான ஏற்பாடுகளை செய்துவிட்டு அப்புறம் குடும்பத்தை அழைத்துக்

கொள்ளலாம் என்று தனியாக வந்ததால், தினமும் வெளியே சாப்பிட வாய்ப்பு அமைந்தது.

அந்த மாதிரி அமைந்த வாய்ப்புகளில், ஒரு நாள் எதிர்பாராத விதமாக அமைந்ததுதான், ஒரு எகிப்திய நண்பர் அழைத்துச் சென்ற 'Kebab' கடை. சந்தர்ப்பவசத்தால் பிரிந்து போன நெருங்கிய சொந்தத்தை, மீண்டும் கண்ட சிலிர்ப்பு. கிட்டத்தட்ட மனம் 'லல்லல்லல்லல்லல்லல்லா' பாடியது. அவ்வளவுதான். அன்றிலிருந்து, வாரத்திற்கு 2 அல்லது 3 முறை மீண்டும் 'Kebab' படலம் துவங்கியது. ஆனால், இந்த முறை வேறு மாதிரியான அனுபவம். சிங்கப்பூரில் ஒரே கடையில் வித விதமாக 'Kebab' ஐ சுவைத்த நான், மெல்போர்னில், பல 'Kebab' கடைகளில் வித விதமாக சாப்பிட்டு எந்த கடையில் எது சுவையானது என்று சொல்லும் அளவுக்கு தேறினேன்.

ஏறத்தாழ 70 நாடுகளின் உணவு வகைகளை தரும் 3,500 ரெஸ்டாரன்டுகளுக்கு மேல் இருக்கும் ஆஸ்திரேலியாவின் 'உணவு தலைநகர்' (Food Capital of Australia) என பெயர் பெற்ற மெல்போர்னில் இதே 'Kebab' வகையை துருக்கிய, கிரேக்க, லெபனான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற பல்வேறு நாட்டினர் எப்படி எல்லாம் வகைப்படுத்தி, அந்தந்த நாட்டின் சுவையை (Flavor) புகுத்தி வித்தியாசமாக தருகிறார்கள் என்று பெரிய ஆராய்ச்சியே செய்தேன்.

பல்வேறு நண்பர்கள் சொல்லும் இடங்களுக்கு சென்று சுவை பார்த்தேன். முழுமையான மெல்போர்ன்வாசி ஆன திருப்தி கிடைத்தது. 'Kebab' மட்டுமல்லாது வேறு பல உணவுகளை சுவைத்தாலும், நடு ஜாமத்தில் எழுப்பி தந்தாலும் கண்ணை மூடிக்கொண்டு சாப்பிடும் அளவுக்கு 'Kebab' ரசிகன் ஆனேன்.

சிங்கப்பூரில் இருந்து குடும்பம் வந்து இறங்கியது. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதுபோல, மனைவிக்கு முதலில் 'Kebab' ஐ அறிமுகம் செய்தேன். முதலில், தென் இந்திய உணவுபோல மிளகாய், மசாலா, எண்ணெய் இல்லாது சற்றே இனிப்பாக இருந்த சுவையை ரசிக்க முடியாமல் போனாலும், காலப்போக்கில், என் மனைவிக்கு 'Chicken Kebab' பிடித்துப்போனது. அதை விட, என் இரண்டு மகன்களுக்கும் அனைத்து 'Kebab' வகைகளும் மிகவும் பிடித்துப்போனது எனக்கு இரட்டிப்பு சந்தோஷம். இப்படியாக, எங்களது மெல்போர்ன் வாசத்தில், 'Kebab' ஒரு முக்கிய அங்கமாக மாறியது.

மெல்போர்ன் வந்த புதிதில் Moonee Ponds ல் தங்கி இருந்ததால், அக்கம் பக்கத்தில் உள்ள இடங்களுக்கே பெரும்பாலும் போய்க்கொண்டிருந்தேன். அதில் குறிப்பிடத்தக்க இடங்களாக Coburg மற்றும் Flemington இருந்தன. அதிலும் Coburg ல் உள்ள Kebab கடை, சராசரி வகைகளை தாண்டி, அடுத்த நிலைக்கு எடுத்துச் சென்றது. அங்கு, அவர்கள் பரிமாறிய Doner களும், Grill ஐட்டங்களும் அலாதியான ருசி கொண்டவை. அது போக, ஒவ்வொரு Meal உடனும் இளஞ்சூட்டில் அவர்கள் தரும் மென்மையான Turkish Bread ஐ பிய்க்கையில் வரும் ஆவியைப் பார்த்தால், கொடைக்கானல் மலையில் அதிகாலையில் நகரும் மேகம் போன்று இருக்கும். Doner

களையும், Grill ஐட்டங்களையும், ரொட்டியையும் ஒரு சேர இணைக்கும் பாலமாக 6 வகையான Dips ம் இங்கு உண்டு. இவை அனைத்தையும் ஒரு சேர சாப்பிடுவது உணவுப் பிரியர்களுக்கு ஒரு பிரத்யேக அனுபவம்.

சிங்கப்பூரில் இருந்த காலத்திலும் சரி, மெல்போர்ன் வந்த புதிதிலும் சரி, 'Salad' என்பது சற்று வெறுப்பையே தந்தது. ஆனால், முதல்முறையாக 'Kebab' உடன் 'Salad' எடுத்துக் கொண்டபோது, உடலுக்கும், மனதுக்கும் ஒரு புத்துணர்ச்சி கிடைத்ததுபோல இருந்தது. அன்று முதல், எங்கெல்லாம் முடியுமோ, அங்கெல்லாம் 'Salad' ம் எடுக்க பழகிக்கொண்டேன். Coburg ல் உள்ள Kebab கடையில், வழக்கமான வெங்காயம், தக்காளி, 'Lettuce' தவிர 'Tabouli' யும் உண்டு. 'Salad' மேல் மெலிதாக 'Virgin Oil' மற்றும் 'Vinegar' தெளித்து தருகையில், Doner, Grill ஐட்டங்களை சமன் செய்து வயிற்றுக்கு இதமாக இருக்கும். அந்த வகையில், 'Salad' ஐ அறிமுகம் செய்த ஆஸ்திரேலியாவுக்கும், 'Kebab' கடைக்கும் நன்றி.

இரண்டே ஆண்டுகளுக்குப் பிறகு Moonee Ponds ல் இருந்து Glen Waverley க்கும், பின்னர் 6 ஆண்டுகள் கழித்து Narre Warren க்கும் வீடு மாறி வந்த பின்னரும், இன்றும் மாதம் தவறாமல் 65 கிலோமீட்டர் காரில் பயணம் செய்து 'Coburg' சென்று சாப்பிட்டு வருவதை ஒரு விரதமாகவே செய்து வருகிறோம். அவ்வப்போது, Broadmeadows போய், அங்கும் சாப்பிடுவது உண்டு.

இந்த நிலையில், மூன்று வருடங்களுக்கு முன்னர், அமெரிக்க பயணம் மேற்கொண்டபோது, நயாகரா நீர்வீழ்ச்சிக்கு பக்கத்தில் இருந்த கனடா நாட்டில் கடைக்கோடியில் இருந்த ஒரு சிற்றூரில் ஒரு இரவு தங்க நேர்ந்தது. இரவு உணவுக்கு தேடி அலைகையில் கண்ணில் பட்டது ஒரு துருக்கியரது 'Kebab' கடை. 'ஆஹா!' என பரவசத்துடன் உள்ளே நுழைந்து உணவுப் பட்டியலை பார்த்துக் கொண்டிருந்தேன். நரைத்த முடியுடன், 60களில் இருந்த வயதான 'இளைஞர்'போல தோற்றம் கொண்ட கடைக்காரர், 'What can I get you brother?' என்றார். அதே பரிச்சியம். அதே பாசம். அதே தோழமை.

"One Lamb Kebab, please."

அவர் 'Lamb Kebab' தயார் செய்து கொண்டிருக்கும் நேரத்தில் அவரிடம் பேச்சுக் கொடுத்தேன். 1960 களில் கனடா வந்ததாகவும், அன்று முதல் இன்றுவரை 'Kebab' கடை நடத்தி வருவதாகவும், ஆரம்ப காலத்தில் அவ்வளவாக வியாபாரம் ஆகவில்லை என்றாலும், சமாளித்து முன்னேறி இன்று, அந்த வட்டாரத்தில் மிகப் பிரபலமான 'Kebab' கடை என்று பெயரெடுத்து இருப்பதாக சொன்னார். நானும், என்னுடைய ஆஸ்திரேலிய வாழ்க்கை, குடும்பம், உணவு. முக்கியமாக 'Kebab' ன் மேல் கொண்ட அதீத காதல் பற்றியெல்லாம் பேசினேன்.

ஆற அமர அமைதியாக எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருக்க, ‘Kebab'ம் தயார் ஆகிவிட்டது.

“இங்கே வா. உனக்கு ஒரு கூடுதல் தகவல் (Tip) தருகிறேன். அதை நீ உங்கள் ஊரில் உள்ள 'Kebab' கடைக்காரர்களிடம் போய்ச் சொல். அவர்களுக்கு அது ஆச்சரியமாக இருக்கும்” என்றார்.

பிறகு, 'Lamb' மற்றும் இதர பொருட்களைப் போட்டு சுருட்டிய 'Pita Bread' ரொட்டியை, உருளையின் கீழே மிதந்த கொழுப்பில் சிறிதுபோல தடவி எடுத்து, உருளையின் பக்கவாட்டில் இருந்த மின்சார heater ல் அழுத்தி எடுத்து, அதே சூட்டில், அலுமினிய தாளில் சுருட்டித் தந்தார்.

"துருக்கியில், பெரும்பாலான கிராமங்களில் இருக்கும் பாரம்பரிய தயாரிப்பு முறை இது. இப்போதுள்ள இளம் தலைமுறையினருக்கு இது பற்றித் தெரியாது. இப்போது சாப்பிட்டுப் பார். ருசியில் வித்தியாசம் தெரியும்." என்றார்.

அவர் சொன்னதுபோலவே, இத்தனை வருடங்களில் சாப்பிட்ட எண்ணிலடங்கா 'Kebab' களில் இல்லாத ஒரு புது சுவை அதில் இருந்தது. மிகவும் ஆச்சரியத்துடன் அவருக்கு நன்றி சொல்லிவிட்டு, கூடுதலாக அரை மணி நேரம் அவரிடம் உரையாடிவிட்டு கிளம்பினேன்.

'Kebab' கடையிலிருந்து திரும்ப என்னுடைய ஓட்டல் அறைக்குத் திரும்ப வருகையில், இத்தனை வருடங்களாக இல்லாத ஒரு இனம் புரியாத உணர்வு எனக்குள் ஏற்பட்டது. மீண்டும் மீண்டும் ஒரு கேள்விதான் மனதில் வந்து போனது. ஒரே ஒரு வகையான உணவு. 'Kebab' சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, கனடா போன்ற பல்வேறு நாடுகளில் இருக்கும் மக்களை ஒன்றிணைத்து, நட்புடன் கூடிய பாசத்தை கொண்டு வரும் என்றால், உலகில் இருக்கும் ஆயிரக்கணக்கான உணவு வகைகள், எவ்வளவு நட்பை கொண்டு வரும்? மூன்று நாடுகளிலும் நான் சந்தித்த மனிதர்கள், என்னிடம் தோழமை பாராட்டினார்களே தவிர, வேறு வித்தியாசம் பார்க்கவில்லை. நான் எந்த நாட்டை சேர்ந்தவன் என்று கேட்கவில்லை. நான் எந்த மதத்தைச் சார்ந்தவன் என்று கேட்கவில்லை.

இது நாள்வரை, முதன்முதலாக எனக்கு 'Kebab' ஐ அறிமுகப்படுத்திய சிங்கப்பூர் கடைக்காரர், ஏறக்குறைய 20 வருடங்களாக புன்னகையோடு உபசரிக்கும் 'Coburg' கடைக்காரர், மற்றும் இரவு கடை மூடும் நேரம் என்றும் பாராமல் என்னுடன் உரையாடிய கனடா கடைக்காரர். இவர்களில் யாருடைய பெயரும் எனக்குத் தெரியாது. அவ்வளவு ஏன், அந்த மூவருமே கூட என் பெயரைக் கேட்கவில்லை.

எங்கள் அனைவருக்கும் பொதுவானது ஒன்றே ஒன்று. அது உணவுதான். அதற்குள்தான் எத்தனை உணர்வுகள், அனுபவங்கள், விருப்பங்கள், நன்மைகள். பிறகு ஏன் இந்த உலகில் மனிதர்களிடையில் இத்துணை வேறுபாடு, வித்தியாசம், வேதனை, வெறுப்பு? பதில் கிடைக்காததால் தூக்கமின்றி அன்றைய இரவு கழிந்தது.

மெல்போர்ன் திரும்பியதும் அந்த வார இறுதியில் 'Coburg' கடைக்கு சென்றேன். வழக்கமான புன்னகையோடு வரவேற்ற கடைக்காரர், 'What can I get you brother?' என்றார்.

"One Lamb Kebab please, brother.”

<u>கேபாப் - சில குறிப்புகள்</u>

'கேபாப்' (Kebab) என்பது ஒரு பிரபலமான லெவண்ட்டீனிய (கிழக்கு மத்தியதரைக் கடலில் அமைந்த சைப்பிரசு, மற்றும் நிலநடுக்கடலின் (Mediterranean Sea) கிழக்கே அமைந்த வடக்கு அரேபிய தீபகற்பத்தின் பகுதிகளான இசுரேல், ஜோர்டன், லெபனான், பாலதஸ்தீனம், சிரியா, தெற்கு துருக்கி அடங்கிய பகுதிகளை குறிக்கும்) பிராந்தியத்தில் மிகவும் பிரபலமான சாலையோர உணவுகளில் ஒன்றாகும்.

கிடைமட்டத்தில் இறைச்சியை சுட்டெடுப்பது ஒரு பழங்கால வரலாற்றைக் கொண்டிருந்தாலும், 'கேபாப்' (Kebab) / ஷவர்மா (Shawarma) நுட்பம் — இறைச்சித் துண்டுகளின் செங்குத்து அடுக்கை சுட்டு, சமைக்கும்போது அதை வெட்டுவது — முதன்முதலில் 19 ஆம் நூற்றாண்டின் ஒட்டோமான் பேரரசில், அதாவது தற்போதய துருக்கியில் தோன்றியது. டோனர் கேபாபின் (Doner Kebab) வடிவம் கிரேக்க கைரோஸ் (Gyros) மற்றும் ஷவர்மா (Shawarma) இரண்டும் இதிலிருந்து பெறப்பட்டவை. ஷவர்மா (Shawarma), 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மெக்சிகோவில் குடியேறிய லெபனான் மக்களால் சமகால மெக்சிகன் உணவான டகோஸ் அல் பாஸ்டரின் (Tacos al Pastor) வளர்ச்சிக்கு வழிவகுத்து அங்கு கொண்டு வரப்பட்டது.

இதே போன்று கேபாப் (Kebab) ஆனது:

சீனாவில் 'Chuan',

கிரேக்க நாட்டில் 'Gyros' (அ) 'Souvlaki',

மேற்கு ஆசியாவிலும், வட ஆப்ரிக்காவிலும் 'Lyulya', 'Kebab Barg', Kebab Koobideh',

இராக், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் 'Tikka', 'Chapli Kebab',

எகிப்தில் 'Shish Taouk',

துருக்கியில் 'Adana', 'Iskender', 'Tavuk',

தென்கிழக்கு நாடுகளில் 'Satay',

தென்னாப்பிரிக்காவில் 'Sosatie',

மேற்கு ஆப்ரிக்காவில் 'Suya'

என பல்வேறு பெயர்களில் உலகெங்கிலும் வலம் வருகிறது.

மசாலாப் பொருட்களில் சீரகம், ஏலக்காய், இலவங்கப்பட்டை, மஞ்சள், மிளகு, மற்றும் சில பகுதிகளில் பஹரத் ஆகியவை சேர்க்கப்படலாம். 'கேபாப்' (Kebab) பொதுவாக பிடா (Pita) அல்லது லஃபா (Laffa) போன்ற தட்டையான ரொட்டியில் சாண்ட்விச் போன்று பரிமாறப்படுகிறது. மத்திய கிழக்கில், கோழி இறைச்சி 'கேபாப்' (Kebab) பொதுவாக பூண்டு சுவைச்சாறு (Garlic Sauce), பொரியல் மற்றும் ஊறுகாய்களுடன் பரிமாறப்படுகிறது. சிரியா மற்றும் லெபனானில், சாண்ட்விச்சுடன் வழங்கப்படும்

பூண்டு சுவைச்சாறு இறைச்சியைப் பொறுத்தது. 'Toum' அல்லது 'Toumie' சுவைச்சாறு (Toum Sauce) என்பது பூண்டு, தாவர எண்ணெய், எலுமிச்சை மற்றும் முட்டையின் வெள்ளைக்கரு அல்லது மாச்சத்து ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது. பல்வேறு வகையான சுவைச்சாறுகளோடு (Sauce) பலவித இறைச்சிகள் பரிமாறப்படுகிறது. அதில் குறிப்பாக சொல்லவேண்டும் என்றால், Chilli, Tahiti, Tarator, Tzatziki, Mustard ஆகியவற்றை சொல்லலாம்.

*Few recommendations for good Kebab shops*

Melbourne Kebab Station, 451 Sydney Rd, Coburg VIC 3058

Flemington Kebab House, 301 Racecourse Road, Kensington VIC 3031

Glenny Kebabs, 80 Kingsway, Glen Waverley VIC 3150

Campbellfield Kebab and Coffee House, 1468, Sydney Road, Campbellfield VIC 3061

Narre Warren Kebabs, Unit 1/34 Webb St, Narre Warren VIC 3805

Disclaimer: The above list is provided based on the Author’s recommendations only and does not represent any official survey results or reviews.

**வண்ணம்**



*சரணியா சத்தியன்*

வண்ணம் என்ற சொல்லே மிகவும் புத்துணர்ச்சியான சொல் என்று நினைத்ததுண்டு. வண்ணம் என்று நினைத்தாலே மகிழ்ச்சியும், திருப்தியும் உண்டாகும். யாருக்குத்தான் வண்ணங்கள் பிடிக்காது. ஆனால் அதே வண்ணங்கள் என் மனதில் பயத்தை உண்டாக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இந்த பயம் எப்பொழுது உருவானது தெரியுமா? எனக்கு பெண் குழந்தை பிறந்திருந்த பொழுது.

என்னுடைய குழந்தையை பார்க்க வந்த ஒரு தாதி என்னிடம் உங்கள் ஆண் குழந்தை அழகாக இருக்கிறான், என்றார். நானும் இல்லை, இது பெண் குழந்தை என்று கூறினேன். அவர் உடனே மன்னியுங்கள், blue கலர் ஆடை அணிந்தமையால் ஆண் என்று நினைத்துவிட்டேன் என்றார். முதலில் ஒரு கலர் ஆணையும் பெண்ணையும் வேறுபடுத்தப் போதுமானதா என்று நினைத்து சிரிப்புத்தான் வந்தது. அது கோவிட் காலமாக இல்லாது இருந்திருந்தால், பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லாமல் இருந்திருந்தால், நானும் என்னுடைய குழந்தைக்கு pink வண்ண ஆடையைத்தான் வாங்கியிருப்பேன் என்று நினைத்துக் கொண்டேன். Blue & Pink அதுவரைக்கும் என் வாழ்க்கையில் வெறும் நிறங்கள் மட்டும்தான். ஆனால் என் பெண் குழந்தை வளர வளர இந்த நிறங்கள் வெறும் எரிச்சலையும், கோபத்தையும்தான் உண்டாக்குகின்றது.

Blue & pink என்ற வட்டத்துக்குள் கண்ணை மூடி ஓடிக் கொண்டிருக்கும் இந்த சமூகத்திடம் எனக்கு ஒரு கேள்வி. இந்த பிரிவினையை யார் ஆரம்பித்தது? ஏன் உருவானது? அதிலிருக்கும் அர்த்தம் என்ன? யாராவது யோசித்ததுண்டா?

"Why pink for girls, blue for boys?"

தரவுகளின்படி 19ம் நூற்றாண்டின் இடைக்காலம்வரையில் குழந்தைகளுக்கு வெள்ளை ஆடைகள் மட்டுமே அணிவிக்கப்பட்டன. 1918ல்தான் blue, pink போன்ற மென் நிறங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதிலும் blue பெண்களுக்கும் pink ஆண்களுக்குமாக. நம்பமுடியவில்லை அல்லவா? ஏனென்றால் pink ஆழ்ந்த நிறமாக இருப்பதனால் ஆண்களுக்கும், blue அழகான நிறமாகக் கருதப்பட்டமையால் பெண்களுக்கும் என்று பிரிக்கப்பட்டது. எனினும் இது அன்றைய வர்த்தகத்தில் பாதிப்பை ஏற்படுத்தாமையாலும், pink காதலின் நிறம் என்பதாலும் pink பெண்களுக்கும், blue ஆண்களுக்குமென 1940களில் அறிமுகப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் 1960களில் பெண்களின் விடுதலைப் போராட்டத்தின்போது, பெண்கள் pink ஆடைகளை தங்களது வளர்ச்சியையும், வெற்றியையும் மட்டுப்படுதுவதாகக் கூறி வெளியே வீசினார்கள். மறுபடியும் 1980களில் மருத்துவ உலகத்தில் ஏற்பட்ட ஒரே ஒரு மாற்றம் அனைத்தையும் திருப்பிப் போட்டது. பெற்றோர்கள் தங்களது குழந்தைகளின் பாலினத்தை கருவிலேயே அறிந்து கொள்ளலாம் என்றதின் அறிமுகம்தான் இன்றுவரை இந்த உலகத்தை blue மற்றும் pink மாயையில் வைத்திருக்கின்றது. வர்த்தக உலகம் இதனை தங்களது பெரும்

வாய்ப்பாகக் கருதியது. இக்கருத்தை மக்களிடையே பிரபல்யமடையச் செய்து தங்களது விற்பனையைப் பெருக்கிக்கொண்டது. இம்மாற்றத்தை தொடர்ந்து கொண்டாடப்படும் gender revealing party இக்கருத்தை இன்னும் ஆழமாக பதித்துவிட்டது. நாங்களும் வர்த்தக உலகத்தின் அடிமைகளாகிவிட்டோம்.

நீங்கள் நினைக்கலாம் வெறும் நிறங்கள்தானே இதில் என்ன இருக்கிறது என்று. என்னைப்பொருத்தவரையில் ஏன் இருக்க வேண்டும் என்ற கேள்விதான் பெரிதாக இருக்கிறது.

எதனை வலியுறுத்த இந்த வேறுபாடு? காலம் காலமாக "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்" என்று தொடங்கி ஆண் பெண் சமத்துவம்வரை தொண்டத்தண்ணி வத்த கத்தி என்ன பிரயோசனம்? வெறும் நிறத்திலேயே ஆணையும் பெண்ணையும் பிரித்து வைத்திருக்கிறோம். அதுவும் எப்போதிருந்து? பிறந்ததிலிருந்து. இது என்ன மாதிரியான மனநிலையை உருவாக்கும் என்று நினைக்கிறீர்கள்?

என்னுடைய நண்பியின் மகளுக்கு நீல நிறம் பிடிக்கும் என்பதால் அவளுடைய பிறந்தநாளிற்கு blue cake செய்தார்கள். அன்று வருகை தந்த 80 வீதமான விருந்தினர்கள் முதலில் கேட்டதே

"Blue ஆ? நீங்கள் girl எல்லோ?"
"Blue cake ஆ? அது boy colour ஆச்சே?"

ஏன் ஒரு பெண்ணிற்கு நீல நிறம் பிடிக்கக்கூடாதா என்ன?

என்னுடைய மகள் Spider-Man T-shirt வேணும் என்று சொன்னதற்காக ஒஸ்ரேலியாவில் உள்ள அனைத்துக் கடைகளிலும் தேடிப்பார்த்துவிட்டேன். எங்கையுமே பெண் குழந்தைகளுக்கான பகுதியில் இல்லவே இல்லை. பெண் குழந்தைகளா, princess மட்டும்தான். ஏன் குழந்தைகள் பிரிவில் ஆண் குழந்தைகளுக்கு pink நிற ஆடைகளே இல்லை. பெண் குழந்தைகளுக்கு blue நிற ஆடைகள் குறைவு. ஏன் பெண்களுக்கு blue நிறமோ, spiderman, superman எல்லாம் பிடிக்கக்கூடாதா? அல்லது ஆண்களுக்கு pink நிறமோ, இளவரசிகளோ பிடிக்கக்கூடாதா? உங்கள் குழந்தைகளுக்கு என்ன பிடிக்கவேண்டும் என்பதைக் கூட இந்த வர்த்தக உலகம்தான் தீர்மானிக்க வேண்டுமா?

ஆனால் வர்த்தகத்தை மட்டுமே குறை சொல்லிவிட முடியாது. அவர்கள் எதை விற்றாலும் வாங்கக்கூடிய சமூகமாக நாங்கள் இருக்கின்றோமே.

இந்த pink and blue வேற்பாட்டினூடாக உங்கள் குழந்தைகளுக்கு எதைக் கற்றுக் கொடுக்கின்றீர்கள் தெரியுமா?

இந்த உலகத்தில் blue, pink என்று இரண்டு வண்ணங்கள் இருப்பதுபோல, இரண்டே இரண்டு பாலினம்தான் உண்டு. அவ்விரு பாலினங்கள் மட்டுமே இச்சமுகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும். ஏனைய பாலினங்கள் அனைத்தும் ஒதுக்கப்படும். நீங்களும் ஒதுக்குங்கள்.

Pink மென்மையானது. பெண் குழந்தைகளே நீங்களும் மென்மையானவர்களாக, பெண்களுக்கென வரையறுக்கப்பட்ட குணங்களுடன் இருக்கவேண்டும். Blue நிறம் பிடித்தாலோ அல்லது ஆண்களுக்கான செயற்பாடுகள் பிடித்தாலோ நீங்கள் tomboy ஆகக் கருதப்படுவீர்களே தவிர தைரியமான பெண்ணாகவோ, வித்தியாசமான சிந்தனைக்கோலமுடையவர்களாகவோ கருதப்படமாட்டீர்கள்.

ஆண் குழந்தைகளே நீங்கள் blue நிறத்தைப் போன்று வலிமையானவர்களாக இருக்க வேண்டும். Pink நிறம் பிடித்தால் girly ஆக இருக்கும். உங்களுக்கு அழுவதற்குக்கூட சுதந்திரம் கிடையாது. என்னைப்பொருத்தவரையில் மனிதர்களின் உணர்வுகளிலேயே மிகச்சிறந்த உணர்வு அழுகை. ஏனோ ஆண்களுக்கு அதற்குக் கொடுத்துவைக்கவில்லை.

ஒரு பெண் குழந்தையை தைரியமாக வளரவிடுவதும் கிடையாது. ஒரு ஆண் குழந்தையை சுதந்திரமாக அழ விடுவதும் கிடையாது.

Blue, pink இனூடாக பெண் இப்படித்தான், ஆண் இப்படித்தான் என்ற வேறுபாட்டை குழந்தைகளிடம் புகுத்தாதீர்கள். ஒரு முறை இந்த வேறுபாடு அவர்கள் மனதில் பதிந்தால் அதை அழிப்பது அவ்வளவு சுலபமல்ல. இன்றுவரை எமது சமூகம் tomboy, girly என்றுகூறி கேலி கிண்டல் செய்வதை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. என்னைப்பொருத்தவரையில் அவை தேவையற்ற வார்த்தைகளே. ஒவ்வொரு ஆணுக்குள் இருக்கும் பெண்மையையும், ஒவ்வொரு பெண்ணுக்குள் இருக்கும் ஆண்மையையும் பார்க்கவும், போற்றவும் தவறுகின்றோம். இந்த வேற்றுமைகளைத் தகர்த்தெறிந்து ஒவ்வொரு மனிதனையும், அவனது தனித்துவத்தையும் ஏற்றுக் கொண்டாட எமது குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்போம்.

ஒரு சமத்துவமான, stereotypes இல்லாத உலகம் உருவாக்க வேண்டுமென்றால் blue pink நிறங்களை மட்டுமே குழந்தைகளிடம் திணிக்காதீர்கள். வண்ணங்கள் அழகானவை. அவற்றில் எதற்குப் பிரிவினை.

## i know why some caged birds sing



*Jeevika Vivekananthan*

i know why some caged birds sing.
i know why some caged birds here sing
with the caged birds there.
i know why some freed birds sing for the
caged birds everywhere.
and i know why some giant free birds sing
selectively, so cunningly,
the song of freedom and justice,
as if they have mastered it to conduct it.
therefore, i know, more than anything,
why birds of our kind, freed or caged,
must sing together,
louder and louder until we all are free.



## தலைமுறை இடைவெளிகளைப் புரிந்துகொள்ளுதல்

# Minding the Gap

***இளவேனில் குழுமம்***

*அண்மையில் பதின்ம வயதைச் சேர்ந்த இரண்டாம் தலைமுறை இளையோரோடு ஒரு கலந்துரையாடல் நிகழ்வை இளவேனில் குழுமம் ஒழுங்கமைத்திருந்தது. மிக இயல்பான, எளிமையான விடயங்கள் அங்கு பேசப்பட்டன. மத்திம வயதுள்ள இளவேனில் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த மூவருடன் பதினெட்டு வயது பூர்த்தியாகிய இளையோர் எட்டுபேர் இணைந்து இக்கலந்துரையாடலைச் செய்தனர். இரண்டு மணி நேரத்துக்குமதிகமாக நீடித்த இந்நிகழ்வினூடாக குறைந்த பட்சம் ஒரு தலைமுறை மற்றைய தலைமுறையோடு முன்முடிபுகள் இன்றிப் பேசலாம் என்பதையும் ஒருவரிடத்திலிருந்து மற்றவர் கற்றுக்கொள்ள ஏராளம் விசயங்கள் இருக்கின்றன என்பதையும் தெரிந்துகொள்ளவாவது முடிந்தது. கலந்துரையாடல் என்றாலும் கேள்விகளையும் பேசப்பட்ட விசயப்பரப்புகளையும் இளவேனில் ஆசிரியர் குழுவே நிர்ணயித்தது என்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது.*

**“ஒரு எளிமையான கேள்வியிலிருந்து ஆரம்பிக்கலாமா? நீங்கள் அண்மையில் பார்த்த திரைப்படம் எது?”**

இக்கேள்விக்குப் பெரும்பான்மையான இளையவர்கள் VCE பரீட்சைக்குத் தயார் செய்துகொண்டிருந்தமையால் திரைப்படங்கள் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றார்கள். சில அண்மையில் வெளியான தமிழ்த் திரைப்படங்களும் குறிப்பிடப்பட்டன. ஒரு இளையவர் அண்ணாவின் தூண்டுதலால் ‘அன்பே சிவம்’ பார்த்ததாகச் சொன்னார். அதிலிருந்த அரசியல் சமூகக் கருத்துகளும் பாடல்களும் பிடித்திருந்தன என்றார்.

**“பாடல்களாவது கேட்பீர்கள் அல்லவா? உங்களை ஒரு அறைக்குள் அடைத்துவைத்திருக்கிறார்கள். செல்பேசியோ கணினியோ கிடையாது. வேறு பொழுதுபோக்குகள் கிடையாது. ஆனால் ஒரு இசைத்தொகுப்பை மாத்திரம் கேட்கலாம் என்றால் எந்த இசைத்தொகுப்பைக் கேட்பீர்கள்?”**

இளையவரின் பதில்கள்:

விண்ணைத் தாண்டி வருவாயா - ஏ. ஆர். ரகுமான்

எதிர் நீச்சல் - அனிருத்

வேலையில்லாத பட்டதாரி - அனிருத்

Painters and Dockers

Jazzy

Riano

அயன் - ஹரிஸ் ஜெயராஜ்

மாஸ்டர் - அனிருத்

வாரணம் ஆயிரம் - ஹரிஸ் ஜெயராஜ்

பெரியவரின் பதில்கள்:

தளபதி - இளையராஜா

கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன் - ஏ. ஆர். ரகுமான்

காதலன் - ஏ. ஆர். ரகுமான்

**"உங்கள் குடும்பங்களில் சுற்றுலா செல்லும் இடங்களை யார் தீர்மானிக்கிறார்கள்?"**

இளையவரின் பதில்கள்:

பெற்றோர்தான் தீர்மானிக்கிறார்கள். நாங்கள் இடங்களைச் சிபாரிசு செய்யலாம். ஆனால் முடிவுகளை எடுப்பது அவர்கள்தான். நாங்கள் தனியாகச் சுற்றுலா செல்வது அரிது. பெற்றோரும் அவர்களது நண்பர்களின் குடும்பத்தினரும் ஒன்றாகச் செல்வர். அவர்கள் தமக்குள் சொந்தக் கதைகளை உரையாடுவார்கள். எமக்கு அலுப்பாகவும் அயர்ச்சியாகவும் இருக்கும். இப்போது நாம் கொஞ்சம் வளர்ந்துவிட்டதால் நாம் நம்பாட்டுக்கு ஏதாவது செய்கிறோம். எங்களுக்கு நீச்சல் என்றால் பிடிக்கும். சுற்றுலாக்களில் என்ன சாப்பிடுவது என்பதையும் பெற்றோரே தீர்மானிக்கிறார்கள். சுற்றுலா முடிந்து வீட்டுக்கு வந்தவுடன் எல்லோருக்கும் வீட்டுச் சாப்பாட்டில் ஆர்வம் வந்துவிடுகிறது.

பெற்றோருக்குத் தம் சொந்த ஊருக்குப் போவதிலும் விருப்பு அதிகம். ஆனாலும் வேறு இடங்களுக்கும் செல்லவேண்டும் என்பதை அவர்களும் புரிந்து வைத்திருக்கிறார்கள். ஒருதடவை சொந்த ஊர் என்றால் அடுத்தமுறை வேறு இடங்களுக்குச் செல்வோம். இப்போது பதினெட்டு வயதாகியதால் நண்பர்களோடு பிரேசில் போன்ற நாடுகளுக்குத் தனியே செல்லவேண்டும் என்று எமக்கு ஆர்வம் வந்துவிட்டது. ஆனால் பெற்றோருக்கு எம்மைத் தனியே விடுவதில் தயக்கமும் அச்சமும் உண்டு.

சொந்தக்காரர்களிடம் போவதில் சில சிக்கல்களும் இருக்கின்றன. முக்கியமான சிக்கல் எங்கள்மீதான கவனிப்புத்தான். எல்லோரும் எம்மை வியந்து பார்க்கிறார்கள். நாம் ஒருமுறை ஐரோப்பிய நாட்டிலிருக்கும் உறவுக்காரரைச் சந்திக்கச் சென்றோம். அங்கிருந்தவர்கள் நாம் பேசும் சுத்தத் தமிழைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் பாராட்டினார்கள். இதனால் அங்கிருந்த குழந்தைகள் எம்மீது கோபமும் வெஞ்சினமும் கொண்டு எம்மோடு பேசுவதைத் தவிர்த்துவிட்டன. குழந்தைகளை எதற்காக ஒப்பிடவேண்டும் என்று புரியவில்லை. அம்மா அப்பாவின் சொந்த ஊருக்குச் செல்லும்போதும் இவ்வாறான தொடர்பாடல் சிக்கல்கள் இடம்பெறுவதுண்டு. மொழி, கலாசாரம் என பல வேறுபாடுகள் நமக்கு உண்டு. இவற்றைக்கடந்து உறவு பாராட்ட பல முயற்சிகளைச் செய்யவேண்டியிருக்கிறது.

பெரியவரின் பதில்கள்:

அனேகமான இடங்களை குடும்பத் தேவைகள்தான் தீர்மானிக்கின்றன. திருமணங்கள், வயோதிபர்களைத் தரிசித்தல் போன்ற காரணங்களைத் தவிர்க்கமுடிவதில்லை. ஒரு பெண்ணாக திருமணத்துக்கு முன்னர் தனியாக நண்பர்களுடன் பயணங்களைச் செய்திருக்கிறோம். ஆனால் திருமணமான பின்னர் கணவர் பிள்ளையோடுதான் பயணங்கள் இடம்பெறுகின்றன. தனியாகச் சென்றதேயில்லை. செல்லவேண்டும். ஒருவர் தம் பயணங்களை கணவன் மனைவி இருவரும் சேர்ந்தே தீர்மானிப்பதாகச் சொன்னார். கணவனோ, மனைவியோ அவரவருக்கான தனியான பயணங்களையும் செய்வதாகச் சொன்னார்.

இப்போது இளையோர் பெரியவர்களிடம் **'உங்கள் குழந்தைகள் தகுந்த வயதை எட்டியதும் தனியாக நண்பர்களுடன் சுற்றுலா செல்ல அனுமதிப்பீர்களா?'** என்று கேட்டனர்.

அதற்குப் பெரியவர்கள் எல்லோருமே அனுமதிப்போம் என்று ஏகோபித்த குரலில் சொன்னார்கள். நான் சிறுவனாக இருக்கும்போது வீட்டின் நிதிச்சூழலும் போர்ச்சூழலும் அதற்கு அனுமதிக்கவில்லை. என் குழந்தைகளுக்கு ஆர்வமிருப்பின் அவர்களுக்குத் தடை போடப்போவதில்லை என்றார் ஒருவர். பெண்ணாக நான் என் நண்பர்களுடன் அப்படிப் பயணித்த காலம் பொன்னானது. அதை நான் நிச்சயம் என் குழந்தையும் அனுபவிக்க வழி செய்வேன்.

**"அரச பாடசாலைகளுக்கும் தனியார் பாடசாலைகளுக்குமான வேறுபாடுகள் என்ன? எந்தப் பாடசாலைக்குச் செல்லவேண்டும் என்பதைத் தீர்மானிப்பது யார்?"**

இளையவரின் பதில்கள்:

பெற்றோர்தான் தீர்மானிக்கிறார்கள் என்று அனைவரும் சொன்னார்கள். வந்திருந்த இளையோரில் பெரும்பான்மையினர் அரச பாடசாலைகளில் கல்வி பயின்றவர்கள். ஒரிருவர் தனியார் பாடசாலையைச் சேர்ந்தவர்கள். தாம் படித்தது ஒரே பாடசாலை என்பதால் பாடசாலைகளை ஒப்பிடுவது சிரமம் என்றார்கள். அறிந்தளவில் இவ்விரு பாடசாலை அமைப்புகளிலும் பெரிதாக வேறுபாடுகள் இல்லை என்றனர். எல்லோருமே படிக்கிறோம். பிடித்தால் பல்கலைக்கழகம் செல்கிறோம். நல்ல வேலையைச் செய்கிறோம். இதில் தனியார் பாடசாலைக்கு ஏன் அவ்வளவு பணத்தைக் கொட்டவேண்டும் என்று ஒரு இளையவர் சொன்னார். தனியார் பாடசாலை தெரிவுக்காகத் தயார்படுத்தும் நாட்களில் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆனதாக ஓரிருவர் குறிப்பிட்டனர். அதைவிட இளையவர்களை ஒப்பிட்டுப் பேசி ஒரு toxic சூழலை நாம் உருவாக்குகிறோம் என்றும் குறிப்பிட்டனர்.

பெரியவரின் பதில்கள்:

தனியார் பாடசாலைகளில் புலமைப்பரிசில் அன்றி மொத்தமாகப் பணம் கட்டுவது சிரமம். அதற்கான value of money கிடைக்குமா என்பது சந்தேகமே. ஆனாலும் peer

pressure என்றொரு விசயமும் இருக்கிறது. இதுபற்றி விரிவாக நம் சமூகத்தில் உரையாடவேண்டும் என்றார்கள்.

**“பூப்புனித நீராட்டு விழாக்கள் பற்றிய உங்கள் கருத்து என்ன?”**

சில ஆண் பிள்ளைகளுக்கு சாமத்திய வீடு, பூப்புனித நீராட்டு விழா, saree ceremony என்றால் என்ன என்று விளங்கவில்லை. பெண்கள் முதற்தடவையாக மாதவிடாயை அடைவதைக் கொண்டாடும் நிகழ்வு என்றதும் புரிந்தது. ஒருத்தர் அதைக்கேட்டதும் கூச்சப்பட்டார். பின்னர் தீவிரமாகப் பதில்கள் வர ஆரம்பித்தன.

இளையவரின் பதில்கள்:

சடங்குகளை ஏற்றுக்கொள்ள முடிகிறது. ஆனால் ஆடம்பரம் தேவையற்றது. இது ஒரு show offதான். என்னை என் அண்ணனைக்கூட பார்க்கவேண்டாம் என்றனர். Bullshit.’

இதனை மாதவிடாய் கண்ட பெண்ணே முடிவெடுத்தல் வேண்டும். அந்தப் பெண் விரும்பினால் செய்யலாம்.’

இதுபற்றி நான் சிந்தித்துப்பார்த்ததே இல்லை.’

கொண்டாடலாம். ஒரு அளவுடன் இருத்தல் வேண்டும். ஹெலிஹப்டரில் பெண்ணைக் கொண்டுசென்ற அவலத்தை யூடியூபில் பார்த்தேன்’

ஆண்களுக்கும் இவ்வகை கொண்டாட்டத்தைச் செய்யலாம். பெண்களுக்கு மட்டும் ஏன் இத்தனை செலவழிக்கிறார்கள்? எமக்கும் உரிமை வேண்டும்.’

இதற்கான பதில் என்னிடம் இல்லை. பலரை அழைத்து ஒரு பொது நிகழ்வாக ஏன் இதனைச் செய்யவேண்டும் என்று விளங்கவில்லை.‘தேவையற்றது. அந்தப் பெண்கள்தான் முடிவு செய்யவேண்டும்’

பெரியவரின் பதில்கள்:

எனக்கு இதில் உடன்பாடில்லை. பெண்கள் முடிவு எடுக்கலாம்தான். ஆனால் அது ஒரு informed decision ஆக இருக்கவேண்டும். பொங்கல் பண்டிகை என்றால் அது சூரியனுக்கும் உழவருக்கும் நன்றி சொல்லும் திருநாள் என்று சொல்கிறோம் அல்லவா? அதுபோலவே சாமத்திய வீடு என்றால் நீ பெரியவளாகிவிட்டாய், உனக்குக் குழந்தை பெற்றுக்கொள்ளும் அருகதை வந்துவிட்டது, நீ திருமணத்துக்குத் தயார் என்பதை அறிவிப்பதற்காகத்தான் இக்கொண்டாட்டம் என்ற காரணத்தை மாதவிடாய் கண்ட பெண்ணிடம் விளக்குதல் அவசியம். அதன்பிறகும் அவர் சம்மதித்து பெற்றோருக்கும் அது சரி என்று தோன்றினால் நாம் என்ன செய்யமுடியும்?’

நான் இதற்கு முற்றிலும் எதிரானவன். நான் ஒரு தொழின்முறை புகைப்படக் கலைஞர். முன்னரெல்லாம் சாமத்திய வீடுகளுக்கும் புகைப்படம் எடுப்பேன். இப்போது கொள்கைரீதியாக முரண்படுவதால் அவற்றைத் தவிர்த்துவிடுகிறேன்.’

'நான் பதின்மூன்று வயது சிறுமியாக இருக்கும்போது இக்கொண்டாட்டத்திலிருக்கும் fantasy எனக்குப் பிடித்திருந்தது. அதனால் அதனைச் சந்தோசமாக அனுபவித்தேன். ஆனால் இப்போது அறிவு முதிர்ச்சி வந்ததும் இதனை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. என் மகளுக்கு நான் ஒரு போதும் சாமத்திய வீடு செய்ய மாட்டேன்.'

**"திடீரென்று உங்களுடைய சகோதரர் தான் ஒரு தற்பாலீர்ப்பாளர் *(gay or lesbian)* என்பதைச் சொல்லி அதனை எப்படிப் பெற்றோருக்குத் தெரிவிப்பது என்று தடுமாறினால் உங்களுடைய ஆதரவு எப்படியிருக்கும்?"**

*இளையவரின் பதில்கள்:*

'இது எல்லாம் சாதாரணமான விசயம். உங்களுடைய உறவைப்பற்றிப் பெற்றோரோடு சொல்லவோ ஆலோசிக்கவோ தேவையில்லை'

*உங்களோடு வைத்துக்கொள்ளுங்கள். என்னுடைய பெற்றோர் இதனைப்பற்றிக் கவலைப்படமாட்டார்கள்'*

*என் பெற்றோர் எதிர்த்தாலும் நான் என் சகோதரருக்குத் துணை நிற்பேன்'*

*பெற்றோர் சம்மதிப்பார்கள் என்றுதான் நினைக்கிறேன்.'*

*பெற்றோருக்குக் கடினமாகத்தான் இருக்கும். ஆனால் ஈற்றில் சம்மதிக்கத்தான் வேண்டும்'*

*இதனை ஏற்றுக்கொள்ள பெற்றோருக்குக் கொஞ்சம் காலமெடுக்கும். தனிப்பட்ட கருத்தைவிட சமூகமும் சுற்றமும் இதனைப்பார்க்கும் என்ற அச்சமே* (peer pressure) *தான் அதிகமாக இருக்கும்'*

*பெரியவரின் பதில்கள்:*

*இதனை ஏற்றுக்கொள்வதில் எனக்கு எவ்விதத் தயக்கமும் இல்லை'*

*இது கடினமும் சற்றுச் சிக்கலானதும்கூட.* Delicate *ஆன விசயம். நாம் ஒருவித மன உளைச்சல் வளையத்துள் சிக்கி வெளிவரவேண்டியிருக்கும்'*

*நான் அழுவேன் என்று நினைக்கிறேன். என் சகோதரிமீது கோபம்கூட வரும். ஆனால் அவளைப் புரிந்துகொண்டு அவளை அவளாகவே ஏற்றுக்கொள்வேன். இமைய மலையைக்கூட ஏறி இறங்கிவிடுவேன். ஆனால் அம்மா அப்பாவிடம் இதனைச் சொல்லவே மாட்டேன். சாத்தியமே இல்லை'*

**"பெற்றோர் முதியோர் இல்லத்துக்குச் செல்வது பற்றிய உங்கள் கருத்து என்ன?"**

*இளையவரின் பதில்கள்:*

*எம் பெற்றோர் எம்மோடு வாழவே விரும்புகிறோம்'*

பெற்றோர்தான் எம்மைக் கஷ்டப்பட்டு வளர்க்கிறார்கள். அவர்களை எப்படி முதியோர் இல்லத்தில் தவிக்க விடுவது? முடியாது'

பலர் நினைக்கிறார்கள் எங்கள் தலைமுறை பெற்றோர்களைக் கைவிடுகிறது என்று. அது ஒரு தவறான எண்ணப்போக்கு. Taboo. நாம் நம் பெற்றோரைக் கனம் பண்ணவே விரும்புகிறோம்'

"நீங்கள் இளையவர்கள். தனியர்கள். இப்போதும் பெற்றோரோடு வாழ்கிறீர்கள். நீங்கள் தனியாக உங்கள் வாழ்க்கையை ஆரம்பித்துத் துணையையும் தேடி உங்களுக்கு என்று குடும்பம் ஆனபின்னர் இதே முடிவில் இருக்கமுடியுமா? உங்கள் துணையினது முடிவும் இங்கே முக்கியமல்லவா?"

உண்மைதான். வேண்டுமென்றால் அருகிலேயே வேறோரு வீட்டில் அவர்கள் வாழலாம். ஆனால் முதியோர் இல்லம் வேண்டாம். முதியோர் இல்லத்தில் பெரியவர்கள் சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை என்று பல செய்திகள் வருகின்றன.'

பெரியவரின் பதில்கள்:

எம் பெற்றோர் இவ்வகை வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டவர்கள் அல்லர். அவர்களை இயலுமானவரை தனிவீட்டிலோ அல்லது எம்மோடு கூடவெ வைத்து வாழவே விரும்புகிறோம். ஆனால் எதிர்காலத்தில் நாம் நம் குழந்தைகளுக்கு இந்தச் சுமையை ஏற்ற விரும்பவில்லை. எமக்கான வாழ்வையும் எதிர்காலத்தையும் நாம் தீர்மானிப்போம். தனிவீடோ, அல்லது வசதிக்கேற்ற முதியோர் இல்லைத்தியோ நாம் சமயத்துக்கேற்ப தீர்மானிப்போம்.

இவற்றையெல்லாம் உரையாடிக்கொண்டிருக்கையிலேயே இரண்டு மணி நேரம் கழிந்துவிட்டது. இரண்டு தலைமுறைகளும் தமக்குள்ள இத்தனை ஆழமாகவும் சுவாரசியமாகவும் இவ்வளவு நேரம் பேசலாம் என்பதே பெரும் மன நிறைவைக் கொடுத்தது. கேள்விகள் எம்மிடம் ஏராளம் இருந்தன. அவற்றைப் பிறிதொரு நாளுக்கு ஒத்திவைத்தோம்.

நிகழ்வில் இறுதியில் rapid fire சுற்று ஒன்றை இடம்பெற்றது.

**"பிடித்த *Clothing Brand*"**

இளையவரின் பதில்கள்:

Champion', 'Nike', 'Tommy', 'Glassons', 'brand முக்கியமில்லை. அழகான உடைகளைத் தேடி அணிவேன்'

பெரியவரின் பதில்கள்:

Tommy', எனக்கு brands என்றாலே கண்ணில் காட்டக்கூடாது. முதலாளித்துவத்தின் ஏமாற்றுவேலை இது.

**“இஸ்ரேலின் தற்போதைய அதிபர் யார்?”**

பலருக்கும் தெரிந்திருக்கவில்லை. ஒரேயொரு பெரியவர் நேத்தன்யாகு என்ற பதிலைச் சொன்னார்.

**“உங்கள் எல்லோரும் வாக்களிக்கும் உரிமை இருந்திருந்தால் *Indigenous voice to parliament* சர்வசு வாக்கெடுப்பில் என்ன செய்திருப்பீர்கள்?”**

ஒன்பதுபேர் ஆதரித்து வாக்களித்திருப்போம் என்றார்கள். இருவர் இதுபற்றி எதுவுமே தெரியாது என்றார்கள்.

**“விரும்பி விளையாடும் கேம் எது?”**

Pokemon, GTA, FIFA, Hollywood Legacy, Puzzle, Mariocart, Stick Cricket, Risk, Ghost, மூவர் தாம் எவ்வித கணினி, கார்ட்ஸ் விளையாட்டுகள் விளையாடுவதில்லை என்றார்கள்.

**“இவ்வாறான கலந்துரையாடல்களை எதிர்காலத்தில் ஒருங்கிணைத்தால் கலந்துகொள்வீர்களா?”**

பொதுவாக எல்லோருமே கலந்துகொள்வோம் என்றார்கள். வித்தியாசமான நிகழ்வாக இது அமைந்தது, நிகழ்ச்சியில் மேலும் பல விளையாட்டுகள், களியாட்டங்கள் இடம்பெறும் எனத் தாம் எதிர்பார்த்ததாகச் சொன்னார்கள்.

இரவுணவின்போது மறுபடியும் இளையவர் தமக்குள் கூடி நின்று பேசியதையும் பெரியவர்கள் தம் கதைகளை உரையாடியதையும் கவனிக்க முடிந்தது. ஆனாலும் ஒரு சிலர் முன்வந்து சில விசயங்களைச் சொன்னார். இவ்விதழில் இதே நிகழ்வை தன் பார்வையில் எழுதிய அபிதாரிணி தானாகவே முன் வந்து கட்டுரை வரையப்போவதாகச் சொன்னார்.

இளையோரைப் பெரியோரும் பெரியோரை இளையோரும் புரிந்துகொள்ளுதலும் தலைமுறை இடைவெளிகளை உள்வாங்கி அங்கீகரிப்பதும் இவ்வகை நிகழ்வுகள் மூலம் கொஞ்சமேனும் செய்யலாம் என்ற நம்பிக்கை வருகிறது. இது கூட்டம்போட்டு செய்யும் காரியம் மட்டுமல்ல. நம் குடும்ப ஒன்றுகூடல்களிலும் பிறந்தநாள் களியாட்டங்களிலும் ஏன் இரவுணவு உரையாடல்களிலும்கூட இவ்வகைக் கருத்துகளை நாம் பரிமாற முயற்சி செய்யலாம். எப்போதும் பெரியவர்கள் அறிவுரை சொல்லி இளம் தலைமுறையை வழி நடத்த முயற்சிப்பதையும் இளையவர்கள் பெரியவர்களுக்கு ஒன்றுமே தெரியாது, பூமர்ஸ் என்று எள்ளி நகையாடுவதையும் தாண்டி பரஸ்பரம் அவர்தம் கதைகளைச் செவிமடுத்துக் கேட்பது மிக முக்கியமான விடயமாக நமக்குத் தெரிந்தது.

இவ்வகை முயற்சிகள் நம் புரிதல்களின் இடைவெளியைக் கொஞ்சமேனும் சுருக்கினால்கூட அது பெருவெற்றியல்லவா?

## இளையோர் சந்திப்பு

# Bridge The Gap



***அபிதாரணி சந்திரன்***

கார்த்திகை 25ம் திகதி கேசி தமிழ் மன்றம் "Bridge the Gap" என்ற ஒரு இளையோர் சந்திப்பைத் தயார்ப்படுத்தியிருந்தது. அன்று சமுதாயத்தில் பேச விருப்பப்படாத தலைப்புகளைப் பற்றிய எமது அபிப்பிராயங்களும், 40-45 வயதைக்கொண்ட சில மூத்தவர்களின் அபிப்பிராயங்களையும் கலந்துரையாடினோம். அத்துடன் எமக்குப் பிடித்த விடையங்களைப் பற்றியும் கதைத்திருந்தோம். இதனால் தலைமுறை வித்தியாசங்களையும், ஒற்றுமைகளையும் கண்டுபிடிக்கக் கூடியதாக இருந்தது. அவற்றில் சில சர்ச்சைக்குரிய தலைப்புகளைப் பற்றிய எனது அபிப்பிராயங்களைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

### *பூப்புனித நீராட்டுவிழா*

தற்காலத்தில் பூப்புனித நீராட்டு விழாக்களின் நோக்கம் மாறிவிட்டது. மக்கள் தங்களிடம் இருக்கும் வசதியைப் பிறருக்குக் காட்டிக்கொள்வதற்கான வாய்ப்பாக இப்பூப்புனித நீராட்டு விழாக்கள் இருக்கின்றன என்று நான் நம்புகிறேன். பெற்றோர் தம்மிடம் இருக்கும் பணத்தையும் வசதியையும் தங்கள் மகள்கள் மண்டபத்திற்க்கு ஹெலிகொப்டர் அல்லது லிமோவில் வருவதன்மூலம் தெரியப்படுத்துகிறார்கள். சாமத்திய வீடுகளின் நோக்கமே இங்கு பலருக்குத் தெரியாமலே அதை ஒரு பெரும் கொண்டாட்டமாகச் செய்கிறார்கள். தனது மகள் உடல் ரீதியாக திருமணத்திற்கு தயாராகி விட்டாள் என்பதை எதற்கு விளம்பரப்படுத்தவேண்டும்? ஏனென்றால் பெண் ஒரு பொருளாகப் பார்க்கப்படுகிறாள். ஒரு பெண்ணின் முதல் மாதவிடாயைக் கொண்டாடும் மக்கள், மாதம் மாதம் வந்தால் தீட்டாகப் பார்ப்பார்கள். சில சடங்குகள் ஏற்றுக்கொள்ளப்படலாம் ஆனால் அத்தோடு வருகின்ற மூடநம்பிக்கைகளைத் தவிர்க்கலாம். உதாரணத்திற்கு ஒரு கிழமைக்கு மேலாக ஒரு அறையில் பூட்டிவைப்பது, அப்பா, அண்ணா, தம்பியைப் பார்க்கக்கூடாது என்று சொல்வதெல்லாம் பிற்போக்குத்தனமாக இருக்கிறது அல்லவா? நாம் எமது பிள்ளைகளுக்குப் பூப்புனித நீராட்டு விழா வைப்போமா என்ற கேள்வி எழும்பியபோது அனைவரும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இல்லை என்று சொன்னோம். முற்போக்குத்தனமாக அடுத்த தலைமுறையினர் இருப்பார்கள் என்ற நம்பிக்கை வந்தது.

### *தனியார் பாடசாலையா அரசாங்கப் பாடசாலையா சிறந்தது.*

தனியார் பாடசாலைக்கும் அரசாங்கப் பாடசாலைக்கும் பெரிய வித்தியாசங்கள் இல்லை என்பது எனது அபிப்பிராயம். இரு பள்ளிக்கூடங்களிலும் படிக்கும்

மாணவர்கள் படிக்கின்றார்கள், பின் பல்கலைக்கழகம் செல்கிறார்கள், அதன்பின் வேலைக்கும் செல்கிறார்கள். ஆனாலும் தனியார் பாடசாலைக்குச் செல்லும் சில மாணவர்களது பெற்றோர்களுக்குத் தங்கள் பிள்ளைகள் தனியார் பாடசாலைக்குச் செல்கிறார்கள் என்ற தலைக்கனம் இருக்கிறது. அதனால் தனியார் பாடசாலைதான் சிறந்தது என்று சமுதாயம் நம்புகிறது. அதிகக் கட்டணம் செலுத்துவதாலும், சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் பெறுவதாலும், சிறந்த ஆசிரியர்களிடம் கல்வி கற்பதனாலும் வாழ்க்கை செழித்திடாது.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்."

கடந்த மூன்று ஆண்டுகளில் தனியார் பாடசாலை மாணவர்கள் சமூக வலைத்தளங்களில் பெண்களைப் பற்றி இழிவாகப் பேசிய விடையங்கள் வெளிவந்ததை அனைவரும் செய்திகளில் பார்த்தோம். ஆனால் அதே நேரம் அரசாங்கப் பாடசாலைகளிலும் தவறுகள் நடந்து கொண்டுதான் இருக்கிறது. ஆகையால் படிக்கின்ற பிள்ளை எங்கேயும் படிக்கும் என்பது உண்மை.

### *நாம் வளர்ந்து எமது பெற்றோரை முதியோர் இல்லங்களில் சேர்ப்போமா?*

இக்கேள்விக்கு அனைவரும் இல்லை என்று கூறியிருந்தோம். சொந்த நாட்டில் வாழமுடியாமல் புலம்பெயர்ந்த நாட்டிற்கு வந்து, தெரியாத மொழியை கற்க முயற்சி செய்து, வேலை எடுத்து எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் எங்களை வளர்த்தார்கள். அவர்களை முதியோர் இல்லங்களில் விடுவதற்கு எமக்கு ஆசை இல்லை. ஒரு செவிலி மாணவியாக இருக்கும் நான் சில காலம் முதியோர் இல்லத்தில் வேலை பார்த்தேன். முதியோர்களைப் பார்க்கும்போது மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அவர்களுக்குச் சிகிச்சை செய்யும்போது, என்னுடைய பெற்றோர்களுக்கு இந்த நிலை வரக்கூடாது என்றுதான் எண்ணினேன். இதே போன்ற கருத்துகளை மற்றைய இளைஞர்களும் கூறியிருந்தார்கள். முதியோர்களை முதியோர் இல்லங்களில் நன்றாகப் பார்த்துக்கொண்டாலும் ஒரு சிறையில் இருப்பதுபோலிருக்கும். ஆனால் காலத்தின் கட்டாயத்தினால் பலர் விருப்பமின்றி தமது பெற்றோர்களை முதியோர் இல்லங்களில் சேர்கின்றார்கள். கவலையான விடையமாக இருந்தாலும் சூழ்நிலைக்கு ஏற்றபடி எம்மை மாற்றிக்கொள்ளலாம்.

எனவே இந்த இளையோர் சந்திப்பினால் இளைய சமுதாயத்தினர்களிடையே இருக்கும் ஒற்றுமையையும் வித்தியாசங்களையும் பார்த்தோம். எமது எண்ணங்களை மையமாக வைத்து ஒரு முற்போக்கான எதிர்காலத்தை நோக்கிச் செல்கிறோம் என்று அறிந்து கொண்டோம். "Bridge The Gap" என்ற இளையோர் சந்திப்பு மறுபடியும் இன்னும் பிரம்மாண்டமாக நடக்கவேண்டும் என்று நாம், இளைஞர்கள் ஆசைப்பட்டோம்.

**முரண்பாடுகள்**



***தாமரை மதியழகன்***

இரட்டைத் தரம் (double Standard) என்பது எங்களுக்குள் ஊடுருவிப்போன ஒரு விடயம். வாழ்வின் பல கட்டங்களில் எட்டிப்பார்த்துக்கொண்டே இருக்கும்.

ஒரு குழந்தை பிறந்து இரண்டு மாசத்தில் உடம்பு பிரட்டினால் பூரிப்பு. அதுவே கொஞ்சம் பிந்தினால் ஏதோ இழந்துவிட்டதுபோல் உணர்வு. ஒரு உடம்பு பிரட்டலில் ஆரம்பிப்பது அப்படியே தொடரும். அவசரமாக தவழ வேண்டும். தவழ்ந்தவுடன் நடக்க வேண்டும். இரண்டு மாதம் முன்னதாக பல் முளைக்க வேணும். இப்படி எல்லாத்திலயும் பிள்ளை வயசுக்கு மீறின அல்லது சுயமான வளர்ச்சிக்கு முந்தின விடயங்களை அவசர அவசரமாக செய்யும்போது எங்களுக்கு ஒரே புல்லரிப்பு. பிள்ளை ஏதோ மாபெரும் சாதனையை செய்துவிட்டதுபோன்ற ஆனந்தம். இரண்டாம் வகுப்பில் படிக்கும்போது நான்காம் வகுப்பு கணக்கு செய்வதோ இரண்டாம் வகுப்பில் ஐந்தாம் வகுப்பு ஆங்கிலப்புத்தகம் வாசிப்பதோ எல்லாமே எங்களுக்கு சர்வ சாதாரணம்.

படிப்பு மட்டுமல்ல, நீச்சல், காராத்தே, குங்பூ என்று தற்காப்புக்கான கலைகள், சங்கீதம், நடனம் விளையாட்டு என்று எண்ணிலடங்கா விஷயங்கள்.

பிள்ளை வளர்ந்து பதின்ம வயதை அடையும்போது கொஞ்சம் கொஞ்சமாக குழம்பத் தொடங்குகிறோம். இத்தனை நாளும் வீராதி வீரர்களாக சூரர்களாக வளர்ந்த பிள்ளைகள் திடீரென்று ஒன்றும் தெரியாத அப்பாவிகளாக நல்லது கெட்டது தெரியாத அறிவிலிகளாகத் தெரிகிறார்கள். தனியாக பாடசாலைக்கு நடந்தோ, பஸ்ஸிலோ செல்வது, நண்பர்களோடு பொழுதுபோக்குவது, நண்பர்களோடு திரைப்படம் பார்க்கப் போவது, கடைத்தெருவுக்குப் போவது என்று எதற்குமே எங்கள் பிள்ளைகள் தகுதியற்றவர்களாகிறார்கள். அவர்கள் தன்னம்பிக்கை உள்ளவர்களாக பயமற்றவர்களாக வளர வேண்டும் என்று ஊட்டி வளர்க்கிறோம். அதே நேரம் எங்கள் பாதுகாப்பு வளையத்திற்குள்ளேயே இருக்க வேண்டும் என்று கட்டுப்பாடும் போடுகிறோம்.

எதற்கு இந்த இரட்டை தரம்? (Double Standard) மூன்றாம் வகுப்பில் ஐந்தாம் வகுப்பு பாடம் படித்த பிள்ளை கராத்தேயில் எல்லா பட்டியும் பெற்ற பிள்ளை பொது இடத்தில் பாதுகாப்பாக நடந்துகொள்ளாதா? பொறுப்பாக பாதுகாப்பாக நடக்கும் என்ற நம்பிக்கை ஏன் எங்களுக்கு இல்லாமல் போய்விட்டது? அதுவரை அந்தப் பிள்ளை செய்த சாதனைகளின் அர்த்தம்தான் என்ன?

எங்கள் குழந்தைகள் எல்லோருமே ஒரு குறிக்கோளோடும் இலட்சியதோடுதான் வளர்கிறார்கள். அதைவிட ஒரு சுயவிருப்பத்தோடும் இருக்கிறார்கள். அவர்கள் எண்ணங்கள் எம்முடையதோடு ஒத்துப்போகும்வரை சுபம். ஆனால் ஒத்துவராத இடத்தில் எல்லாவற்றிலும் தன் திறமையை நிரூபித்த ஒரு பிள்ளைக்குத் தன் லட்சியத்தை தேர்தெடுக்கத் தெரியாதென்பதே எங்கள் எண்ணமாக இருக்கிறது. அவர்கள் விபரம் தெரியாதவர்களாகிறார்கள். தங்களது பாடங்களையோ துறையையோ தெரிவுசெய்ய முடியாதவர்களாகிறார்கள்.

வாழ்க்கைக்கு தேவையான அறிவைத் தராத இந்தக் கல்வியை ஒருவருடம் முந்திப் படித்தால் என்ன பிந்திப் படித்தால் என்ன என்று கேட்கத் தோன்றுகிறதோ?

இதற்கு காரணம் அவர்கள் தெரிவுகள் தவறாகிப் போய்விடும் என்ற பயமாக இருக்கலாம். இங்கேயும் "தோல்விதான் வெற்றியின் முதல்படி" என்று தத்துவம் பேசுகிறோம். ஆனால் அவர்கள் வாழ்க்கையில் விழுவதற்கு நாங்கள் விடுவதேயில்லை. தூக்கிவிட நாங்கள் அருகிலிருக்கும்போது அவர்கள் விழுந்து எழுவது நல்லதல்லவா. நாங்கள் இல்லாதபோது விழுந்தால் யார் தூக்கிவிடுவார்கள் என்று யோசிக்கிறோமில்லையே.

இந்தப்போராட்டத்தில் முட்டிமோதி தட்டுத்தடுமாறி பெற்றோரையும் தம் விருப்புகளையும் தாம் வாழும் சூழலையும் நம் பிள்ளைகள் சமாளித்து வந்தால், அடுத்ததாக நாம் சொல்லாமல் சொல்வது படித்து முடியும்வரை காதல் செய்யாதே. அதற்கு வயது காணாது. படிப்பு விளையாட்டு சங்கீதம் நடனம் எல்லாவற்றிலும் இரண்டு வருடம் முன்னேற்றமாகச் சாதிக்க வேண்டும். மற்றதெல்லாம் மூன்று வருடம் பிந்தியே செய்ய வேண்டும். இதையும் ஏற்றுப் பல பிள்ளைகள் கருமமே கண்ணாக படித்துப் பட்டம் பெற்று, செய் தொழிலிலும் சிறந்து விளங்குகிறார்கள். எங்களுக்கும் ஒரே பூரிப்பும் பெருமையும். கொஞ்ச நாள் இதே பெருமையில் திளைப்போம். ஆனால் அதையும் அதிக நாட்கள் அனுபவிக்கத் தெரியாது. படித்து முடித்து வேலையில் நிலைபெற்றதும் அடுத்தது திருமணம்தான். எப்போது? யார்? என்ற கேள்விகளால் பிள்ளைகளை துளைத்தெடுப்போம்.

காதல் தானாக அரும்புவது. பருவத்தே பயிர்செய் என்று சும்மவா சொன்னார்கள். எதுவுமே சரியான காலத்தில் நடக்க வேண்டும். அந்த நேரம் வேண்டாம் என்று விட்டு பிறகு எங்கே என்றால்?

பொருத்தமான ஒருவரைப் பார்க்க முடியாமல் போனதும் அதன்பின் நாங்களே யாரென்றாலும் பரவாயிலை கட்டினால் போதும் என்போம்.

எது எப்படியென்றாலும் இந்த நவீன யுகத்திலும் காதல் என்றால் எதிர்ப்புத்தான். இனம், மதம், சாதி, வயது, படிப்பு, தகுதி ஏன்று ஏதோ ஒரு காரணம் சொல்வோம். முடிந்தவரை வாழ்க்கையை நரகமாக்குவோம். ஒரு கட்டத்திற்கு பிறகு எதிர்ப்பிற்கு வலிவு குறைந்ததும் சாதி என்ன இனம் என்ன, மற்ற இனத்தவர்தான் அருமையானவர்கள். குடுமபத்திற்கு ஏற்றவர்கள் என்று நியாயப்படுத்துவோம்.

எதையும் அதன்போக்கிலேயே ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை எங்கே போனது?

திருமணம் முடிந்தால் வேறு விடயங்கள் உருவாகும். ஆணோ பெண்ணோ எங்கள் பிள்ளைகளை இளவரசனாகவோ இளவரசியாகவோதான் வளர்க்கிறோம். எல்லாவற்றிலும் அவர்கள்தான் திறம். படிப்பு, தொழில் செய்காரியம் அனைத்திலும் அவர்களே முதன்மை. இரெண்டாம் இடம் என்பது எங்கள் அகராதியிலேயே இல்லாத வார்த்தை.

வீட்டுப் பொறுப்புகளிலும் பெரும்பாலும் பிள்ளைகளுக்குப் பங்கில்லை. அவர்கள் சாதிக்கப் பிறந்தவர்கள் அல்லவா? வீட்டு வேலை செய்து நேரத்தை வீணாக்கக் கூடாது. அதைவிட 'பிள்ளைகள் பாவம். அவர்களிடம் வேலை வாங்கக்கூடாது" என்ற ஒரு மென்மை காரணமாக இருக்கலாம். 'என்ர வீட்டில் நாந்தான் எல்லாம்

செய்யிறனான்' என்பதில் பெருமைப்படும் தாய்மாரின் போக்கோ, அம்மா என்றால் எல்லா வேலையும் செய்ய வேண்டும் என்ற கட்டுப்பட்டிதனமான எண்ணமோ காரணமாக இருக்கலாம். எது எப்படியோ கடைசியில் பொறுப்புத்தெரியாமல் வளரும் பிள்ளைகள்தான் பின்னால் அனுபவிக்கிறார்கள்.

அந்த இளவரசனும் இளவரசியும் திருமணம் செய்ததும் வீட்டுவேலை செய்ய வேணும், விட்டுக்கொடுக்க வேண்டும். ஒத்துப்போக வேண்டும் பொறுத்துப்போக வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்க்கிறோம். நடக்கக்கூடிய காரியமா?

எங்கள் பிள்ளைகள் அறிவாளிகளாக சாதனையாளர்களாக இருக்கவேண்டும். சங்கீத நாட்டியத் தாரகைகளாக விளங்க வேண்டும். விளையாட்டென்றால் அதிலும் வீரர்களாக விளங்க வேண்டும். அதே நேரம் சமையல்கார்களாக வீட்டை பராமரிப்பவர்களாக குழந்தைகள் பெற்று வளர்த்து குடும்பத்தவர்களாக தேவைப்படின் தாதியராக எல்லாமாக இருக்க வேண்டும். முடியுமா இது? எங்களால் முடியுமா? ஒன்றைப் பெற இன்னொன்றை விட்டுக்கொடுக்க வேண்டுமென்பதுதானே யதார்த்தம்.

இது ஒருபுறமிருக்க கலாசாரம் பண்பாடு என்று இன்னொரு கொடி தூக்குவோம். கலாசாரதிற்கு எத்தனையோ கூறுகள் உண்டு. நாமென்னவோ நாம் உடுக்கும் உடையில்தான் அதுவும் பெண்கள் உடையில்தான் கலாசரமே உயிர்வாழ்கிறது என்று நம்புகிறோம். சட்டைக்கும் கால்சட்டைக்கும் இடையில் இடுப்புத்தெரிந்தால் கலாசார சீர்கேடு. அதுவே சேலை கட்டும்போது இடை தெரிந்தால் அல்லது blouseஇல் யன்னல் கதவு இருந்தால் பிரச்சனை இல்லை. நான் வளர்ந்த காலத்தில் சல்வார் கமீஸ் என்பது ஏற்றுக்கொள்ளப்படாத உடை. இன்று அதுவே எங்கள் கலாச்சார உடையாகிவிட்டது. நாம் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, எங்கள் காலத்திலேயே கலாசாரம் மாறிக்கொண்டிருக்கிறது. ஆனாலும் அதைப் புரிந்துகொள்ளாமல் அதைக் காப்பாற்றவேண்டும் என்று கூவுகிறோம்.அதுவும் பெண்களுக்கூடாக நடக்கவேண்டும் என்பதே எங்கள் எதிர்பார்ப்பு. பல ஆண்களுக்கு வேட்டி என்பதே மறந்துவிட்டது. குருத்தாவே கலாசார உடையாகி விட்டது. அது என்றைக்குமே கலாசார சீர்கேடாக பார்க்கப்படுவதில்லை,

எதற்காக எங்களுக்குள் இத்தனை குழப்பங்கள், முரண்பாடுகள்? எங்களுக்கு எது தேவை என்று தெரியாத அறியாமையா? அல்லது 'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை' என்ற பேராசையா? இந்தக் கேள்வியை எங்களை நாங்களே கேட்டுப்பார்த்தால், சந்தோசமான நிறைவான வாழ்க்கைக்காகத்தான் இத்தனையும் என்று சொல்வோம். இது நாங்கள் ஆணித்தரமாக நம்பும் பதில்தான். ஆனால் இத்தனை முரண்பாடுகளுக்குள் சிக்கித் தவித்து வெளிவரும்போது அந்த சந்தோசம் உண்மையாகவே அங்கே இருக்குமா?

## New Beginnings - Thinking about the Mind

***Samrakshana***



Mental health issues in the South Asian community are often approached from a position of fear, enabled by various factors including stigma and shame. Mental health issues carry a sense of shame, resulting in limited conversation about the issues, which further isolates the individual and limits access to supports. This can lead to the problem becoming a crisis, impacting the individual and the family involved. The need to view mental health as a part of one's overall wellbeing, no different from a physical health issue, would result in a proactive approach in understanding, recognising, and dealing with issues if needed.

This article will explore the pressure of success on one's mental health in our community.

The recipe for success, in our community, is often viewed as meeting and exceeding expectations of oneself and those who matter to them. In a world where there is so much competition, we are all a part of a rat-race. If felt from all angles, the pressure to succeed – in schools, on media, at work, as well as the home – can become counterproductive.

Whilst this pressure is pervasive throughout our culture, it is worth considering the ways in which it manifests within Tamil diaspora and affects mental wellbeing.

There are 3 levels at which we tend to gauge individual success: self, family, and the community.

Within these levels, there are also multiple types of success such as academic, material, monetary, reputational and comparative success.

Academic success is seen to be key in our community. Not only does this kind of achievement provide a person with a great sense of accomplishment and identity, but it is also commonly associated with job security, leading to stable income – from which a person may achieve other successes. The *need to succeed* is passed down from one generation to the next, knowingly and unknowingly. In the case where a parent (or both parents) maybe high-achieving people, there is an urge on their children to maintain this level of achievement. Parents often take pride in the collective familial success, which in itself is a form of success in the eyes of the society. The same can be said for families where the parents may not have had many opportunities– the pressure is still placed on their children, since they want them to have a better life.

Academic achievements and milestones being attributed to individual success is one thing, but they are quite often used to compare an individual in a way which is counterproductive. For example, when a child comes back to a parent with "hey amma/Appa, I got 89% on the English exam!", they may often be met with "Oh, ok – where is the remaining 11%?", or better yet "Kumar uncle's son got 95%, how come you weren't able to?". This kind of feedback, a less obvious form of pressure, can make a child believe that they are not enough as they are unable to attain their parents' validation. In turn, this can cause further stress and anxiety leading to issues with self-worth. Following on from this, children may feel immense pressure to perform consistently at a high level and continue to work hard until they burnout, or conversely become highly worried about failing that they may stop trying. This form of comparison translates into adulthood for many, where their career milestones and lifestyle choices are compared with others within the community. Everything from a person's profession, their salary, their material wealth, up until their marital status is up for commentary and comparison. The scrutiny most often comes from the self, and the closest and loudest critics.


Every person who crosses the sea, especially from a war-torn country, must rebuild their life offshore. Rebuilding not only means re-rooting themselves in a new environment, but rising from despairs, coming to terms with their new life, and being the best versions of themself in a more opportune place. This takes a lot of grit, willpower and reflects resilience - a fire in the belly, blazing strong.

When a person comes from a place of having to fight for mere necessities, immense pressure which forces them to keep achieving and outdoing themselves, to keep surviving. For those who previously have lived in circumstances which were extreme, this may be the only way to combat scarcity of resources, instability, and insecurity.

Some pressure, or *positive* pressure can be useful. Research suggests that parents being involved in their children's learning and being supportive of their success generally results in promoting better holistic outcomes for the children. A constant drive and motivation externally as well as internally may serve in the best interests of an individual. However, despite this, even the best intentions can have negative mental health consequences, as challenges are relative. What one person perceives as a struggle or challenge, will not be the same for other people.

All individuals are built differently, and growth varies for everyone. Everyone's level of tolerance and resilience are also different from one another.

The graph below depicts the expectation, at all levels (self, family, and society), which growth should occur.



Growth is good however it may not always be linear and smooth. There can be pauses or downfalls along the way, and that is perfectly normal, like the image of the graph shown below:



Expectations to perform or present a certain way can lead to unfavourable outcomes, especially if a person's tolerance to pressure is low. Our bodies produce a hormone known as Cortisol, which is released in our blood stream when we are under stress. We may not know that we are stressed, because we learn to override the feeling. However, the body is still reacting and causing physical consequences of stress. This can lead to symptoms such as high blood pressure, headaches, muscle weakness, other ailments. It can also lead to mental health impacts such as palpitations, sleeplessness, overthinking, and constant dread. This is why it is important to consider the *invisible* aspects of mental health.

With competing priorities in our busy lives, tending to our mental wellbeing becomes a privilege. The sacrifices which our older generations have made, allow us the privilege of time and awareness to focus on mental health, and enable us to discover healthier ways of coping through accessing professional resources. Our community has always shown to be resilient and highly adaptable to new conditions despite the various challenges of being migrants and children of migrants. Given which, we would only benefit from the uniting of older and younger generations to explore positive mental health culture together, leading to better holistic health outcomes. Amongst all the competition in this world, the biggest success would be to have a healthy and happy life. As suggested by Tamil saint and poet Vallalaar, "*உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்*", the mind is a temple, and the body a sanctuary.

For more information on mental health with a cultural lens, please visit https://thadam.com.au. Materials can be found on our social media platforms using the handle @thadamofficial.

Join us in raising awareness and become a part of the voice for change.

**DISCLAIMER:**

**If you believe that you may be affected by a mental health issue, please speak to your local GP to gain tailored advice and resources suited to your needs.**

# காலத்தைக் கடந்த ஓவியன்



*துவாரகன் சந்திரன்*

வருடம், இரண்டாயிரத்துப் பத்தொன்பது, COVID-19 உலகத்தைத் தாக்குவதற்கு முன், சென்னை மழை போல நியூ யோர்க் நகரத்தில் அடித்துக்கொண்டிருந்த பொழுதில், இளையராஜா பாடல்களைக் கேட்டுக்கொண்டு, கதிரவன் எனும் ஓவியன் தனது கண்காட்சித் திறப்பு விழாவிற்கான கடைசி ஓவியத்தை வரைவதற்குத் தனது மூளையைக் கிண்டிக்கொண்டிருந்தார். தனது மேசையில் நிறையக் காகிதங்கள் பரவிக்கிடந்தன. அதற்குப் பக்கத்தில் அவரது மனைவி எப்போதோ வைத்த தேத்தணி ஆறிப் பச்சைத் தண்ணீர் போல் மாறிவிட்டது. ஒரு கை தனது நாடியைப் பிடித்துக்கொண்டிருக்க, இன்னொரு கை விரல் நடுவில் ஒரு பேனாவைச் சுற்றிக்கொண்டு சுவரைப் பார்த்தார். சுவரில் தனது முதல் ஓவியங்களும், சில விருதுகளும், தனது முதல் வீட்டின் படமும், அழகாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. தனது இடப்பக்கத்தில் ஒரு புத்தக அலுமாரி இருந்தது. வலது பக்கத்திற்கு நியூ யோர்க் நகரத்தை முழுமையாகக் காட்டும் ஒரு பெரிய யன்னல் இருந்தது. இப்படிக் கண்களுக்கு எழிலான, அழகியல் மதிப்புள்ள காட்சிகளைத் தனது அறையில் வைத்திருந்தாலும், இதையெல்லாம் வரைவதற்குக் கதிரவனுக்கு ஊக்கமோ ஆசையோ வரவில்லை. நேரம் போய்க்கொண்டே இருந்தது. மணி இப்பொழுது 2:11am, கதிரவன் மனதில் ஒன்றும் தோன்றவில்லை. சோர்வாக இருக்கிறதென்று, எழுந்து தனது கண்ணாடிக்குச் சென்றான். அதற்குக்கீழ் உள்ள அலுமாரியில் இருந்து சில மாத்திரைகளைப் போட்டான். மீண்டும் தனது கண்ணாடியைப் பார்க்கும் போது அவனுக்கு ஒரு யோசனை வந்தது. "இதுதான், இதுதான் என்னுடைய மிக முக்கியமான ஓவியம்" என்று நினைத்து தனது மேசைக்கு அவசரமாகச் சென்று வரையத்தொடங்கினான் கதிரவன்.

மறுநாள் மழை இன்னும் அடங்கவில்லை. மணி இப்பொழுது 6:37pm, நியூ யோர்க்கில் இருக்கும் அனைத்து ஓவியர்களும் ஒரே இடத்தில் கூடி இருந்தார்கள். கதிரவன் நெஞ்சில் ஒரு சிறிய பயம், அதே நேரத்தில் பெருமை, ஆனால் அதிலும் ஒரு சிறிய தயக்கம். இருப்பினும் தனது பேச்சை வழங்கவேண்டும் என்தற்காகத் தனது மனதை வலுப்படுத்தி மேடைக்குச்சென்றான்.

"இங்கு என் அழைப்பை ஏற்று வந்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது வணக்கங்களும் நன்றிகளும். ஓவியங்கள் காலமற்றவை, இதனாலேயே இந்தக் கண்காட்சி சாலைக்கு 'காலம்' என்று பெயர் வைத்துள்ளேன். இங்கே எனது ஓவியங்கள் மட்டுமல்ல, கூடிய விரைவில் உங்களுடைய ஓவியங்களும், உலகத்தில் உள்ள பல பெயர் போன பிரபல ஓவியர்களின் படைப்புகளும் வந்து சேரும். காலம் கலையும், ஆனால் கலை எப்பொழுதும் கலையாது. கலை- "

கண்காட்சிச் சாலையின் கதவுகளைத் திறந்துகொண்டு ஒரு பெண் நுழைந்தாள்.

கதிரவன் தடுமாறினான். குழம்பினான்.

அவளைப் பார்த்தவுடன் மழை நின்றது, கீழே உள்ள அனைத்து மக்களும் உறைந்தனர், நேரம் நிறுத்தப்பட்டது, ஆனால் அவள் மட்டும் நகர்ந்தாள். அவளின் நீளமான சுருட்டை முடியில் பட்டும் படாமல் இருந்த மழை துளிகளைத் தட்டி, தனது

குடையை மடித்தாள். கண்களைச் சிமிட்டி அவனை மேடையில் பார்க்கும்போது, தன்னைத்தானே மறந்து மேடையில் சிலைபோல் நின்றான் ஓவியன். எங்கேயோ பார்த்த முகம். எப்படியோ பழகிய ஞாபகம். கதிரவன் தனது பேச்சைத் தொடர்ந்தான்.

"கலை தங்கும், கலை தயங்கும், கலை சிரிக்கும், கலை இனிக்கும், கலை கவிதைகள் வரையும், கலை கலங்கும், கலை குழம்பும், கலை ஓரளவுக்குப் புரியும், கலை விலகும், கலை பிரியும்போதும் காலம் உங்கள் வசம், உள்ளம் காலம் வசம். நன்றி".

தனது பேச்சை முடித்தவுடன் ஒரு பலத்த கரகோசம் தொடர்ந்தது. சில பேர் கதிரவனைப் பாராட்ட வந்தார்கள், சிலர் அவருடைய படைப்புகளை பார்க்கச்சென்றார்கள். அலை போல் வந்த மக்களைத் தாண்டி அந்தப் பெண்ணை அடையக் கதிரவன் முயன்றான். சிறிது நேரத்திற்கு அவளைக் காணவில்லை. தேடினான். அலைந்தான். நண்பர்களும் சக பணியாளர்களும் இருக்கும் இந்த இடத்தில், பெயர் தெரியாத ஒருவரைத் தேடித்திரிந்தான். மண்டபத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, அவன் நேற்று வரைந்த ஓவியத்திற்கு முன் அவள் நின்றுகொண்டிருந்ததைக் கண்டான்.

கதிரவன் அவளை நெருங்கினான். அவள் அவனைப் பார்க்கத் திரும்பவில்லை. ஓவியத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். முழுக் கவனமும் அதில் மட்டும் தான் இருந்தது. கதிரவன் பேச முயன்றான்.

"இந்த ஓவிய- "

நிறுத்தப்பட்டான்.

"காலத்தைக் கண்ணாடியில் பார்த்துச் சிரிக்கும் இந்த ஓவியம் உங்களுக்கு எப்படித் தோன்றியது" என்று கேட்டாள்.

"இது... நான் நேற்று வரைந்த ஓவியம், பெரிதாக ஒன்றும் இல்லை, கண்ணாடியைப் பார்ப்பது நான். மறுபக்கம் கண்ணாடியில் இருப்பதும் நான்தான், ஆனால் வயது போய் விட்டது, அவ்வளவுதான்" என்று விளக்கினான்.

"அப்போது சரியான காலத்திற்குத் தான் வந்திருக்கிறேன்" என முணுமுணுத்தாள்.

"என்ன?" என்று புரியாமல் கேட்டான் கதிரவன்.

"ஒன்றும் இல்லை, ஆனால் அந்த முதியவர் எனது தாத்தாவைப் போலவே இருக்கிறார், அது எப்படி" என்று கேட்டாள்.

"என்ன கிண்டலா?" என்று கையை கட்டிக்கொண்டு கேட்டான்.

"இல்லை, இங்கே பாருங்கள்" என தொலைபேசியில் ஒரு படம் காட்டினாள்.

கதிரவன் மீண்டும் தடுமாறினான். கண்களை இறுக்கி மூடி திரும்பவும் திறந்தான். அவனால் நம்பவே முடியவில்லை. ஒரு முதியவர், தன்னைப் போல், இரு குழந்தைகளை கையில் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு புகைப்படம். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"இப்படி எனது தந்தை என்னையும் எனது தங்கையையும் வைத்திருக்கும் படம் எனது வீட்டில் உள்ளது" என்று வியப்புடன் கூறினான்.

‘‘அதை நான் உடனடியாகப் பார்க்க வேண்டும், அங்கே போவோமா’’ என உற்சாகமாகக் கேட்டாள்.

‘‘இந்த விழாவை விட்டிட்டு… எப்படி.. நாளை நீங்கள் என்னுடைய அலுவலகத்திற்கு வந்தால் நான் அங்கே கொண்டுவருகிறேனே?’’ என்று அவன் பரிந்துரைத்தான்.

‘‘நான் நாளை இந்த காலத்தி- இந்த நகரத்தில் இருக்க மாட்டேன்’’ எனக் கூறினாள்.

அவசரத்தை புரிந்துகொண்டு கதிரவன் அவளை அழைத்து தனது அடுக்குமாடி வீட்டிற்குச்சென்றான். மழை நிற்கவில்லை, ஆனால் பெரிதாகவும் கொட்டவில்லை. அவன் போகிற வழி முழுவதும் அவளைக் கவனித்தான், தன்னுடைய கைக்கடிகாரத்தை அடிக்கடி பார்த்துக்கொண்டு நடந்தாள். அவள் எங்கேயோ செல்ல வேண்டும் என்று எண்ணினான்.

வீட்டிற்குள் நுழையும் போது அவள் கதிரவனுக்கு முன் போனாள். சாவியை எறிந்தாள், அது ஒரு கொக்கியில் போய் சரியாக விழுந்தது. தனது பையைக் கதிரையில் எறிந்தாள். கழிவறைக்குச்சென்று ஒரு துவாயை எடுத்துக்கொண்டு தலையைத் துடைத்தாள். இதையெல்லாம் வியப்புடன் வாசலிலேயே இருந்து பார்த்தான் கதிரவன். சரி என, தனது அலமாரியில் இருந்த புகைப்பட ஆல்பங்களில் அந்தப் படத்தைத் தேடினான். அவளும் ஓர் இரண்டு புகைப்பட ஆல்பங்களிலும் தேடினாள், ஆனால் சிறு இடைவேளைகளில் வெளி யன்னலை எட்டி எட்டிப் பார்த்தாள். திடீரென ஒரு பெரிய சத்தம். அந்தச் சத்தத்தில் எல்லாம் அதிர்ந்தது. சிறு தூரத்தில் இருந்த ஒரு கட்டிடம் வெடித்துச் சிதறியது. கொஞ்ச நேரத்திற்கு எல்லாம் இருண்டு போனது. கதிரவன் தனது பெரிய யன்னலை நோக்கி ஓடினான். தூரத்தில் தீயில் மெல்ல அழிந்துகொண்டிருந்தது அவனுடைய ஓவியக் கண்காட்சி.

அழுதான். கதறினான். நிலத்தைக் குத்தினான்.

‘‘கவலை வேண்டாம்’’ என்று கூறி அவனைச் சமாதானப்படுத்த முயன்றாள்.

‘‘யார் நீ? முதலில் இருந்தே ஒன்றும் சரியில்லை, என்னைத் தெரிந்ததுபோலவே பேசுகிறாய், என் வீட்டை அறிந்தது போலவே நடக்கிறாய், இந்தச் சம்பவத்திற்கும் உனக்கும் சம்பந்தம் இருக்கிறது. சொல் நீ யார்?’’ என எச்சரித்தான்.

பெருமூச்சு விட்டு பதிலைக் கூற தொடங்கினாள்.

‘‘நான் உங்கள் பேத்தி, உங்கள் எதிர்காலத்தில் இருந்து வந்திருக்கிறேன்’’ என்று ஒரு சிரிப்புடன் கூறினாள். ‘‘எனது காலவரிசையில், இந்த விபத்தில் உங்களுக்குத் தலையில் அடிபட்டுக் குறுகிய கால நினைவாற்றல் இழப்பு வந்து விடுகிறது, இதனால் உங்களின் வரையும் திறன் மறைகிறது. ஓவியங்களும், கலையும்தான் உங்கள் உலகம், அதில் வாழமுடியாமல் போவதால் நீங்கள் மன அழுத்தம் என்ற பள்ளத்தில் விழுந்து விடுகிறீர்கள். இதில் இருந்து உங்களைக் காப்பாற்றத்தான் நான் இங்கே காலம் கடந்து வந்தேன். இது உங்களைக் காப்பாற்றும் பதினைந்தாவது முயற்சி. இந்தக் கட்டிடத்தின் வெடிப்பு ஒரு நியதி நிகழ்வு (canon event), அதை மாற்ற எங்களால் எவ்வளவு முயன்றும் முடியவில்லை. ஆனால் இந்த முறை உங்களையும், கட்டிடத்தில் இருக்கும் எல்லோரையும் காப்பாற்ற முடிந்தது’’ என விளக்கினாள்.

கண்களில் கண்ணீர் முட்டிக்கொண்டு தனது வருங்காலப் பேத்தியை வியப்புடன் பார்த்துக்கொண்டு அவள் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டான். சில விடயங்கள் புரிந்தது சிலது புரியவில்லை.

"காலம் கடந்தா.. you mean time travel? ... அது சாத்தியமா..." "நியதி நிகழ்வு என்றால் என்ன? என்னைக் காப்பாற்றும் பதினைந்தாவது முறையா? அப்படி என்றால், பதினைந்து காலவரிசைகளை (timelines) உருவாக்கி இருக்கிறீர்கள், அது இயற்கைக்கு மாறான செயல், இதனால் இந்தக் காலவரிசை அழிந்து விடாதா?" எனக் கேட்டான்.

"காலத்தை மட்டும் அல்ல, பல பிரபஞ்சங்களையும் கடக்கலாம். மேலும், எங்களுடைய காலத்தைக் கடக்கும் கருவி மற்ற காலவரிசைகளை அழித்துவிடும். எதில் நாங்கள் வெற்றி பெறுகிறோமோ அதை மட்டும் தான் உயிருடன் வைத்திருக்கும். நியதி நிகழ்வென்றால், எல்லாக் காலவரிசைகளிலும், எல்லாப் பிரபஞ்சத்திலும் நிச்சயமாக நடக்கும் நிகழ்வுகள், அதை மாற்ற முடியாது. எவ்வளவு முயன்றாலும். உதாரணத்திற்கு, எல்லாக் காலவரிசைகளிலும், எல்லாப் பிரபஞ்சத்திலும் இரண்டாம் உலகப்போர் நிச்சயமாக நடக்கும், ஆனால் அதில் யார் வெற்றி பெறுகிறார், யார் அதில் உயிர் பிழைத்தார்கள் என்பது அந்தக் காலவரிசைக்கும், பிரபஞ்சத்திற்கும் தனித்துவமானது. நாங்கள் எல்லாரும் ஒரு பரந்த பிரபஞ்சத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பல கால வரிசைகளும், பல பிரபஞ்சங்களும் ஒரே நேரத்தில் பயணித்துக்கொண்டிருக்கும்." என விளக்கினாள்.


தன்னுடைய பேத்தியின் அறிவைப்பார்து வியந்தான் கதிரவன். அவளுடைய வேலை முடிந்தது என்றும் புரிந்து கொண்டான். அவள் தனது பையில் எதையோ தேட, யன்னலில் நெருப்பும் புகையும் நியூ யோர்க் நகரத்தை மறைத்ததை கதிரவன் பார்த்தான். பையில் இருந்து ஒன்றை எடுத்தாள், இது தான் அந்த காலத்தைக் கடக்கும் கருவி என எண்ணினான். அதை அழுத்திய நொடியில் அவளுக்குப் பின்னால் ஒரு கருந்துளை (black hole) ஒன்று திறக்கப்பட்டது. பெருமூச்சு விட்டான். கடைசியில் ஒரு கேள்வி தோன்றியது.

"உன்னது பெயர் என்ன மா?" என கண்ணீர் வடிய அன்புடன் கேட்டான்.

"ஓவியா... நீங்கள் வைத்த பெயர்தான், மறந்துவிடாதீர்கள்" எனக் கூறிவிட்டு மறைந்தாள்.

## எனது இசைப்பயணம்

***கிரிசிகன் சீவராஜா***




எனது இசைப்பயணம் எப்படி ஆரம்பித்தது என்றால், மற்ற சிறுவர்களைப்போல் நான் என்னுடைய சகோதரருடன் சிறுவயதில், எங்களுடைய அம்மா, அப்பா முன் ஆடிப் பாடிக்கொண்டு இருப்பதை அவர்கள் இரசித்தார்கள். அவர்களின் இசை ஆர்வத்தால், நாம் கல்விகற்ற ஆரம்பப் பாடசாலையில் சில இசைக்கருவிகளைப் பயில்வதற்கு வழி செய்தார்கள். அதைத் தொடர்ந்து, அப்பாவினதும் தனிப்பட்ட இசை ஆசிரியர்கள் உதவியுடனும் வெவ்வேறு இசைக்கருவிகளைக் கற்கக்கூடியதாக இருந்தது. எனக்கு இசைக்கருவியுடன், பாடுவதில் ஆர்வம் இருந்தபடியால், பல பாடல்களைப் பாடிப் பலரை மகிழ்வித்தேன்.



இதே நேரத்தில், பல திரைப்படப் பாடல்களைக் காதால் கேட்டு ரசித்து, அவைகளைப் பல மேடைகளில் பாடக்கூடிய மற்றும் இசை வாசிக்கக்கூடிய திறமையை வளர்க்கக்கூடியதாக இருந்தது. இதன் காரணமாக, பல மேடைகளில் பாடியும், பல திரைப்படப்பாடல் போட்டிகளில் பங்குபற்றியும், பரிசுகளை வெல்லக்கூடிய நிலையும் ஏற்பட்டது. இப்படியான நேரத்தில் பலர், என்னையும் என்னுடைய அண்ணாவையும் பாராட்டும்போது எமக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கும். இதே வேளை, சில மேடை நிகழ்ச்சிகளின்பொழுது பார்வையாளர்கள் மிகக் குறைவாக இருக்கும் இடங்களிலும் நாம் மனம் தளராமல் பங்குபற்றுவோம். அதைப்போல் அதிகமான ரசிகர்கள் இருக்கின்ற நிகழ்ச்சியில் இடைநேரத்தில் பார்வையாளர்கள் கலைந்து செல்லும்போது மனதிற்கு வருத்தமாக இருந்தாலும், தொடர்ந்து நிகழ்ச்சியில் நாம் எல்லோரும் மகிழ்ச்சியாக இணைந்து இருப்போம்.

இதன் தொடர்ச்சியாக ஒரு தனியான இசைக் குழுவை என் தந்தை ஆரம்பித்துப் பல இசை நிகழ்ச்சிகளை நடத்தியிருந்தோம். இதற்காக, அதிக நேரம் திட்டமிடுவதிலும் பயிற்சியில் ஈடுபடுவதிலும் மற்றும், இசைக்கருவி வாசிக்கக்கூடிய, பாடக்கூடிய

திறமையாளர்களையும் எமது குழுவில் சேர்த்து, ஒத்திகை பார்ப்பதற்கு நேரம் செலவுசெய்து, நிகழ்ச்சியை மேடைக்குக் கொண்டுசேர்ப்போம். அந்த நேரத்தில் பார்வையாளர்களின் கரகோசம் எங்களை மேலும் உற்சாகப்படுத்தும். இதனால் எனக்கு மேலும் மேலும் பாடல்களைப் பாடுவதற்கு மற்றும் இசை வாசிப்பதற்கு ஆர்வமாக இருக்கும். மேடை நிகழ்ச்சியைத் தயாரிக்கின்றபோதும், அது நடக்கின்ற போதும், சொல்லமுடியாத, மனதிற்குச் சங்கடமான பல அனுபவங்களுடன், சொல்லக்கூடிய, மனதிற்கு இனிமையான அனுபவத்தோடு, நிகழ்ச்சியின் இறுதியில் மகிழ்ச்சியாக நாம் செல்வோம்.

இந்த இசை ஆர்வத்தின் காரணமாக, பாடல்களை நாமே தயாரித்து வெளியிட்டால் நல்லது என்ற யோசனை ஏற்பட்டது. என் ஆர்வமும் கூட. நாம் பாடல்களைத் தயாரிக்கத் தொடங்கினோம். இதன் ஆரம்பக் கட்டமாகப் பல திரைப்படப் பாடல்களை அண்ணாவுடன் சேர்ந்து பின்னிசையை எமது இசைக்கருவி மூலம் நாங்களே வாசித்து, திரைப்படப் பாடலைப் பதிவுசெய்து, வானமுதம், இன்பத்தமிழ் ஒலி, போன்ற வானொலிகளில் ஒலிபரப்பாவதற்காக, வானொலி நடத்துனர்கள் வழி அமைத்துத் தந்தார்கள். இதன் அடுத்த செயல்பாடாக, காலத்திற்கு ஏற்ப தமிழ்ப் பாடல்களை இயற்றி, இசை அமைத்து, பாடி, வானொலிகளில் வெளியிட்டிருந்தோம். இதன்பிறகு, எனது மனதில் ஒரு சிறிய யோசனை ஏற்பட்டது. அது என்னவென்றால், ஆங்கிலப் பாடல்களை உருவாக்கும் எண்ணமே. இதனால் நான் பல ஆங்கிலப் பாடல்களை எழுதி, அதற்கு இசை கொடுத்து, பதிவுசெய்து என்னுடைய நண்பர்களுக்கு மட்டும் வெளிக்காட்டினேன். இப்பாடல்களைக் கேட்ட என் நண்பர்கள் என்னை ஊக்குவித்து இப்படியான பாடல்களைப் பொதுமக்களுக்கு வெளியிடலாம் என்று கூறினார்கள். இந்த ஆலோசனைகள் மனதில் வைத்து, நான் ஆங்கிலத்தில் தயாரித்துப் பல இசை கேட்கின்ற தளங்களில் வெளியிடத் தொடங்கினேன். பல பேர் பார்த்து வாழ்த்தியிருந்தார்கள். அதே நேரம் சில நண்பர்கள் எதிர்மறையான விமர்சனங்களைத் தெரிவித்து மனச்சஞ்சலத்தை ஏற்படுத்தி இருந்தபோதிலும், அவற்றையும் ஒரு ஊக்குவிப்பு என நினைத்துத் தொடர்ந்து எனது தயாரிப்புகளை வெளியிட்டுக்கொண்டிருந்தேன். இப்படியான தருணங்களைத் தாண்டி, நான் இசை தயாரிக்கத் தொடர்ந்தேன். என்னுடைய விடாமுயற்சியால் நான் என் இசைப் பயணத்தில் வளரத் தொடங்கினேன். என் பாடல்களை இணையத்தளத்தில் பல இலட்சக்கணக்கானோர், இலங்கை, இந்தியா, கனடா, அமெரிக்கா, மற்றும் அவுஸ்திரேலிய போன்ற பல்வேறு நாடுகளில் என் பாடல்களைக் கேட்டு நல்ல விமர்சனங்களோடு வாழ்த்தியிருந்தார்கள். சில பாடல்களைத் தனியாகத் தயாரித்ததோடு, மற்ற நேரத்தில் நான் என் நண்பர்களுடனும் மற்றும் வேறு நாடுகளில் சேர்ந்த கலைஞர்களுடனும் பாடல்களைத் தயாரித்தேன். இதைத் தவிர, என் சகோதரர் கீர்த்திகனோடு, நாம் இருவரும் தமிழ்ப் பாடல்களுக்கு இசை அமைத்து, வசனங்கள் எழுதி, பாடி, தயாரித்து வெளியிட்டிருக்கின்றோம். எனது இசை ஆர்வத்தின் காரணமாக இவ்வளவு காலமும் நடந்த நேர்மறையான எதிர்மறையான அனுபவங்களோடு தொடர்ந்து பயணிக்க விருப்பத்தோடு இருக்கின்றேன். இதற்கு, எனது பல நண்பர்களும், தளத்தில் எனது பாடல்களைக் கேட்டு ரசிக்கும்

ரசிகர்களும்தான் முக்கியமான காரணமாயிருக்கின்றனர். அவர்களின் ஊக்குவிப்பால், இன்னும் பல பாடல்கள் தயாரித்து வெளியிடத் திட்டமிட்டு இருக்கின்றேன்.




"இசையால் வசமாகா இதயம் எது" என்பதற்கேற்ப நானும் பல தமிழ், ஆங்கில இசையைக் கேட்டு, அதன்மீது வசப்பட்டு இப்படியாக எனது பயணத்தைத் தொடர்ந்துகொள்வதோடு, அதனால் நான் எனது மனதை மகிழ்ச்சியாக வைத்திருக்கப் பெரிதும் உதவுகின்றது. இதைப் போல், இசையால், எல்லோருக்கும் அந்த மகிழ்ச்சி, மன நிறைவு கிடைக்கும் என நம்புகின்றேன்.

எனது சொந்த அனுபவத்தின்படி, எந்தக் கலையிலும், கலைஞர்களுக்குக் கிடைக்கும் பலவிதமான விமர்சனங்களையும் தாண்டித் தொடர்ந்து பயணித்தால், பாராட்டைப் பெறுவது உறுதி.



## தனிமை ஒரு தொற்றுநோய்



***சுவைத்தா விக்னேஷ்வரன்***

பரபரப்பான நகரங்களின் மத்தியில், அறிவிப்புகளின் இடைவிடாத சலசலப்பும், இணைப்புகளின் கவர்ச்சிக்கு மத்தியில், ஒரு அமைதியான நெருக்கடி உள்ளது: தனிமையின் தொற்றுநோயில் இளைஞர்கள் முடங்கியிருக்கிறார்கள். வானளாவிய கட்டிடங்கள் விண்ணைத் தொடும் அதே வேளையில், டிஜிட்டல் தளங்கள் முடிவற்ற இணைப்புகளை உறுதியளிக்கின்றன. பல இளைஞர்கள் தனிமைப்படுத்தப்பட்டதாக உணர்கிறார்கள். ஆனால் இந்த கடுமையான முரண்பாட்டை தூண்டுவது எது? ஒரு புலனாய்வுப் பயணத்தைத் தொடங்குவோம்.

### Alone vs Lonely: A nuanced difference

ஒரு இளம் பெண் கமலா, உணவகத்தில் அமர்ந்து, புத்தகத்தில் மூழ்கி, தனிமையில் திருப்தி அடைந்திருப்பதை கற்பனை செய்து பாருங்கள். அருகில் உள்ள மேசையில், நண்பர்கள் குழுவால் சூழப்பட்ட அகிலன், இன்னும் தனது எண்ணங்களில் தொலைந்து, வெறுமையை உணர்கிறார்.

கமலா தனது கணநேர தனிமையை அனுபவிக்கும் போது, அகிலன் தனிமையின் ஆழ்ந்த வலியுடன் போராடுகிறார்.

சிறிது நேரத்திற்கு தனியாக இருக்கும் பொழுது துரித வாழ்க்கையிலிருந்து ஓய்வு வரும். இது தன்னார்வமாகவும், நேசத்துக்குரியதாகவும் இருக்கலாம், வாழ்க்கையின் குழப்பத்திலிருந்து தனிநபர்களுக்கு ஓய்வு அளிக்கும். இதற்கு நேர்மாறாக, தனிமை என்பது வெறுமை, தனிமைப்படுத்துதல் மற்றும் மற்றவர்களிடமிருந்து துண்டிப்பு ஆகியவற்றின் ஆழமான உணர்வால் வகைப்படுத்தப்படும் ஒரு உணர்ச்சி நிலை. ஒருவர் கூட்டத்தால் சூழப்பட்டிருந்தாலும், தனிமையாக உணர முடியும். தனிமை என்பது உங்களை சுற்றி உள்ள மனிதர்களின் உடனிருப்பு இல்லாமை அல்ல. அர்த்தமுள்ள தொடர்புகளும், புரிந்துணர்வும் இல்லாமையே.

**நாம் ஏன் தனிமையை உணர்கிறோம்**



இன்றைய வேகமாக செல்லும் உலகில், நாம் வைத்திருக்கும் நட்புகள் பல மேலோட்டமான உறவுகளாக இருக்கின்றன. சமூகவலைத்தளங்களினால் நாம் பல நண்பர்கள் (followers) வைத்திருந்தாலும், உதவி தேவையான நேரங்களில், அல்லது கடிணங்களை அனுபவிக்கும்பொழுது அவர்களில் எத்தனை பெயர் எமக்கு தோள் கொடுப்பார்கள்?

"முகப்புத்தகம்" "இன்ஷ்டகிராம்" போன்ற சமூகவலைத்தளங்களினால், நாம் உலகின் வெவ்வேறு தேசங்களிலிருப்பவர்களுடன் எளிதாக தொடர்புகொண்டு, எமது வாழ்கையை பற்றி பேசமுடியும். ஆனால், சமூகவலைத்தளங்களில் ஒரு பெரிய நட்பு வட்டத்தைக் காட்டுவது, அல்லது ஒவ்வொரு பயணத்தையும் ஆவணப்படுத்துவதற்காக பாவனை

செய்து, அதற்கு முக்கியதுவம் கொடுப்பதனால் உண்மையான நட்புகளை அமைப்பது கடினமாக உள்ளது. இதனால் இளைஞர்கள் பலருடன் தொடர்புகொண்டிருந்தாலும் தனிமையை உணர்கிறார்கள்.

மேலும், இந்த டிஜிட்டல் யுகத்தில் நாம் மற்றவர்களுடன் உரையாடும் விதம் மாறுபட்டிருக்கிறது. அர்த்தமுள்ள உரையாடல்களுக்குப் பதிலாக, பல தொடர்புகள், விருப்பங்கள் (likes), கருத்துகள் (comments), மற்றும் எமோஜிகளாக மாறியுள்ளன. நேருக்கு நேர் உரையாடும் பொழுது கேட்கும் உண்மையான சிரிப்பு, மற்றும் மனதைக் கவரும் உரையாடல்கள் டிஜிட்டல் மொழியில் குறைவாக இருப்பதனால் பலர் தனிமையை உணர்கிறார்கள்.

இதற்கு மேலாக, நாம் அவுஸ்திரேலியாவில் வளரும்பொழுது, தமிழ் நண்பர்களை வைத்திருப்பது கடினமாக உள்ளது. தமிழ் பாடசாலை, அல்லது தமிழ்ச் சங்கம் நடத்தும் நிகழ்ச்சிகளுக்குச் செல்லாமல் இருந்தால் எமக்கு தமிழ் நண்பர்களை உருவாக்கிக்கொள்வதற்கு வாய்ப்புகள் கிடைப்பதில்லை. இது நாம் அனுபவிக்கும் தனிமையிற்கு ஒரு காரணமாக இருக்கிறது.

நாம் வாழ்கையில் அனுபவிக்கும் சில போராட்டங்கள் ஒரே கலாசாரத்தை சேர்ந்தவர்களால்தான் முழுதாக விளங்க முடியும். உதாரணமாக, வேறு கலாச்சாரங்களை சேர்ந்த நண்பர்களுடன் உரையாடும் பொழுது, சில கலாச்சாரத்தை சார்ந்த நுணுக்கங்களை நாம் தொடர்ந்து விளக்கம் கூறவேண்டி இருக்கின்றது. இதனால் சில விடையங்களை பற்றி பேசும் பொழுது, உணர்வுகளை வெளிபடுத்துவது கடினமாக இருக்கலாம். ஆனால், தமிழ் நண்பர்களுடன் பேசும் பொழுது இது ஒரு பிரச்சனையாக இருப்பதில்லை.

இதற்கு மேலாக, படிப்பிலும், வேலையிலும் அதிக நேரம் செலுத்துவதனால், நண்பர்களுடன் சந்திப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. அர்த்தமுள்ள தொடர்புகளை வைத்திருப்பது கடினமாக உள்ளது. இதனால், வேலையிலிருந்து அல்லது பாடசாலையிலிருந்து விடுதலை வரும்பொழுது, நாம் தனிமையை அதிகமாக உணர்கிறோம்.

எனவே, இப்படிப்பட்ட பல விடயங்களினால், நாம் தனிமையிற்கு அடிமையாகிவிட்டோம். இந்த தனிமை தொற்றுநோய், எமக்கு ஒரு முன்னெச்சரிக்கையாக உதவுகிறது. நாம் மெது சாதாரண வாழ்கையிலிருந்து வெளிவந்து நண்பர்களுடன் இணைந்திருப்பதுற்கு சிறிது நேரத்தை ஒதுக்கி வைத்திருக்கவேண்டும். சில தமிழ் நண்பர்களை அமைப்பதற்காக முடிவு எடுக்க வேண்டும். இவற்றை செய்தால், நாம் ஒரு சமூகமாக இந்த நோயிலிருந்து வெளியேரலாம்.

அர்த்தமுள்ள நட்புகளை அமைத்து, புரிந்துணர்வு இருக்கும் நண்பர்களுடன் சேருங்கள். இது இந்த கடினமான மற்றும் சோர்வுற்ற வாழ்கையில் மகிழ்ச்சியையும் சந்தோசத்தையும் தரும். நினைவு வைத்திருங்கள்; தனிமை என்பது உங்களை சுற்றி உள்ள மனிதர்களின் உடனிருப்பு இல்லாமை அல்ல. அர்த்தமுள்ள தொடர்புகளும், புரிந்துணர்வும் இல்லாமையே.

## குடும்ப வன்முறை



*மெரின் விக்டர்பாபு*

இன்றைய காலத்தில் குடும்ப வன்முறை நமது உலகத்தில் மிகப்பெரிய பிரச்சனையாக காணப்படுகின்றது. இச்சூழலில் நமது தமிழ் சமூகத்தில் நடக்கும் குடும்ப வன்முறையையும் நாம் உற்றுநோக்க வேண்டும். குடும்ப வன்முறை வெவ்வேறு கோணங்களிலும் வகைகளிலும் காணப்படுகின்றன. அவை அச்சுறுத்தும் நடத்தை, கட்டுப்படுத்துதல், வற்புறுத்துதல் மற்றும் உளவியல் ரீதியான துன்புறுத்துதல். ஒவ்வொரு தமிழ் மகன் அல்லது மகள் குடும்ப வன்முறையால் மனதளவிலும் உடலளவிலும் பாதிக்கப்படுகிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. இக்குடும்ப வன்முறை நமது தமிழ் சமூகத்தில் இயல்பான விஷயமாக திகழ்வதால் பல இளைஞர்கள் குறிப்பாக பெண்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே குடும்ப வன்முறை நமது இல்லத்தில் நடக்கும்பொழுது நிறுத்தினால்தான் நமது சமூகத்தில் நடப்பதை தடுக்க முடியும். இதில் இன்னொரு சோகம் என்னவென்றால் குடும்ப வன்முறை புலம்பெயர்ந்து வாழும் நமது தமிழ் குடும்பங்களிலும் கூட காணப்படுகின்றது என்பதுதான்.

தமிழ் இளைஞர்களின் மத்தியில் குடும்ப வன்முறை மிகப்பெரிய உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பலவிதமான கட்டுப்பாடுகளோடு வளர்க்கிறார்கள். ஆனால் அவர்களை சுற்றியுள்ள கலாச்சார சிந்தனைகளால் அது எவ்வளவு பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதை உணரவில்லை. தமது விருப்பங்களை பிள்ளைகளின் மேல் திணிக்கும் நடத்தையும், கண்டிக்கும் முறையும், வாய்மொழி துஷ்பிரயோகமுமாகத் திகழ்கிறது. இது ஒரு வகையான வன்முறை செயல் என்பதால் இளைஞர்களின் மனது ஆழமாகப் புண்படுகின்றது. இணையத்தளங்களில் பல இளைஞர்கள் தமது அழுத்தமான அனுபவங்களையும், ஆதங்கத்தையும் பகிர்ந்துள்ளனர். ''எனது பெற்றோர்களது, நான் மருத்துவப் படிப்பு மேற்கொள்ள வேண்டும், நிச்சயிக்கப்பட்ட திருமணம் செய்ய வேண்டும் மற்றும் பையன்கள் அல்லது பிற இனத்தவர்களுடன் பழகக்கூடாது'' போன்ற எதிர்பார்ப்புகளில் நான் சிக்கி வருத்தப்படுகின்றேன். நான் மிகவும் மனச்சோர்வடைந்திருக்கின்றேன்'' என்று தமிழ் பெண் வருத்தத்துடன் பகிர்ந்து கொண்டாள். இவ்வகையான குடும்ப வன்முறை இன்றளவிலும் நமது தமிழ் குடும்பங்களில் இருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழ்ப் பெண்கள் சந்திக்கும் மிகப்பெரிய சவால் திருமணம். கட்டாயக் கல்யாணம் செய்துவைக்கும் பெற்றோர் தமது பிள்ளைகளின் விருப்பத்தைக் கேட்க மறுக்கின்றனர். இதனால் பல பிள்ளைகள் தனக்குப் பிடித்த வாழ்க்கையையும் மனிதரையும் தேர்ந்தெடுக்க முடியவில்லை. கட்டாயக் கல்யாணங்கள் இன்றளவும் பல தமிழ் குடும்பங்களில் நடைபெறுகின்றன. அதுமட்டுமல்லாமல் திருமணத்துக்குப் பின் பல பெண்கள் தமது கணவர்களால் துன்புறுத்தலுக்கும், மிரட்டல்களுக்கும் உள்ளாகிறார்கள்.

“கிறுக்கு, லூசு...” போன்று தன் மனைவியை கடின வார்த்தைகளால் திட்டுவதும், கோபம் வரும்பொழுது அடிப்பதும் நமது சமூகத்தில் இயல்பாக்கப்பட்ட செயல்களாகத் திகழ்கின்றன. இதை சாதாரணமான வன்முறை என்று எடுத்துக்கொண்டு பல கணவர்கள் தைரியமாக தமது மனைவியை அடக்கியாள்கிறார்கள். சுற்றி இருப்பவர் கூறும் முட்டாள்த்தனமான அறிவுரையைக் கேட்டுக்கொண்டு, அப்பெண்களும் தமது கணவரின் துன்புறுத்தல்களை பொறுத்துக் கொள்கின்றனர். கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற உறுதியுடன் வாழும் பெண்கள் சமூகத்தின் பார்வைக்குப் பயந்து இருக்கின்றனர். அதுமட்டுமல்லாமல் தனது கணவன் கெட்டவனாக இருந்தாலும், பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாக இருக்கிறார் என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டு தினமும் சித்திரவதைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் பெண்கள் பயப்படாமல் தைரியமாக தங்களுக்கு நடக்கும் குடும்ப வன்முறையை வெளிப்படுத்தி பாதுகாப்பில்லாத வீட்டிலிருந்து விலக வேண்டும். அவர்களை சுற்றி இருக்கும் மனிதர்கள் ஆயிரம் கூறுவார்கள், குறிப்பாக உறவினர்கள்.

இப்படி பல வகையான குடும்ப வன்முறைகள் திருமண வாழ்வில் தினசரி காணப்படுகிறது. ஆஸ்திரேலியா அரசின் இணையத்தளத்தில் குடும்ப வன்முறை தகவல் இதழ்கள் தமிழில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. இப்பழக்கம் பல கவுன்சில்களாலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. ஏனெனில் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட தமிழ் பெண்கள் அமைதி காப்பதும் தங்களுக்கு நடக்கும் அநியாயத்தை வெளிப்படுத்தாத காரணத்தினாலும் ஆஸ்திரேலியா அரசு அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க முடியாமலிருக்கின்றது. அவுஸ்திரேலியாவில் மூன்று பெண்களில் ஒருவர் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட புள்ளி விபரங்களில் தமிழ் சமுதாயத்தில் உள்ள குடும்ப வன்முறை இடம்பெறவில்லை. ஏனென்றால் இவையெல்லாம் மறைக்கப்படுகின்றன. இயல்பு வாழ்க்கையில் நடக்கும் மறைக்கப்படும் குடும்ப வன்முறையை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தால் மட்டுமே நமது தமிழ் சமுதாயத்தில் குடும்ப வன்முறையை தடுக்க முடியும். வாழ்வின் எல்லை வரை தன் ஒரே கணவருடன் வாழ வேண்டும் என்று கௌரவத்தைக் காக்க நினைத்து அறிவுரை கூறும் உறவினர்களுக்கு குடும்ப வன்முறை பற்றிய கவலை இல்லை. ஆகவே திருமண வாழ்வில் உள்ள குடும்ப வன்முறை முற்றிலும் நிறுத்தப்பட வேண்டும். உறவினர்களின் எண்ணங்கள் மற்றும் ஆண்களின் நடத்தை மாற வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் கணவரின் குடும்பத்தினர் பெண்களை சித்திரவதை செய்வது ஒருவிதமான குடும்ப வன்முறை தான். மனதளவில் தாக்கி அடிமைப்படுத்த விரும்பும் உறவினர்கள் மற்றும் வரதட்சனை என்ற பெயரில் கொடுமை செய்வது சமுதாயத்தின் மூளைச்சலவையால் இயல்பாக்கப்பட்டுள்ளது. ஆகவே அனைத்து வகையான குடும்ப வன்முறைகளும் குழந்தைகள் இளைஞர்கள் மற்றும் பெரியவர்களுக்கு நீண்ட கால மன அழுத்தத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தலாம் என்று ஆராய்ச்சிகள் தொடர்ந்து சுட்டிக்காட்டுகிறது. அதனால் இவையனைத்தும் சட்டத்துக்கு விரோதம் இல்லாததாக இருந்தாலும் அனைத்தும் கண்டிக்கப்பட்டு நிறுத்தப்பட வேண்டும்.

## சில நேரங்களில் சில இடப்பெயர்வுகள்



*க. மணிவண்ணன்*

பதினொரு மாதங்களையும் சில நாட்களையும் ரிலே ஓட்டத்தில் ஓடிக் களைத்த 2015 தன் கையிலிருந்த சிறிய கம்பை அடுத்து ஓடக் காத்திருக்கும் இரண்டாயிரத்து பதினாறிடம் ஒப்படைக்கக் காத்திருக்கும் சில மிச்ச சொச்ச நாட்பொழுதுகள். இன்னும் சில நாட்களுக்குப் பிராஜெக்ட் சைட் ஆபிஸுக்குப் போய் வரவேண்டும். இரண்டு மணி நேரப் பயணம். Hougang MRT யிலிருந்து Circle Line ஏறி Serangoon வந்து Green Line மாறி Bouna Vista MRT ஸ்டேசன் வந்து பின்னர் பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்பட்ட மினி பேருந்துக்காக காத்திருக்க வேண்டும். காத்திருக்க ஆரம்பித்தேன்.

வாழ்க்கை பரபரத்துக்கொண்டிருக்கிறது. வாகனங்கள் இரைந்து கொண்டிருக்கின்றன. நிம்மதி என்ற சீதையை நிர்க்கதியாக தவிக்கவிட்டு மனிதர்கள் ஏதோ ஒரு மாயமானின் பின்னால் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த உழைப்பும் ஓட்டமும்தான் சிறிய சிங்கப்பூர் தேசத்தை உலக அரங்கில் உயர்த்தி வைத்திருக்கிறது. "சீனர் தமிழர் மலேய மக்கள் உறவினர்போல அன்புடன் நட்புடன் வாழும் சிங்கப்பூர்" என்று சிங்கப்பூர் மக்களின் இன்னுமொரு தேசிய கீதத்தை கே ஜே ஜேசுதாஸ் மனதிற்குள் மணியடித்துக் கொண்டிருந்தார். சிங்கப்பூரில் பேருந்துக்காகக் காத்திருக்கும் இந்த விநாடியில் மனம் கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்தது.

பூமிப்பந்தில் தனித்திருக்கும் மிகப்பெரிய ஒரு தீவு அவுஸ்திரேலியா. இந்தக் கண்டம் பற்றிய கனவுகள் சிறுவயதிலிருந்தே எனக்குள் வந்து போயிருக்கின்றன. ஆனாலும் அந்த நாட்டிற்கே புலம்பெயரும் நிலை வருமென்று கனவுகள் கண்டதில்லை. 1998ல் முதுமானி ஆராய்ச்சிக்காக தலைநகர் கன்பெராவில் வந்து இறங்கியபோது winter காலம். என்னைப் பல்கலைக்கழகத்தில் வரவேற்ற பெண்மணி ஒருவர் "the girl in the admin building will help you" என்று சொல்ல சில பல நடிகைகளை மனதிற்குள் கற்பனை செய்து சென்ற என்னை ஔவையாரின் வயது மற்றும் பஞ்சுத் தலைமயிருடன் இருந்த அட்மின் கேர்ள் வரவேற்றது முதலாவது ஆச்சரியம். ஒரேயொரு கையொப்பம் வைத்து நிமிர்ந்த என்னைப் பார்த்து "terrific" என்று அவர் திருவாய் மலர்ந்தருளியது அடுத்த ஆச்சரியம். எனக்குத் தேவையான access cards, student ID என்று பலவற்றை நொடிப்பொழுதில் பெற்றுத் தந்தார்.

எதிரே முன்பின் தெரியாதவர்களைக் கண்டாலும் "good day mite", "how are you" என்று புன்சிரிப்போடு நலம் விசாரிக்கும் அவுஸ்திரேலிய மக்களை இலகுவாகப் பிடித்துப் போனது. ஒன்றுமே இல்லாத சிறிய செயல்களைச் செய்தால் கூட terrific, marvelous, wonderful, brilliant என்று பாராட்டும் தன்மை மதிப்பை மேலும் அதிகரிக்கச் செய்தது. பல்கலைக்கழகம் தவிர்ந்த மாலை வேளைகளில் பனி படர்ந்த கன்பெராவின் ஆளரவமற்ற சாலைகளில் நடக்கும்போது பாலுமகேந்திரா அவர்களின் மூடுபனிக் காட்சிகள் அவ்வப்போது நினைவலைகளை மீட்டிச் சென்றது.

ஒரு இன்ஜினியர் டாக்டராக மாறும் வேளையில் திருமணம். தனிமரம் தோப்பானது. கன்பெராவில் வேலை. 2005ம் ஆண்டில் மிகப்பெரிய சாலைத் திட்டமாகத் தொடங்கப்பட்ட EastLink பிராஜெக்ட் வேலைக்காக மெல்பேர்ண் மாநகருக்கு வந்து சேர்ந்தபோது உலகின் முதல் மூன்று liveable cities என்ற தெரிவுக்குள் பல ஆண்டுகளாக ஒரு இடத்தை மெல்பேர்ண் தக்க வைக்கும் என்பதுவும் எனக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை ராஜா. வாய்ப்பில்லை.

வேலைத்தளங்களில் நெருக்கடிகள் குறைவு. வார இறுதி நாட்களிலோ வேலை நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களிலோ குடும்பம் மற்றும் நண்பர்களுக்கான நேரம், இவை போதாதென்று வார இறுதி ஒன்றுகூடல்கள், கலாசார விழாக்கள் என்று அவுஸ்திரேலிய வாழ்க்கை இனிமையாகக் கழிந்து கொண்டிருந்தது.

உலகளவில் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கம் அவுஸ்திரேலியாவை முட்டி மோதிய 2012ம் ஆண்டின் பிற்பகுதி. கட்டுமானத் துறையில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படத்தொடங்கிய காலம். அடுத்த வருமானவரி ரெய்ட் யாருடைய வீட்டில் பாயும் என்று தமிழ்நாட்டு அடிச்ச பெருமக்கள் அடைந்து கொண்டிருக்கும் கலக்கம்போல, HR அழைப்பு எப்போது வருமோ என்று தனியார்த்துறை ஊழியர்கள் பலரும் தவித்துக் கொண்டிருந்த காலம். எங்காவது வெளியே சில மாதங்கள் சென்று வரவேண்டும் என்று மூளையின் செல்கள் அலாரம் அடித்தன. நியூசிலாந்து, மத்திய கிழக்கு நாடுகள், சிங்கப்பூர் என்ற மும்முனைத் தெரிவுப் போட்டியில் சிங்கப்பூர் என் தெரிவாகியது.

ஒன்பது, ஏழு, நான்கு வயது நிரம்பிய புதல்வர்களை மனைவியின் பொறுப்பில் விட்டுவிட்டு விமானம் ஏறியபோது அதிகமாக ஆறு மாதங்கள் அல்லது ஓராண்டுக்குள் திரும்பி விடலாம் என்ற எண்ணமே நிறைந்திருந்தது. விமான நிலையத்தில் என்னை வழியனுப்பித் திரும்பிய வழியில் மூத்த மகன் கால்களைக் காருக்குள் கோபமாக உதைத்துக் கொண்டே திரும்பியதாக மனைவி சொன்னார். இரண்டாவது மகனுக்குப் புரிந்தும் புரியாத வயது. கடைக்குட்டி தங்கத்துக்கு தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று தெரிந்திருக்க நியாயமில்லை. எங்கள் உணர்ச்சிகளை நாங்கள் கட்டுப்படுத்தலாம். குழந்தைகளின் உணர்ச்சிகள் ஏதோவொரு வகையில் வெளிப்படவே செய்யும்.

பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறி வேலை தேடும் பட்டதாரி இளையோருக்கும் திருமண பந்தத்தில் இணையாது தனித்து வாழும் மனிதர்களுக்கும் சிங்கப்பூர் வாழ்க்கை சமாளிக்கக் கூடியது என்றே சொல்லலாம். ஆனால் என்னைப் போன்று பல ஆண்டுகள் வேலை அனுபவமும் குடும்பப் பொறுப்பும் கொண்ட ஒருவருக்கு இத்தகைய தொழில் ரீதியான இடப்பெயர்வு அவ்வளவு சௌகரியமானதல்ல. புதிய நாடு, புதிய மக்கள், புதிய காலநிலை, புதிய சூழ்நிலை என்பவற்றைத் தவிர.

வாழ்க்கை பற்றிப் பெரிதான எதிர்பார்ப்புகள் எதுவுமின்றி முதல் வேலையில் காலடி பதிக்கும் இளவயது நண்பர்களுடன் ஒரே வீட்டில் வாழ்வது என்பது இருபாலாருக்கும் ஏற்புடையதல்ல. Chemistry wouldn't work out. எனவே, தனியாக ஒரு தங்குமிடம்

தேடவேண்டும். இரண்டாவது சிக்கல் உணவுப் பிரச்சினை. அவ்வப்போது சிங்கப்பூர் நாட்டிற்கு உல்லாசப் பயணம் வருபவர்கள் சிங்கப்பூரில் இருக்கும் உணவகங்கள் பற்றிச் சிலாகித்துப் பேசலாம். ஆனால் அங்கேயே தொடர்ந்திருந்து குப்பை கொட்டுபவர்களுக்குத்தான் தொடர்ச்சியாகக் கடைகளில் உண்பதால் ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகள் பற்றிய தெளிவிருக்கும். கண்ணாடிக்குள் தெரியும் கோழிக்கறி பிரட்டலாகட்டும், கிழங்குப் பிரட்டலாகட்டும். ஒரு அங்குல உயரத்திற்கு எண்ணெய் மிதக்கும். மிகவும் பிரபலமாகப் பேசப்படக்கூடிய ஒரு சைவ உணவகத்தில் உழுந்து வடையொன்றை வாங்கிச் சில பல டிசூக்களால் பிழிந்தெடுத்து என் விரல்களுக்கு எண்ணெய்க் காப்பு சாத்திய அனுபவம் ஒரு சிறிய உதாரணம் மட்டுமே. ஆனாலும் fish head curry special தொடக்கம் சுவையான உணவுகளுக்குப் பெயர் பெற்ற இந்திய உணவகங்கள், சைனீஸ் மற்றும் மலே உணவகங்கள், கையேந்தி பவன் போன்று தெருவுக்குத் தெரு சாப்பாட்டுக் கடைகள் என்று வீட்டிலே சமையல் செய்யும் வேலையைக் கணிசமாகக் குறைக்கக்கூடிய வேலையைப் பல உணவகங்கள் செய்து வருகின்றன என்பது நிதர்சனம்.

*1998*ல் சில மாதங்கள் சிங்கப்பூரில் வேலை செய்திருக்கிறேன். அப்போதெல்லாம் தங்குமிடம், உணவு பற்றிய கவலைகள் இருந்ததில்லை. Yishun MRTக்கு அருகில் அண்ணாவின் குடும்பம். நேரத்திற்கு சமைத்துப் போட அண்ணி. மக்கள் தொகையும் அப்போது குறைவு. MRT (Mass Rapid Transport) தொடருந்தில் ஏறினால் கால்களை நீட்டிப் படுத்துக்கொண்டு செல்லலாம். அப்படி இடநெருக்கடியின்றி இருந்த காலம். பதினைந்து ஆண்டுகளில் எண்ணிப்பார்க்க முடியாத வளர்ச்சி. பிரயாணங்களில் நின்று போவதற்கு இடம் கிடைத்தாலே அது மிகப்பெரிய சாதனையாகத் தெரிந்தது.

சிங்கப்பூர் என் தெரிவானதற்கு இப்படியான விட்டகுறை தொட்டகுறைகளும் ஒரு காரணம். இன்னுமொரு காரணம் என்னுடன் படித்த இருவர், எனக்கு சீனியராகப் படித்த சிலர், ஜூனியராகப் படித்த பலர் என்று ஒரு நண்பர்கள் குழாம் இருந்தது. நான் கொம்பனியில் சேர்ந்த முதல்நாளே மணியண்ணை வந்திருக்கிறார் என்று என்னைச் சந்தித்து சந்தோஷ முகங்கள் காட்டிய பாசக்கார பயபுள்ளைக பலர்.

ஒருவழியாக வவுனியாவைச் சேர்ந்த ஒரு இளம் குடும்பம் தங்கள் வாடகை வீட்டில் எனக்கு மாஸ்டர் பெட்ரூமை வாடகைக்குத் தந்து தங்க வைத்தார்கள். அவர்களுக்கு ஒரு குழந்தை வரவாக, உதவிக்கு ஒரு பணிப்பெண் என்று நானும் அவர்கள் குடும்பத்துடன் ஒன்றாகினேன். எனக்கான சமையலை நானே செய்து கொண்டாலும் அவ்வப்போது அவர்கள் என்னைத் தங்களுடன் உணவருந்த அழைப்பதால் சிலவேளைகளில் உணவுப் பிரச்சினை சுமூகமாக, சில வேளைகளில் கடைகளிலும் உணவருந்தி அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகின.

Ceylon workers club, Sentosa island, முஸ்தபா ஷாப்பிங் சென்டர், அவ்வப்போது செண்பகவிநாயகர் உள்ளிட்ட கோயில்கள், ஜில்லா, வீரம், ஐ, சூது கவ்வும், மீகாமன், பாபநாசம், பாகுபலி உள்ளிட்ட கணிசமான திரைப்பட வரிசை, ஒரு தடவை

சிங்கப்பூர், மலேஷியாவை சுற்றிப் பார்க்கக் குடும்பத்தினர் வந்தபோதும் வேறு இரு சந்தர்ப்பங்களிலும் Battucave என்று அழைக்கப்படும் மலேஷியா முருகன் கோயிலுக்குச் சென்று உலகில் உயர்ந்த முருகனை நேரிலும் அங்கங்கே ஓடித் திரிந்த பில்லா அஜித்தை அகக்கண்ணிலும் கண்டவை என்று அனுபவப் பகிர்வுகளும் இங்கே அடக்கம்.

ஆண்டுக்கு மூன்று அல்லது நான்கு தடவைகள் வீட்டுக்கு வந்துபோகும் சந்தர்ப்பம் வாய்த்தது. வீட்டில் இருக்கும்போது மகிழ்ச்சி, ஆரவாரம், நண்பர்கள் சந்திப்பு என்று எல்லாமே கொண்டாட்ட மனநிலைதான். ஆனால் மீண்டும் விமானநிலையத்தில் என்னை வழியனுப்பிவிட்டு குடும்பத்தினர் திரும்பும்போது, பாலர் வகுப்பில் விட்டுவிட்டுக் கையசைத்துச் செல்லும் அப்பாவின் அல்லது அம்மாவின் பின்னால் அழுதுகொண்டே ஓடிச்செல்லும் சிறுவர்கள்போலத் திரும்பவும் வீட்டுக்கு ஓடி விடலாமா என்று எண்ணத் தோன்றும். தோன்றியிருக்கிறது. ஆனாலும் அடக்கு அடக்கு என்று ஆசாபாசங்கள் தாண்டி வந்த கடமையுணர்ச்சி தடுத்திருக்கிறது.

ஒருபுறம் என்னுடைய நிலை இப்படி என்றால், தனியொருவராகப் பிள்ளைகளின் பாடசாலைக்கல்வி, பிரத்தியேக வகுப்புகள், extra-curricular activities, சமையல், வீட்டு வேலைகள், வீடு சுத்தம் செய்தல், வேண்டுதல் வைத்தாலும் வளராத தலைமயிரைப்போலன்றி வேண்டாமலே வளர்ந்து விடுகின்ற புற்களை வெட்டுதல், பிறந்தநாள், திருமண, அரங்கேற்ற நிகழ்வுகள், கலாசார விழாக்கள் etc etc என்று என்னுடைய மனைவி was on full swing.

ஆறு மாதங்கள் ஓராண்டாகி, ஓராண்டு ஈராண்டுகளாகி, ஈராண்டுகள் மூன்று ஆண்டுகளை நெருங்கிவிட்டது. மூன்று ஆண்டுகளாகத் தொலைத்து விட்ட அவுஸ்திரேலிய வாழ்க்கைக்காக மனம் ஏங்க ஆரம்பிக்கிறது. "Any plan for this weekend mate?" என்று வியாழக்கிழமை மதியத்திற்குப் பின்னர் விசாரிக்க ஆரம்பிக்கும் அவுஸ்திரேலிய நாட்டவர்களின் வாழ்க்கையை அனுபவித்து வாழும் எண்ணங்களைத் தேடி மனம் அலை பாயத் தொடங்குகிறது.

என்னிடம் ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து தற்போது அவுஸ்திரேலிய தேசத்தில் வாழ்ந்து வரும் மூத்த குடிமகன் ஒருவர் ஒருமுறை சொன்னது நினைவுக்கு வருகிறது. திருமணம் முடித்து கைக்குழந்தையுடன் மனைவியை விட்டு சவூதிக்கு சென்றவர் இரு வருடங்களுக்கு பின்னரே விடுமுறை கிடைத்து அவர்களின் முகங்களைப் பார்க்க கிடைத்ததாகச் சொன்னபோது அவசர அவசரமாக Skype, whatsapp, viber போன்ற தொழில்நுட்ப நண்பர்களை மனம் நன்றியோடு நினைத்துக் கொண்டது.

பேருந்து வந்து விட்டது. மாமியார் வீடு என்னும் ஈழத்து திரைப்படத்திற்காக " இந்த ஊருக்கு ஒருநாள் திரும்பி வருவேன் அதுதான் எனக்குத் திருநாள்" என்ற ஜோசப் ராஜேந்திரனின் பாடல், அந்த நாட்களில் பொங்கும் பூம்புனலில் கேட்டது நினைவில் வந்து போகிறது.

பேருந்து நகரத் தொடங்குகிறது.

புதிய ஆண்டு பிறந்து நான்கு மாதங்கள் ஓடிவிட்டன. செண்பகவிநாயகர் ஆலயத்திலிருந்து மனமுருகி வேண்டினேன். "அப்பனே விநாயகா, மீண்டும் குடும்பத்துடன் இணைய வேண்டும். பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும்போதே அவர்களின் குறும்புகளை அனுபவித்து மகிழவேண்டும். உனக்குப் பல வேலைகள் இருக்கும். நேரம் இருக்கும்போது என்னையும் கவனித்துக் கொள்". சில நாட்களில் மெல்பேர்ணின் பழமை வாய்ந்த geotechnical consultancyயின் அழைப்பு. அடுத்த வந்த சில நாட்களில்

துரிதமாக telephone interview நடந்தது. உடனேயே வேலையில் சேருமாறு அழைப்பு. "காட் கணேஷ், இப்படி அசத்திறியேப்பா".

மூன்று ஆண்டுகள், இரண்டு மாதங்கள், பதினான்கு நாட்கள், பதினெட்டு மணித்தியாலங்கள், சில பல நிமிடங்கள் மற்றும் வினாடிகளை சிங்கப்பூரில் செலவழித்த பின்னர் 2016ம் ஆண்டின் நடுப்பகுதியில் விமானம் ஏறுகிறேன். குடும்பம், நண்பர்கள், வேலை, மகிழ்ச்சி, அவுஸ்திரேலிய வாழ்க்கை என்று மீண்டும் புதிதாகப் பிறக்கிறேன்.

"வீடு நோக்கி ஓடி வந்த என்னையே நாடி நிற்குதே அநேக நன்மையே உண்மையே" என்ற TMS குரல் காதுகளில் ரீங்காரம் செய்கிறது.

## யாரோடுதான்



*ஆவூரான்*

"என்னப்பா உங்கிட பிரச்சனை"?

"ஐயோ இந்தக் கேள்விதானுங்க எல்லாப் பிரச்சனைக்கும் காரணம்"

என்னால முடியாது. இனியும் நான் இங்க இருந்தால் என்னை ஏதாவது ஒரு மன நோயாளிகள் வைத்தியசாலையில்தான் கொண்டு போய்ச் சேர்த்து விடுவார்கள் இவர்கள். இது நடக்கும். இவ்வளவு நாளும் நான் வேலை,வேலை என்று ஓடி வேலையும் வீடும் என்றும் இருந்தனான். நாலு மாதத்துக்கு முன்தான் பென்சன் எடுத்து வீட்டோட நிம்மதியா பிள்ளையளோட இருக்கலாம் என்று எவ்வளவோ கனவுகளோடும் திட்டங்களோடும் எப்படி எல்லாம் இருக்கவேணும் என்று இருந்த எனக்கு சத்தியமா பைத்தியம் பிடிக்கும் போலத்தான் இருக்கு."

பிள்ளைகள் வளரும் காலத்தில் அதுகளோடு நேரம் செலவழிக்க முடியவில்லை என்ற ஏக்கமும் கவலையும் எப்போதும் இருந்துகொண்டேயிருந்தது.

பிள்ளைகளின் பாடசாலையில் நடக்கும் நல்ல நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதில்லை. ஒரு பூங்காக்கு கூட்டிக்கொண்டு போனதில்லை. வடிவா சமைக்கத் தெரிந்தும் சமைச்சு கொடுக்கவில்லை. இனி சமைச்சுக் கொடுக்கவேணும். மேசையில் அதுகள் இருந்து சாப்பிடும் போது நிறையக் கதைக்கவேணும் என்று எவ்வளவு...எவ்வளவு ஆசைகள் மனதில் நிறைஞ்சு மிதந்து கொண்டிருந்தது.

முன்பெல்லாம்

"எப்ப அப்பா உங்களுக்கு நேரம் இருக்கும் "என்று மகன் கேட்டிருக்கிறான். இதை எல்லாம் நிறைவேற்றவேணும் என்ற கனவுகளோடு இருந்தனான். எல்லாம் போச்சு.

"எங்கட காலத்தில் சொந்த நாட்டில் வாழமுடியாத நிலை வந்த போது எங்காவது கண் காணாத நாட்டுக்கு ஓடி விட வேண்டும் என்று படாத பாடு பட்டு இந்த நாட்டில வந்து இறங்கி சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியில் ஒரு நிரந்தர வேலையை எடுத்து தங்காவைக் கல்யாணம் கட்டி இரண்டு பிள்ளைகளையும் பெற்று வளர்த்து நிமிர்ந்த போது வயதும் 65 தொட்டு இப்ப நிற்கிறேன்".

மனைவி தங்கா சமைக்கிறாள். மேசையில் சாப்பாடு இருக்கு நல்லாப் போட்டுச் சாப்பிடுகிறேன். தோட்டத்தில் வேலை செய்யிறன், நாயைக் குளிப்பாட்டி அதன் கழிவுகளை எல்லாம் துப்பரவு செய்து, நாயை நடக்கக்கொண்டு போய்வாறன். மூன்று பேரின்ர கார்களையும் கழுவி வைக்கிறன். குசினி, குளியல் அறை எல்லாவற்றையும் சுத்தமாக வைக்கிறன். மனைவி உடுப்புகளை துவைத்துக் காயப்போட நானே அதனை

எடுத்து மடித்து சில நேரம் அயன் பண்ணியும் வைக்கிறேன். "தந்தையர் தினத்துக்கு" வெளியில கூட்டிக்கொண்டு போய் சாப்பிடுறம்.

அப்பா ...என்ன பிரச்சனை. எல்லாம் ஒழுங்காத்தானே இருக்கு. நாங்களும் சந்தோசமாக இருக்கிறோம். அப்பா உங்களையும் சந்தோசமாகத்தானே வைத்துப் பார்க்கிறோம். இரண்டு பிள்ளைகளும் என்னைப் பார்த்துக் கேட்குதுகள்.

அது நியாயம் தான் ஆனால் இதுவா வாழ்க்கை, இது பிழைப்பு. சில நிமிடங்களாக இருந்தாலும் வாழ்க்கையை வாழ்க்கையாக வாழ வேணும் என்பது எனது வாதம்.

"வாழ்க்கை வாழ்வதற்கே"

எனக்கு இது .... இது கொடுமை. எப்படி நான் இதில் இருந்து விடுபடுவன். ஏன் மற்றவர்கள் போல நானும் மாறக் கூடாது.

"என்னப்பா உங்கிட பிரச்சனை"?

இந்தக் கேள்வியை இவ்வளவு நாளும் பிள்ளையள் தான் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இன்று மனைவியும் கேட்டுப் போட்டாள்.

பிள்ளையள் காதுக்குள்ள ஹெட்போன் போட்டுக் கொண்டு படிக்கிறம் எண்டு சொல்லுங்கள். கிட்டப் போய்க் கேட்டால் சினிமாப் பாட்டு கேட்கும். அந்த நேரம் மகனிட்டையோ, இளைய மகளிட்டையோ ஏதும் கேட்டால்

"இப்ப ஏனப்பா கத்துறியள்" என்று என்மீது பாயுங்கள். யாரோடும் கதைக்க முடியவில்லை. யாரும் என்னோட கதைக்குதுகளும் இல்லை.

நாங்கள் யாரு கதைச்சுக் கதைச்சு காலம் கடத்திய வரலாற்றுப் பரம்பரை.

வரலாற்றை கடத்திக் கொண்டு போக வேண்டி நான் யாருமே என்னோடு கதைக்காட்டி எப்படி இருக்கும்.

"தங்கா...தங்கா...த.ங்..கா"

குசினிக்குள் சமைத்துக் கொண்டிருந்த மனைவி தங்காவை கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பார்த்தன் ஒரு பதிலும் வரவில்லை என்பதால் போய் எட்டிப் பார்த்தால் நீங்க நம்பமாட்டீங்க மனைவி தங்காவும் காதில ஹெட்போன் போட்டுக்கொண்டு ஏதோ நாடகமோ ஏதோ பார்த்து சமைக்கிறாள்.

நான் கூப்பிட்டதற்கு பதில் வராததால் அவளைத் தொட்டு கதை கேட்டுப் போட்டேன்.

உடன ஒரு பாய்ச்சல் பாஞ்சு " "என்னப்பா உங்கிட பிரச்சனை" எண்டு கேட்டுப் போட்டாள்.

அவள் கேட்டதும்தான் நான் சரியா உடைஞ்சு மனம் பதறி மேலெல்லாம் நடுங்கிப் போனன். இந்தப் போன் வந்தது பிரச்சனை இல்லை இந்த ஹெட்போனைக் கண்டு பிடித்ததுதான் பிரச்சனை.

எல்லா ஹெட்போனையும் எடுத்து உடைச்சு அடுப்பில போட்டா என்ன எண்டு தான் மனதில தோன்றிக் கொண்டிருக்கு.

நான் என்ன கதைக்கப் போனேன்  என்று ஒரு கேள்வியும் கேட்காமல்

"இந்தாங்கோ வெயிலுக்கு நல்லம் குடியுங்கோ"

எண்டு எதையோ கொண்டு வந்து தந்தாள். இதைத் தான் youtube இல் பார்த்து செய்தவள் போல கிடக்கு.

தோட்டத்தில் மரத்தோடையும், நாயோடையும் கதைத்து முடிஞ்சுது. நல்ல வெய்யில் தான் அடிக்குது வெளியில நானும் போக பக்கத்து வீட்டு கிறீஸ் நாட்டுப் பொம்பிளப்பிள்ளை 2 வயதுப்  பிள்ளையையும் கொண்டு நடக்கப் போக வெளிய வந்தாள். அந்தப் பிள்ளையோட கொஞ்சம் பேசலாம் என்ற ஆவல் மேலோங்க ஆர்வமாக நடந்து முன்னுக்கு வந்தால்,

ஐயோ அந்தப் பெட்டையும் காதில ஹெட்போனை போட்டுக் கொண்டு குழந்தைப் பிள்ளையின் காதிலையும் ஹெட்போன் போட்டபடி வண்டிலுக்குள் இருந்து iPad ஐ பார்க்கத் தொடங்கிற்று. பின்னாக வந்த நாயின்ர காதை எட்டிப் பார்த்தேன் என்ன கொடுமை, நாய்க்கு கூட ஹெட்போன்மாதிரித்தான் ஏதோ போட்டிருக்கு

அட கொடுமையே, வாயில கைவைச்சு நிமிருறன். மகள்தான்..

"அப்பா .... அப்பா .... வாங்கோ

அம்மா சாப்பிடக் கூப்பிடுகிறா" என்று மகள் கூப்பிட நானும் ஆவலாக

மேசைக்குப் போய் எல்லோரோடையும் சேர்ந்து பேசிக் கதைத்துக் கொண்டு சாப்பிடுவம் என்று மேசையில் இருந்தால்

மகள் மடிக் கணனியுடனும், மகன் iPad உடனும், மனைவி யாருடனோ போனில் chat பண்ணிக் கொண்டும் சாப்பிடத் தொடங்கினார்கள்.

எனக்கு கோபம் தலைக்கேறித் தாண்டவம் ஆட

"எல்லாத்தையும் நிப்பாட்டுங்கோ சாப்பிட வந்த இடத்திலையும் ஹெட்போன் போட்டுக்கொண்டு சாப்பிட்டா என்ன சாப்பிடுறம்,என்ன கோப்பையில் இருக்கு எண்டு தெரியாமல் சாப்பிட்டுக் கொண்டு போறியளே"

நான் கத்திக் கொண்டு எழும்பி வெளியில போகிறேன்.

"அப்பா உங்களுக்கு என்னப்பா பிரச்சனை"?

என்ற வார்த்தைகளுடன் பிள்ளைகளும் எழும்பி அவரவர் அறைகளை நோக்கிப் போய் விட்டார்கள்.

"வடிவாகச் சமைத்து வைக்க அதைச் சாப்பிடாமல் செய்து போட்டியளே...."

என்று மனைவி சொன்னதும் நானும் மனங்கசிந்து தான் போனேன்.

கவலையாயும் போச்சுது.

"அம்மா ... அப்பாவைக் கூட்டிக் கொண்டு போய் சீனியர் சிற்றிசன் ஆட்களோடு சேர்த்து விடுங்கோ அங்க சாம் அங்கிளைப் பார்த்தாவது திருந்தட்டும். சாம் அங்கிள் எப்படி துள்ளிக் குதித்துக்கொண்டு சந்தோசமாக இருக்கிறார். அவரோட சேர்த்து விடுங்கோ"

என்று சொல்லிக்கொண்டு மகள் வெளியே வந்தாள்

நான் இவ்வளவு நாளும் குதிரைக்கு கண்ணைக் கட்டி விட்டமாதிரித்தான் இருந்திருக்கிறேன். வேலை, வேலை முடிய வீடு, அதன் பின்பு சாப்பிட்டுவிட்டு TV பார்த்துவிட்டுத் தூங்குவது. ஒரு இயந்திர வாழ்வு தான் வாழ்ந்திருக்கிறன் என்பது அப்ப புரிஞ்சுது

"அப்பா வாங்கோ கடைக்கு போய் வருவோம் என்று மகள் கேட்டாள். நானும் சந்தோசமாக காரில ஏறி இருந்து கொண்டு

"மகள் மன்னிச்சுகொள்ளுங்கோ மதியம் சாப்பிடும் போது நான் கொஞ்சம் கோவப்பட்டுப் போனன் "

நான் கதைக்க ஆரம்பிக்கிறன். பார்த்தா அவள் தலையை ஆட்டுறாள்

அது எனக்கில்லை அவள் மற்றக் காதில போட்டிருக்கிற ஹெட்போனில கேட்கிற பாட்டுக்கு என்பது நான் எட்டிப் பார்த்த போது தான் தெரிந்தது.

மகள்தான் கையை நீட்டி வெளியில் பார்க்கச் சொல்லி சைகை செய்யிறாள்

வெளியில பார்த்தா

நான் திடீர் என்று தான் இந்த உலகத்தைப் பார்க்கிறன்போல. நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானவர்கள் ஹெட்போன் போட்டிருக்கிறார்கள், தனியப் பேசுகிறார்கள் தலையை ஆட்டிக்கொண்டு போகிறார்கள், தனிய நின்று கையை மேலையும் கீழயும் காட்டி ஆட்டிக் கதைக்கிறார்கள் பெரிதாக வாய் விட்டுச் சிரிக்கிறார்கள்.

என்றோ பார்த்த சார்ள்ஸ் வாத்தியாற்ர நாடகம் மாதிரி இருக்குது

இப்படியே நானும் இருக்கேலாது. இது ஒரு புதிய உலகம் இந்தக் காட்டுக்குள் வழி தவறி வந்தவன் மாதிரி. நான் நின்று கொண்டு இருக்கிறன் இப்படி இருக்க முடியாது நானும் மாறவேண்டும். முடியுமா?..

இந்த நவீன உலகம் அபாரமான வளர்ச்சியில் நிற்கும் போது நானும் என் போன்றோரும் மூடத்தனமான எதிர் வாதங்களையும் அடாவடித் தனங்களையும் செய்து மாற்றலாம் என்று ஒரு காலைத் தூக்குவது கவிஞர் வாலி சொன்னமாதிரி " எல்லோரும் அம்மணமாக நிற்கும் போது நான் மட்டும் ....."

ஆனால் இதை எதிர்த்து இதில் இருந்து விடுபட்டு தனிய எல்லோரும் ஒரு நிலைக்கு வர வேண்டும் என்ற புதிய பிரதிவாதக் கருகூலம் உருவாகும் அப்போ,,,,,"

சங்கரின் திரைப் படம் மாதிரி

அப்படி ஒரு நிலையை எண்ணிப் பார்த்து மனதுக்குள் சிரிக்கிறன்.

ஒரு கடையின் முன்னால் காரை நிறுத்தி எனக்கொரு ஹெட்போன் வாங்கிக் கொண்டுவந்து தந்தாள் மகள். என்ர போனில் இருந்து ஏதோ செற் பண்ணி விட்டு காதில் போட்டு விட்டாள்.

என்ர போனில் இருந்து

"காதோடுதான் நான் பாடுவேன்

மனதோடுதான் நான் பேசுவேன்"

என்ற அருமையான பாடல் ஒலிக்க மகள் நிதானமாக கரை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

பாடல் முடியவும் வீடு வந்து சேர்ந்ததும் மனைவி ஓடி வந்து எட்டிப் பார்த்து வாயில கை வைத்து. நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டு உள்ளே போய் கைப் பெருவிரலைத் தூக்கி மகனுக்குக் காட்டிக் கொண்டு போகிறாள்

நான் இன்னொரு பாட்டுக் கேட்க போனை எடுத்துப் பார்க்கிறேன்.

# நகர்வு



***பகீ***

என் வாழ்வில், மூன்று பாரிய இடம்பெயர்வுகளும் மறக்க முடியாதவை.

இம் மூன்றும் ஒன்றுக்கொன்று, அவைக்கான தூண்டுதல் காரணிகளால் வேறுபட்டிருப்பினும் நோக்கம் ஒன்றாய்த்தான் இருந்தன- விடிவிற்காய்!

இலங்கையில் நடந்த இரு இடம்பெயர்வுகளிலும் கூடவே அம்மா,அப்பா, தங்கை, அத்தான், மச்சாள் என பலரும் இருந்திருந்தனர். நடைபயணங்களில் பிஞ்சுக் கால்கள் வலித்த பொழுதுகளில் நடை வேகம் குறைந்தது. கூட்டத்தைப் பிரிந்து நடந்த பொழுதுகளில் அருகே ஒரு நாய்க்குட்டி பயணத் துணையானது.

இம் மூன்றாவது இடம்பெயர்வுக்கு நிழலே துணையானது. அவுஸ்த்திரேலியாவுக்கு வந்து நான்கு வருடங்களில் மெல்பேர்ண் வாழ்க்கைக்கு செம்மையாக இசைவாக்கமடைந்ததுடன் பல ஆரோக்கியமான நட்புகளையும் உருவாக்கி சுமூகமான சூழலில் வாழத் தொடங்கியிருந்தோம். புலம் பெயர் வாழ்வின் கனவுகளுக்கு வர்ணங்கள் அழகாய்ப் பொருந்தி வந்த வண்ணம் இருக்கையிலேதான், புள்ளிகளின் அடிப்படையிலான நிதந்தர வதிவுரிமை வழங்கும் சட்டத்தில் மாற்றங்கள் அமுலுக்கு வந்தன.அதன் பிரகாரம் எமக்கிருந்த தெரிவு ஒன்று மட்டும் தான் - தஸ்மேனியாவிற்கான பெயர்வு.

தஸ்மேனியத் தீவுக்கான கப்பல் பயணம் இரவுநேரச் சேவை. காரும், நானும், குழப்பங்களும், சிறு பதட்டமும் எல்லாம் இருளிலே.

ஏறத்தாழ ஒன்பது மணிநேரக் கப்பல் பயணம். இப்பயணம் என்னை ஓர் விஞ்ஞானியிடம் கொண்டுசேர்க்கும் என நான் அறிந்திருக்கவில்லை. தஸ்மேனியாவில் கால் பதித்து ஏறக்குறைய ஓராண்டுகளாக ஊரோடியாய் வாழ்ந்த பின்னரே மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடனான ஓர் வாழ்விடத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. அதன் பின்னரான தொடர் நிகழ்வுகள் தஸ்மேனியாவுடனான வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் ஒரு பிணைப்பினை ஏற்படுத்தியிருந்தன.

தற்போது எனது வாழ்க்கைத் துணையும் என்னோடு இணைந்து கொண்டுவிட்டாள். தொழிலும் நாம் வாழ்ந்த வீட்டிலிருந்து ஐந்து நிமிட நடை தூரத்திலேயே அமைந்துவிட்டது. வார விடுமுறைகளை அவ்வூர் மக்களின் இயல்பு வாழ்க்கையை அறியவும், இயற்கைச் செழுமை நிறைந்த இத்தீவின் தனித்துங்களை அறியவும் என ஒதுக்கிக் கொண்டோம்.

அதே சமயம் உள்ளூர் நூலகத்தில் தொண்டராக இணைந்து கொண்டு கனிஷ்ட கற்கைநெறிகளுக்கான கணித பாடத்தினை கற்பித்து வந்த தருணத்தில் என்னோடு கூடவே தொண்டராக பணிபுரிந்த ஒரு பெண்மணி எம்மை விருந்திற்கு அழைத்திருந்தார். அந்த இரவு விருந்துதான் தஸ்மேனிய வாழ்க்கையின் மிகப்பெரிய திருப்புமுனை.

அவ்விருந்தின் பொழுது அப்பெண்மணியின் சகோதரர் ஒருவரின் குடும்பத்தினரும் அவரின் நெருங்கிய நண்பர் ஒருவரும் வந்திருந்தார்கள். அப்பெண்மணியின் வதிவிடம் ஓர் பண்ணையின் நடுவிலே அமைந்திருந்த புராதன வீடமைப்புச் சாயலில் நிர்மாணிக்கப்பட்ட அழகிய வீடு.

பேசிச் சிரித்தபடி இருக்கையிலேயே எனக்கருகிலிருந்த அந்தச் சகோதரரின் நண்பர் தன்னை எனக்கு அறிமுகம் செய்தார். பின்னர் தொடர்ந்த சம்பாசனையில், தான் அவுஸ்த்திரேலியாவில் முதன்முதலில் நிறுவப்பட்ட அணு ஆராய்ச்சி நிலையத்தின் மின் இலத்திரனியல் பிரிவு விஞ்ஞானியாக பல வருடங்கள் கடமையாற்றியதாகவும் ஒரு மாறுதலுக்காக பின்னர் அந்தாட்டிக்கா கண்டத்தின் நிலக்கீழ் ஆய்வுக்கான இங்கிலாந்துடனான ஒருங்கிணைந்த தொலைத்தொடர்புத் திட்டத்தில் முதன்மைவிஞ்ஞானியாக கடமையாற்றியதாகவும் அந்தாட்டிக்கா கண்டத்தில் தங்கியிருந்த காலத்தில் நடந்த சுவாரசியமான பல அனுபவங்களைப் பற்றியும் எனக்கும் ஏனையோருக்கும் சொல்லிக்கொண்டிருந்தார்.

அது தவிர தற்போது ஓய்வு நேரப் பொழுது போக்கிற்காக ஒரு சிறிய விண்வெளித் தொலைநோக்கு கூடமொன்றை அமைந்துள்ளதாகவும் தனது வீட்டிற்கு வந்து அவற்றைப் பார்க்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

எனக்கே ஆர்வம் பற்றிக்கொண்டுவிட்டது. சற்று அளவு மிகுதியாகவே.

அடுத்தநாள் காலையிலேயே வருகிறேன் என்றுவிட்டேன். தாராளமாக வாருங்கள், உங்கள் மனைவியையும் அழைத்து வாருங்கள் என்றவர், நானே அவரை நேரில் அழைக்கிறேன் என்றவர், தானே எழுந்து எனது மனைவியருகில் சென்று அழைப்பினை ஏற்றுக்கொள்ளவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

பல மணிநேர சுவாரசியமான சம்பாசனை, அனுபவப் பகிர்வுகள், விஞ்ஞான விந்தைகள், இடையிடையே குறைவில்லாமல் குடித்துக்கொண்ட கோப்பிகள், சிரிப்புக்குக் குறைவில்லாத நகைச்சுவையான பல கதைகள் என காலையிலிருந்து மாலைவரை அந்த விஞ்ஞானி வீட்டிலேயே நேரம் நகர்ந்தது.

அவரின் சந்திப்பின் பின்னர்தான் எனக்குள் மீண்டும் பொறியியல் சார்ந்த வேலைகளில் முனைப்புடன் ஈடுபடவேண்டும் என்ற ஆர்வம் உத்வேகம்கொண்டது.

ஒரு கணிதப் புத்தகத்தை எழுதிவிட வேண்டும் என்கின்ற ஆசை மொட்டவிழ்ந்தது.

சொல்லப்போனால் தஸ்மேனிய வாழ்க்கை பிடித்துப்போனது.

வார விடுமுறைகளின் பெரும்பாலானவை அவரின் வேலைப்பட்டறையிலேயே கழிந்தன. அவருக்கும் என்னையும் என் மனைவியையும் மிகவும் பிடித்தும் போய்விட்டது.

அவருக்கும் எமக்குமான அன்னியோன்யம் அதிகமாகி ஐக்கியமாகிவிட்டோம்.

வெளியிடங்களிலிருந்து தஸ்மேனியாவிற்கு சுற்றுலா வந்த நண்பர்களையெல்லாம் அவரின் வேலைப்பட்டறைக்கு அழைத்துப் போனோம்.

அவரும் தொலைநோக்கியில் பகலில் சூரியனையும் இரவில் பால்வெளியையும் மின்னும் தாரகைகளையும் காட்டி மகிழ்ந்தார்.

அவருடைய நேசமான மனித இயல்பு தஸ்மேனியா சுற்றுலா வந்த என் நண்பர்கள் அனைவரையுமே கவர்ந்திருந்தது, ஈர்த்திருந்தது.

பலர் இப்போதும் அவருடன் தொடர்பிலிருக்கிறார்கள், பரஸ்பரம் வாழ்த்து அனுப்பிக் கொள்கிறார்கள் - தபால் அட்டைகள் தான் அவருக்கு பிடித்தமானவை.

எவ்வாறான சிக்கல்கள் நிறைந்த விடயங்களாயினும் அவற்றை நடைமுறைக்கு சாத்தியமான விதத்தில் மாற்றியமைப்பதில் அவர் அபாரமான திறமைசாலி. நான் அவருடைய வேலைப்பட்டறையில் கற்றுக்கொண்டவை வெறுமனே பொறியியலும் மின்னியலும் விஞ்ஞானமும் அல்ல அவற்றையெல்லாம் தாண்டிய வாழ்க்கைத்திறன்!

தஸ்மேனிய வாழ்பனுவத்தின் மிகப் பெரும் பெறுமதியும் பேறும் அந்த விந்தை மனிதனுடனான சந்திப்புத்தான்.

சில புத்தகங்கள் சில திருப்பங்கள்

அவர் சந்திப்பு முதற் பக்கம்.

## என் வயிறு



*சாந்தி சிவகுமார்*

கண்ணாடி முன் நின்று சேலை மடிப்பு சரியாக உள்ளதா என சரி பார்த்துக்கொண்டேன். ச்ச...இந்த வயிறு மட்டும் இல்லைனா இன்னும் நல்லா இருக்கும். எரிச்சலாக வந்தது. என்ன பண்ணாலும் இது மட்டும் குறைய மாட்டேங்குது. எப்ப சேலை கட்டினாலும் வயிற்றை கரித்துக்கொட்டுவதையும் சேலை மடிப்புகள் உள்வாங்கி மறைத்துக்கொள்ளும்.

இப்படி, சேலை கட்டும் ஒரு நாளில் எனக்கே என் வயிற்றின் மீது கரிசனம் உண்டானது. ஏன் எப்பவும் இப்படி திட்டிக்கொண்டே இருக்கேன். என் இரண்டு மகன்களை சுமந்த வயிறு. அப்பொழுதெல்லாம், வயிறு பெரிதாவதை தடவித் தடவி இரசித்திருக்கிறேன். வயிறு நன்றாக தெரியும்படி புகைப்படமும் எடுத்திருக்கிறேன். இப்ப என்ன? இருந்தா இருந்துவிட்டு போகட்டுமே. இந்த வயிறுதான் உன் அடையாளமா? அதுவுமில்லாமல், தொப்பைதான் பிரச்சனை, வயிறு இல்லை. ஏன் இத்தனை விசனப்படவேண்டும் என வயிற்றை திட்டுவதை நிறுத்திவிட்டேன். திட்டுவதை மட்டும்தான். இன்னமும் வயிற்றை பற்றிய கிலேசம் உண்டு.

இப்படியான ஒரு நாளில்,ஒரு வருடமாக காத்துக்கொண்டிருந்த அறுவை சிகிச்சைக்கான கடிதம் வந்தது. கேசி மருத்துவமனையில் என் கர்ப்பப்பையை அகற்றும் அறுவை சிகிச்சைக்கான நாள் குறிக்கப்பட்டிருந்தது. கர்பப்பை இறங்கிவிட்டது. Pelvic floor உடற்பயிற்சி செய்தும் பலன் இல்லை. மாதவிடாய் காலத்தில் அதிகமான இரத்த போக்கு, நார்த்திசுக்கட்டி (Fibroids) அல்லது கர்பப்பை இறங்கிவிடுதல் (Prolapse) போன்ற காரணங்களினால் இந்நிலை ஏற்படலாம்.. இந்தியாவில் இது ஒரு சாதாரண அறுவை சிகிச்சைப்போல் பலமுறை கேள்விப்பட்டிருந்தாலும் மருத்துவர் விளக்கும்பொழுது சிறிது அச்சமாகவே இருந்தது. உடலோடு ஒட்டி இருக்கும் ஒரு உறுப்பை அப்படியே வெளியே அகற்றுவது சிறிய விஷயம் இல்லையே மருத்துவரிடம் ஆலோசனைகள் எல்லாம் முடிந்தது. அறுவை சிகிச்சைக்குப்பின் இரண்டு மாதங்கள் முழுக்க ஓய்வில் இருக்கவேண்டும்.

குறிப்பிட்ட தேதியில் அறுவை சிகிச்சை எந்தப் பிரச்சனைகளும் இன்றி நடந்தது. அன்றே வீட்டிற்கு அனுப்பும் வாய்ப்புள்ளது என்றும் கூறியிருந்தனர். ஆனால், மயக்க மருந்தின் பாதிப்பிலிருந்து விடுபட எனக்கு நேரமானதால் அடுத்த நாள் வீட்டிற்கு வந்தேன்.

வயிற்றில் நான்கு இடங்களில் தையல். உட்கார, எழுந்திருக்க சிரமமாக இருந்தது. மாமியும், கணவரும் வீட்டையும் என்னையும் கவனித்துக்கொண்டனர். இரண்டு நாட்கள் தூங்கித் தூங்கி எழுந்தேன். நன்றாக சாப்பிட்டேன்.

இந்த அறுவை சிகிச்சையின் பக்க விளைவு மலச்சிக்கல். அதற்கு மருந்து கொடுத்திருந்தார்கள். ஆனால் இரண்டு நாட்களாகியும் வேலை செய்யவில்லை. என் நெருங்கிய தோழி கீரை சூப் வைத்துக்கொடுத்தார். வேறு ஏதேதோ கை வைத்தியம்.

எதற்கும் அசையவில்லை. ஆறு நாட்களாகிவிட்டது. மருத்துவரிடம் சென்றேன். அவர் பயப்பட ஒன்றுமில்லை. இன்னும் இரண்டு நாட்கள் பாருங்கள். வயிறு வலியோ, வாந்தியோ வந்தால் உடனே மருத்துவமனைக்கு செல்லுங்கள் என்று கூறி அனுப்பிவிட்டார்.

அன்றிரவே சாப்பாடு கொள்ளவில்லை, என்னவோ சங்கடமாக இருந்தது. கொஞ்ச நேரத்தில் பிரட்டிக்கொண்டு வந்தது. உடனே மருத்துவமனைக்கு சென்றோம். இரவு பத்து மணி. அவசரப் பிரிவில் காத்திருக்கவேண்டுமே என எரிச்சல் வந்தாலும் ஒன்றும் செய்வதற்கில்லை. ஐந்து மணி நேர காத்திருப்பிற்குப்பின் விடிகாலையில் அனுமதிக்கப்பட்டேன்.

வயிறு அலங்கோலப்பட்டது. முட்டிக்கொண்டு வந்தது. எக்ஸ்ரே, இரத்தப் பரிசோதனை எல்லாம் முடிந்து இனிமா கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்து என்னை வேறு ஒரு வார்டுக்கு மாற்றினார்கள். பத்து நிமிடத்தில் இனிமா கொடுத்தனர். இருபது நிமிடங்கள் நீங்கள் பொறுத்துக்கொள்ளவேண்டும், அப்பத்தான் சரியாக வேலை செய்யும் என செவிலிப்பெண் கூற நான் அலாரம் வைத்துக்கொள்ளட்டுமா எனக் கேட்டேன். அவள் சிரித்துக்கொண்டே "Don't stress, no need to be so accurate. Try your best" என்றார். நான் இங்குதான் இருப்பேன், தேவை எனில் என்னை கூப்பிடு என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

பத்து நிமிடத்திற்குள் படபடவென வந்தது. வியர்த்தது. ஏடாகூடமாக எதுவும் ஆகிவிடக்கூடாது என கழிப்பறைக்கு சென்றேன். நான் சென்றதை யாரும் கவனிக்கவில்லை. கழிப்பிடம் காலியாக இருந்தது ஆசுவாசத்தை கொடுத்தது.

வயிற்றுக்குள் ஒரு பெரும் போரே நடந்தது. வியர்த்துக்கொட்டியது. பத்து நிமிடம் ஆகியும் ஒன்றும் வெளிவரவில்லை. யாரோ கதவை அசைத்து தட்டினார்கள். வயிற்றுக்குள் காற்று உருண்டு பிரண்டது. வயிறு வெடித்துவிடும்போல் இருந்தது. பிரஷர் போடக்கூடாது, தையல் பிரிந்துவிடும் என எச்சரிக்கப்பட்டிருந்ததால் தானாக வெளி வரட்டும் என் பெரும் அவஸ்த்தையுடன் அமர்ந்திருந்தேன்.

மறுபடியும் பிரஷர் கூடியது. வலி இல்லை. வேறு என்னவோ செய்தது. வழி அடைக்கப்பட்டு வெளி வர திணறியது புரிந்தது. வயிறு பிளந்துவிடுமோ என்று பயம். அடுத்த முறை என்ன ஆனாலும் முக்குவது என்று முடிவு செய்தேன். பிரசவத்தின்பொழுது கணவர் கூட இருந்தார். இப்பொழுது தனியாளாக, ஒரு மருத்துவமனை கழிப்பறையில் படும் அவஸ்த்தை...என்ன வாழ்க்கையிது? அவரவர் வலியை அவரவரே அனுபவிக்கவேண்டும். வாழ்க்கையாவது...துணையாவது...

இந்த வயிற்றை எத்தனை கரித்துக்கொட்டியிருப்பேன்... இன்று அது படும் பாடு...

அழுத்தம் கூடியது. பிரசவத்தின்போது முக்கியதைப்போல் முக்கினேன்... அப்பாடா...

மேலும் பத்து நிமிடம் அங்கேயே உட்கார்ந்திருந்தேன். பல முறை பிளஷ் செய்தேன். மெதுவாக என் படுக்கைக்கு வந்தேன். காலை டூட்டியில் இருந்த மருத்துவர் வந்தவுடனேயே கேட்டார்.

“All cleared?”

“Yes, doctor”

“Feeling better?”

“Oh yes”

“Then you can go home”

சொல்லியபடியே அந்த மருத்துவர் செவிலிப்பெண்ணிடம் திரும்ப,

“One more cleared. Totally 17. Good”

I was just a number. அவர்களுக்கு அவர்கள் கவலை. என்னை வெளியேற்றியதில் அவர்களுக்கான இலக்கை அடைந்துவிட்டனர்.

கணவரை வரச்சொல்லி வீட்டிற்கு வந்து குளித்து படுக்கையில் விழுந்தவள் இரண்டு மணி நேரம் பொறுத்து எழுந்து உணவு அருந்த அமர்ந்தேன். மாமியிடம் சோற்றை குறைத்து காய்கறிகளை அதிகமாக வைக்கச்சொன்னேன். இரண்டு மாத ஓய்வில் வயிறு வைத்துவிடும்.

அப்பறம் குறைப்பது கடினம் என்று மறுபடியும் வேதாளம் முருங்கை மரம் ஏறியது.

CPA
AUSTRALIAN SOCIETY OF CPAs

PREMIERONE
where results matter!

இனிய
தமிழர் திருநாள்
வாழ்த்துகள்



# வணிகம் மேற்கொள்ளும் அன்பரா நீங்கள்?


அமிழ்தினும் இனிதான தமிழில் கதைப்போம்! வாருங்கள்!

## ஏன் நாங்கள்?

- பிணக்குகள் அற்ற கணக்கு மேலாண்மை !
- அனுபவம் கொண்ட பட்டய கணக்காளர்கள் !
- கரிசனம் கூடிய வரிக்கணக்கு தாக்கல் !
- லாப மேம்பாடு மற்றும் நிதி மேலாண்மை வழி காட்டல் !
- புது வணிகம் தொடங்க ஆலோசனை!
- 5 நட்சத்திர Google மதிப்பீடு!
- இன்னல் போக்கும் மின்னல் வேக சேவை
- நியாயமான கட்டணம்

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

P : 03 876 19022 / 0416 339 239 W : www.premierone.net.au E : resultsmatter@premierone.net.au





1300 853 081
srilankan.com
SriLankan Airlines
oneworld